# வாழ்வும் வழியும்



பொன். சௌரிராஜன்

# வாழ்வும் வழியும்

பேராசிரியர்: பொன். சௌரிராசன்

விற்பனை உரிமை:

பாரி நிலையம்

90, பிராட்வே, சென்னை-600 108.

முதல் பதிப்பு: 2007

தேனக வெளியீடு

## நூல் பற்றிய விவரங்கள்


| | |
|---|---|
| நூற் பெயர் | வாழ்வும் வழியும் |
| ஆசிரியர் | பேராசிரியர் பொன். சௌரிராசன் |
| தாள் | 11.6. கி.கிராம். |
| நூலின் அளவு | 18.5. செ.மீ. × 12.5 செ.மீ. |
| பக்கங்கள் | 96 |
| விற்பனை உரிமை | பாரி நிலையம்<br>90, பிராட்வே, சென்னை – 108. |
| கனிணி அச்சு | லதா கம்ப்யூட்டர் சென்னை–1. |
| அச்சிட்டோர் | மோனார்க் கிராபிக்ஸ், சென்னை. |

**விலை: 25.00**

# அணிந்துரை

**தமிழண்ணல்**
**டாக்டர் இராம. பெரிய கருப்பன்**
தமிழியல் துறைத் தலைவர்
மதுரை காமராசர் பல்கலைக் கழகம்.

இனிய நண்பர், பேராசிரியர் பொன். சௌரிராசன் அவர்களின் 'வாழ்வும் வழியும்' படிக்கும் பேறு பெற்றேன். அந்நூல், ஒரு சிறிது அவருடைய வாழ்வும் வழியுமாகவே இருக்கக் கண்டு வியந்தேன். வாழ்வில் பொதுவாக வாழ்வாங்கு வாழ, நடப்பியலாகச் சிந்திக்கும் மனம் இந்நூலில் காணப்படுகிறது. இலக்கியச் சிந்தனைகளும் அவ்வாறே அமைந்துள்ளன.

சிலம்பு காட்டும் வாழ்வியலில் கண்ணகி, மாதவி, கோவலன் மூவரையும் கொண்டு உரிமை வேட்கை தவறாத அன்புடைமை; விட்டுக் கொடுத்து வாழும் உரிமையுடைமை; எண்ணித் துணிந்து செயற்படும் பண்புடைமை ஆகிய மூன்றும் வேண்டுமென வற்புறுத்துகிறார். கண்ணகியின் அன்புடைமை உரிமை வேட்கையைக் கைக்கொள்ளாததால் இடர்ப்பட்டது; மாதவியின் உரிமையுடைமை விட்டுக் கொடுக்க மனமில்லாததால் வெதும்பியது. கோவலனின் எண்ணாமல் துணியும் பண்புடைமை அவனையும் அவனைச் சார்ந்தவர் களையும் பாழ்படுத்தியது. சிலப்பதிகாரத்தின் இப் புதிய முப்பொருளுண்மைகள் படிக்கச் சுவையாகவும் வாழ வழி காட்டுவனவாகவும் உள்ளன.

'தமிழ் இலக்கியத்தில் தேசியம்' என்ற கட்டுரை தமிழர்களுக்குத் தொன்றுதொட்டு, இமயம் முதல் குமரி வரையிலான ஒருமுகப்பார்வை இருந்து வந்தமையை பின்முகச் சான்றுகளால் நிறுவுகிறது.

தோட்டத்தைப் பார்த்து ஆசிரியர் சில வாழ்வியலுண்மை களை எடுத்து கூறுகிறார். சிறு கவிதையாகத் தக்க அச் செய்திகள் 'முள்ளும் மலரும்' கட்டுரையில் நறுமணத்தோடு மலர்கின்றன.

தெலுங்குக் கவியரசர் 'வேமனவும் ஔவையாரும்' சிறந்த ஒப்பியல் கட்டுரையாகும். நம் நீதி நூல் ஔவையார் போலவே வேமனவும் நீதிகளைச் சொல்வதில், வெளிப்படுத்துவதில் சிறந்து காணப்படுகிறார்.

'ஒருவருள் நால்வர்' என்ற மு.வ. அவர்களைப் பற்றிய கட்டுரை சிறந்த சிந்தனை விருந்து. விவாதத்திற்குரிய கருத்துக்கள் இதிலுள. ஆசிரியர்கள், மாணவர்கள் இதை அவசியம் படிக்க வேண்டும்; விவாதிக்க வேண்டும். மு.வ. அவர்களை மறுத்தும் பேசலாம். நடப்பியலோடு சிந்திப்பவர் கட்குத்தான் அதன் அருமை விளங்கும். 'வாழ்வும் வழியும்' என்ற நல் தலைப்புக்கு ஏற்ற சிறந்த கட்டுரை இது.

சைவம், வைணவம், கிறித்தவம் போன்ற பல சமயம் சார்ந்த பக்திச் சிந்தனைகளையும் இந்நூலுள் காண்கிறோம். பக்திப் பாடல்களைத் திறனாய்வு செய்யும் கட்டுரைகளும் இதன்கண் உள. ஆசிரியர், முனைவர் பொன். சௌரிராசனாரின் தெளிந்த நீரோடை போன்ற நடை நூலுக்கு அழகு செய்கிறது. பல்வேறு சிந்தனை மலர்கள் இதில் பூத்துக் குலுங்குகின்றன. அறிவும் அன்பும் ஆதரவும் கலந்த இச்சிந்தனைகள் கற்பாரை இன்பத்தில் திளைக்க வைப்பன; நல்வழிப்படுத்துவன எனலாம்.

மதுரை–20

**தமிழண்ணல்**

# பதிப்புரை

தமிழகத்தில் ஆறுமுக நாவலரின் மாணாக்கர்கள் என்றும், பாவேந்தர் பாரதிதாசனின் பரம்பரை என்றும் தங்களைப் பெருமையாகப் பேசிக்கொள்ளும் இலக்கிய பரம்பரை இருந்து வருகிறது. அதுபோன்று டாக்டர் மு.வ. அவர்களிடம் பயின்ற மாணவர்கள் தங்களைமு.வ. மாணவர்கள் என்று சொல்லிக் கொள்வதில் பெருமை அடைகிறார்கள்.

டாக்டர் பொன். சௌரிராசன் அவர்கள் டாக்டர் மு.வ. அவர்களின் சிறந்த மாணவர்களில் ஒருவர். அன்பும், அடக்கமும், அறிவுக்கூர்மையும், சிறந்த எழுத்தாற்றலும், உயர்ந்த பண்பு களும் நிறைந்தவர். டாக்டர் மு.வ. அவர்களின் பிள்ளையாக, மாணவராக விளங்கி, வாழ்க்கையில் படிப்படியாக உயர்ந்து, தற்போது திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக் கழகத்தில் பேராசிரியராய், தமிழ்த்துறைத் தலைவராய் உயர்வு பெற்றுள்ளார்கள்.

டாக்டர் சௌரிராசன் அவர்கள் பல நூல்கள் எழுதியுள்ளார்கள். புனைகதை, சிறுகதை, இலக்கியம், கவிதை எனப் பலதுறைகளில் அவை வெளிவந்துள்ளன. டாக்டர் சௌரிராசன் அவர்களின் தமிழ் நடை மு.வ. அவர்களின் நடை போன்றது. கருத்துக்கள் மு.வ. அவர்களின் கருத்துக்களை ஒத்தவை. அவர்களின் குணங்களும் பண்புகளும் மு.வ.வைப் போன்று உயர்ந்தவை.

டாக்டர் மு.வ. வும், டாக்டர் சௌரிராசனும் நானும் ஒன்றாக இருந்து பேசிமகிழும் வாய்ப்புப் பலமுறை எனக்கு நிகழ்ந்ததுண்டு. அப்போதெல்லாம் டாக்டர் மு.வ.விடம் சௌரி

அவர்களுக்கு இருந்த பக்தியையும், சௌரிராசன் அவர்களிடம் மு.வ. அவர்கள், தந்தையாய், ஆசானாய், வழிகாட்டியாய் நின்று காட்டிய அன்பையும் கண்டு நான் பலமுறை வியந்திருக்கிறேன்.

டாக்டர் மு.வ. அவர்களுடன் பழகி அவர்களின் நூல்களை வெளியிட்டது போன்றே, டாக்டர் மு.வ. வின் மாணவர்கள் பலரோடும் ஒரு குடும்பமாய்ப் பழகி அவர்களின் நூல்களை வெளியிடும் வாய்ப்புப் பாரி நிலையத்திற்கு கிடைத்திருக்கிறது.

டாக்டர் சௌரிராசன் அவர்களின் அனைத்து நூல்களும் பாரி நிலைய வாயிலாகவே வெளிவந்துள்ளன. 'வாழ்வும் வழியும்' என்ற இந்தச் சிறந்த ஆராய்ச்சி நூலையும் எங்கள் நிலைய வாயிலாகவே வெளியிடுகிறோம். நூலின் சிறப்பை எல்லாம் டாக்டர் தமிழண்ணல் தமது அணிந்துரையில் எடுத்துக் காட்டியுள்ளார்கள். என்னிடம் அன்பு கொண்டு தமது எல்லா நூல்களையும் எங்கள் பாரி நிலையம் வாயிலாகவே வெளியிட்டு வரும் டாக்டர் பொன். சௌரிராசன் அவர்களுக்கு எங்கள் நன்றி உரியது.

**க.அ. செல்லப்பன்**
பாரி நிலையம்

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | சிலம்பு கட்டும் வாழ்வியல் | 8 |
| 2. | கல்வியும் அறிவும் | 16 |
| 3. | தமிழ் இலக்கியத்தில் தேசியம் | 24 |
| 4. | முள்ளும் மலரும் | 41 |
| 5. | படியாய்க் கிடக்கும் பான்மை | 45 |
| 6. | மூன்று பார்வைகள் | 48 |
| 7. | தாயுமானவர் பாடலில் உருவக நலன் | 51 |
| 8. | செத்த நாயும் சித்தாந்தமும் | 58 |
| 9. | வேமனவும் ஔவையாரும் | 62 |
| 10. | குயிற்பாட்டில் வேதாந்தக் கருத்துக்கள் | 70 |
| 11. | ஒருவருள் நால்வர் அல்லது மு.வ. காட்டும் வாழ்க்கை நெறி | 76 |
| 12. | கிறித்துவக் கம்பர் கிருஷ்ண பிள்ளையின் கவியுள்ளம் | 82 |
| 13. | திருவுறக் பயந்தனள் திறங்கொள் கோசலை | 88 |
| 14. | மானிடவர்க்கு என்று பேச்சுப்படில் வாழகில்லேன் | 93 |

# 1. சிலம்பு காட்டும் வாழ்வியல்

**வே**ண்டேன் புகழ், வேண்டேன் செல்வம், என்று உலகைத் துறந்து உயிர் உய்வு நோக்கித் தவம் செய்யும் துறவிகளுள் ஒரு சிலர் உலகுறும் துயர்கண்டு, அருள் கொண்டு உலக நலம் நோக்கித் தம் துறவு நிலையிலிருந்து சிறிது தாழ்ந்து மானுட உய்விற்காக எண்ணி எண்ணிச் சில உண்மைகளைப் பற்பல இலக்கிய வடிவில் வெளியிடு கின்றனர். அப்போது அத்தகையார் எழுத்தாளர் ஆகின்றனர். அப்படியே, இந்தக் குடும்ப வாழ்வில், சமுதாயச் சிக்கலில் அகப்பட்டு உழலும் மனிதர்களுள் சிலர் மானுடம் உறும் துயர்கண்டு அன்புகொண்டு தம் தனிவாழ்வுச் சுழற்சியினின்று தம்மைச் சிறிது பிரித்துக் கொண்டு மேலே ஓரளவு உயர்ந்து சென்று அன்றாடம் அல்லலுறும் மானுடம் பற்றிச் சிலர் எண்ணுகின்றனர்; எழுதுகின்றனர். அப்போது அன்னார் எழுத்தாளராகின்றனர்.

இத்தகு இருவகை எழுத்தாளர்களுள் அரசு துறந்து குணவாயிற் கோட்டத்தில் இருந்த சேர இளவல் இளங்கோ அடிகள் முதல் வகையினரைச் சார்ந்தவர் ஆவர். அவர் இயற்றிய சிலப்பதிகாரத்தில் தம் வழி, தாம் படைத்த கதைமாந்தர் வழி, காட்டுவழி, நிகழ்ச்சி வழி மானுட வாழ்வியல் நெறிபல குறித்துச் செல்கின்றார். அக்குறிப்புகளுள் கதைமாந்தர் வழி அறியலாகும் வாழ்வியல் நெறி சிறப்பாகக் கருதத்தக்கது.

கதை மாந்தர்களைத் தலைமைப் பாத்திரம், துணைப்பாத்திரம், சிறுபாத்திரம், ஆண்பாத்திரம், பெண் பாத்திரம் எனப் பலவாறு வகுத்தும் தொகுத்தும் திறனாய்வாளர் கூறுவர். சிலம்பின் தலைமைப் பாத்திரமாக இளங்கோ அடிகளார் கண்ணகியையே கருதினார், என்பர் அரும்பத உரையாசிரியர். என்றாலும் கண்ணகி, கோவலன், மாதவி மூவருமே சிலம்பின் தலைமைப் பாத்திரங்கள் எனக் கொள்ளலாம்.

மூவரும் நல்லவர்கள். கண்ணகி நல்ல அழகி; பேரன்புடையவள், குடும்பப் பாங்கெல்லாம் கற்றவள். மதுரை மாநகரிலே மாதரி என்னும் இடைச்சி நீராடி நின்ற கண்ணகியின் கோலங்கண்டு 'செய்யாக் கோலமொடு' புனையா ஓவியமாக நிற்கும் கண்ணகியின் பேரழகினை வியந்து பாராட்டுகிறாள். கண்ணகியின் அழகு கலைமகள் அழகு என்றும், அவள் கற்பு அருந்ததியினும் மேம்பட்ட கற்பென்றும் அவளுடன் வாழும் பெண்கள் பாராட்டுகின்றனர்.

> "போதிலார் திருவினாள் புகழுடை வடிவென்றும்
> தீதிலா வடமீனின் திறமிவள் திறமென்றும்
> மாதரார் தொழுதேத்த வயங்கியப் பெருங்குணத்துக்
> காதலான்............................."

என்று அவள் பெருங்குணம் பெண்களாலேயே பேசப் பெறுகின்றது.

தன் புறவொழுக்கம் அறிந்திருந்தும் தன்னைப் புறம்பாக நீக்காமல், மணந்த ஞான்று கொண்ட அன்பும் பண்பும் குறையாமல் அடக்கத்தோடும் அருளோடும் பழகி வரும் கண்ணகி கற்பு எளிவந்த கற்பன்று; அது பெருங்கற்பு என்று கோவலனே குறிப்பாகக் கூறிப் பெருமைப்படுத்து கிறான். கானல்வரியில் தான் பாடும் ஆற்றுவரிப் பாடல்களில், 'சோழன், காவிரியின் கணவன்; கங்கையையும் புணர்ந்தான்; வென்றான்; தன்னோடு சேர்த்துக் கொண்டான்; என்றாலும் காவிரி அவனோடு வேறுபாடு கொண்டு அவனை வெறுத்து விடவில்லை. அன்போடு ஏற்று, அருளோடு வாழ்கிறாள். அஃது அன்றோ பெருங்கற்பு' என்று ஆற்றினைப் பாடுவது போலத் தன் அகநிலையை, கண்ணகியின் நினைவினை மாதவிக்காகப் பாடும் கானல்வரிப் பாடல்களில் குறிப்பிடு கிறான்.

> "திங்கள் மாலை வெண்குடையான்
> சென்னி செங்கோல் அதுவோச்சிக்
> கங்கை தன்னைப் புணர்ந்தாலும்
> புலவாய் வாழி காவேரி!

*கங்கை தன்னைப் புணர்ந்தாலும்*
*புலவாது ஒழிதல் கயல்கண்ணாய்*
*மங்கை மாதர் பெருங்கற்பென்*
*றறிந்தேன் வாழி காவேரி"*

என்று கொண்ட கொழுநன் கோவலனாலேயே பாராட்டப் பெறுகிறாள்.

'அருகனன்றி வேறு எப்பெருமகனையும் என் கண் காணா; என் செவி கேளா; என் நா பேசா; என்னும் உறுதி யுடைய தவச்சீலி கவுந்தியடிகளும் கண்ணகியின் கற்பின் பெற்பு கண்டு, 'மாதவி, என்னோடு வந்துள்ள இந்நங்கை செல்வப் பெருங்குடியில் தோன்றியவள். இவள் பாதம் இதுவரை மண்ணில் பட்டில; என்றாலும் கணவன் கோவலனுக்காகக் கல்லிலும் முள்ளிலும், கடும் வெய்யிலிலும் துணையாக வந்து துயர்பல உற்றாள். என்றாலும் தன் துயருக்குச் சிறிதும் வருந்தாது, தன் துன்பத்தைச் சிறிதும் புலப்படுத்தாது தன் கணவனாகிய கோவலனுக்காக வருந்தி வருந்தி வாடிப் போனாள். இவளைக் கற்புக்குத் தெய்வமாகக் காண்கிறேன். இத்தகைய பெண்களால்தான் நாட்டு வளமும் ஆட்சி நலமும் செழிக்கிறது என்று சான்றோர் கூறியிருக்கக் கூடும்' என்று கண்ணகி கற்பினைப் பலவாறு பாராட்டு கின்றார்.

*"என்னொடு போந்த இளங்கொடி நங்கைதன்*
*வண்ணச் சீறடி மண்மகள் அறிந்திலள்;*
*கடுங்கதிர் வெம்மையின் காதலி தனக்கு*
*நடுங்குதுயர் எய்தி நாப்புலர வாடித்*
*தன்துயர் காணாத் தகைசால் பூங்கொடி*
*இன்துணை மகளிர்க்கு இன்றி யமையாக்*
*கற்புக்கடம் பூண்ட இத்தெய்வ மல்லது*
*பொற்புடைத் தெய்வம் யாம்கண் டிலமால்"*

இவளது குடும்பநலன் பின்வருமாறு குறிப்பிடப் பெறுகிறது-

*"மெல்லிரல் சிவப்பபல்வேறு பசுங்காய்*
*கொடுவாய்க் குயத்து விடுவாய் செய்யத்*
*திருமுகம் வியர்த்தது செங்கண் செந்தன"*

இவ்வாறு கையறி மடமையின் காதலற்கு ஆக்கி அமுதம் உண்க அடிகள் என அழைத்து அன்போடு அருகிருந்து உணவிடும் குடும்பப் பாங்கும் அவள்பால் அமைந்திருக்கக் காண்கிறோம்.

இன்னும் தன் வாழ்வுக்குக் குறுக்கீடாக அமைந்து தன் வாழ்வு குலையக் காரணமாக இருந்த மாதவியைப் பற்றியும் கூட குறை ஒன்றும் கூறாத குணக்கொடியாக விளங்குகிறாள் கண்ணகி. பின்வரும் காவல் பெண்டுவின் அவலப் பாடல் அதனை உணர்த்தும்.

*"மடம்பரு சாயலாள் மாதவி தன்னைக்*
*கடம்படாள் காதல் கணவன் கைப்பற்றிக்*
*குடம்புக்காக் கூவல் கொடுங்கானம் போந்த*
*தடம்பெருங் கண்ணிக்குத் தாயர்தான் கண்டீர்*
*தண்புகார்ப் பாவைக்குத் தாயர்தான் கண்டீர்"*

இவ்வளவு இருந்தும் கண்ணகியின் இல்லறவாழ்வு வெற்றிபெறவில்லை, ஏன்?

கோவலனும் நல்லவனே; அவன் நற்குணங்களை யெல்லாம் ஒன்று திரட்டி மாடல மறையவன் மதுரைக் காண்டத்தில் அடைக்கலக்காதையில் பலவாறு பாராட்டிப் பகர்கிறான். மாதவி மகளுக்குப் பெயரிடு நாள், என்ன பெயர் இடுவது என்று எல்லோரும் எண்ணுகின்றனர். அப்போது கோவலன் மணிமேகலா தெய்வத்தை நினைவு கூர்கிறான். தன் முன்னோர்க்கு அது உதவியதனை நினைவு கூர்கிறான். அத்தெய்வத் திருப்பெயரையே இட்டு நன்றியுடையனாகிறான்.

அப்படியே அந்த விழாவைக் கண்டு பரிசு பெறவந்த அந்தணனுக்குப் பின்வருமாறு உதவுகிறான்.

*"வளைந்த யாக்கை மறையோன் தன்னைப்*
*பாகு கழிந்து யாங்கணும் பறைபட வரூஉம்*
*வேக யானை வெம்மையின் கைக்கொள்*
*ஒய்யென ஒழித்தாங்கு உயர்பிறப் பாளனைக்*
*கையகத்து ஒழித்து அதன் கையகம் புக்கு...*
*கடக்களிறு அடக்கிய கருணை மறவ!"*

மறையவன் நினைவில் இன்னொரு நிகழ்ச்சியும் தோன்றுகிறது.

அந்தணன் மனைவி ஒருத்தி தன்பிள்ளையைக் கொன்றதாகத் தவறாகக் கருதி தான் வளர்த்த கீரிப் பிள்ளையைக் குடத்தால் அடித்துக் கொன்றுவிடுகிறாள். அதனால் வருந்திய அந்த அந்தணன் அவளுடன் வாழ மறுத்துக் காசிக்கு ஏகுகின்றான். அவள் பாவம்தீரப் பிராயச் சித்தமும் கூறிச் செல்கிறான். அந்த அந்தணப்பெண் தன் வாழ்வில் நேர்ந்த இந்தத் துயரை அனைவரிடமும் கூறித் துன்பம் நீக்கித் தங்களைக் காத்தருள வேண்டுகிறாள். கோவலன் ஒருவனே அவர்கள்தம் பாவத்திற்குரிய பிராயச்சித்தங்களைச் செய்து அவர்கள் இருவரும் மீண்டும் வாழத் துணைசெய்கிறான்.

*"தீத்திறம் புரிந்தோள் செய்துயர் நீங்கத்*
*தானம் செய்தவள் தன்துயர் நீக்கிக்*
*கானம் போன கணவனைக் கூட்டி*
*ஒல்காச் செல்வத்து உறுபொருள் கொடுத்து*
*நல்வழிப் படுத்த செல்லாச் செல்வ"*

எனப் பாராட்டுவன் மாடல மறைவன்.

இப்படியே நல்லவள் ஒருத்தி பற்றிப் பழிகூறிய இளைஞன் ஒருவனைச் சதுக்கப் பூதம் புடைத்துண்ணப் போம்போது அவனைத் தவிர வேறு மகவு இல்லாத அந்தத் தாய் கதறி அழக்கண்டு பொறாதவனாகி அந்தச் சதுக்கப் பூதத்திடம் சென்று அந்த இளைஞனுக்காகத் தன்னுயிர் தரக் கோவலன் முன் வருகிறான். அதனை அந்தப் பூதம் மறுத்து விடவே அந்தத் தாயின் வாழ்விற்கு வேண்டிய செல்வமெல்லாம் தந்து அவளைக் காப்பாற்றி வருகிறான்.

*"அழிதரும் உள்ளத்து அவளொடும் போந்தவள்*
*சுற்றத் தோர்க்கும் தொடர்புறு கிளைகட்கும்*
*பற்றிய இளைஞரில் பசிப்பிணி அறுத்துப்*
*பல்லாண்டு புரிந்த இல்லோர் செல்மல்"*

இவ்வாறு நன்றிமறவாத கருணைமறவனாய், ஞானம் நிறைந்த செல்லாச் செல்வனாய், அருள்சுரக்கும் இல்லோர் செம்மலாய் வாழ்ந்த நல்லவன் கோவலன். ஆனாலும் அவன் இல்வாழ்வு இன்ப வாழ்வாக அமையவில்லை. ஏன்?

மாதவியும் நல்லவள்; பேரழகி; ஆடலும் பாடலும் அழகும் ஒருசேர அமையப் பெற்றவள். இமையத்துக்கும் அப்பால் வாழும் விஞ்சையரும் அவள் நாட்டியச் சிறப்பு கேட்டு இந்திர விழாவின்போது வந்துகாண்கின்ற அளவு அவள் கலைத்திறன் அன்று உலகறியப்பட்ட ஆற்றல் வாய்ந்ததாய் அமைந்திருந்தது. கோவலனுக்காகவே அவள் வாழ்கிறாள்; கோவலன் பிரிவைத் தாங்க இயலாது வருந்து கிறாள். அவன் கொலைக்களப்பட்ட செய்தி அறிந்ததும் துறவி ஆகிறாள். தன் மகள் மணிமேகலையையும் துறவி ஆக்கி விடுகிறாள். சேற்றில் மலர்ந்த இந்தச் செந்தாமரையும் மலர்ந்து மணங்கமழ இயலவில்லை. ஏன்?

இப்படி வினாவொன்றை நம்முன் எழுப்பி விடை காணும்முகத்தான் இளங்கோ அடிகளார் வாழ்வின் நுட்பத்தை நமக்கு உணர்த்துகிறார்; வாழ்வியல் நெறியினை நமக்குப் புலப்படுத்துகிறார்.

எல்லா நலங்களும் பொருந்திய கண்ணகி கோவலன் திருந்தி வரட்டும் என்று காத்திருக்கிறாள்; திருத்த வேண்டும் என்று துவக்கத்தில் கருதாது போய்விடுகிறாள்.

*"மாசறு பொன்னே! வலம்புரி முத்தே*
*காசறு விரையே கரும்பே தேனே; என*
*உலவாக் கட்டுரை பல பாராட்டி........"*

தன்னோடு தருக்கோடு வாழ்ந்துவந்த கோவலனின் ஆராக்காதல் உணர்ந்து அவனுக்கு உதவித் திருத்தியிருத்தல் வேண்டும். அங்கு அவள் தவறி விடுகிறாள். இப்படி அவள்

செய்யாத இந்தச் செயலினை, அவன் போக்கிற்கு அவனை விட்டுவிட்டக் குறையினை "எழுகென எழுந்தாய் என் செய்தனை" என ஏக்கத்தோடு இரக்கத்தோடு கொலைக்களக் காதையில் சுட்டிக் காட்டுகிறான் கோவலன்.

இப்படியே கோவலனிடமும் ஒரு பெருங்குறை உண்டு. எதைச் செய்வதென்றறியாது எண்ணி எண்ணியே செயலற்ற வனானான் - ஆம்லெட் என்பர் சேக்ஸ்பியர் படிப்பவர்கள். 'to be or not to be' என்பதே அவன் இயல்பு. கோவலனோ, அதற்கு மாறாக எதனையும் எண்ணாமல் விரைந்து செய்துவிட்டு கழிவிரக்கம் கொள்வான்.

இவனே சென்று மாதவியிடம் பழகுகிறான். ஆனால்

*'சலம்புணர் கொள்கைச் சலதியோ டாடிக்*
*குலந்தரும் வான்பொருள் குன்றம் தொலைத்தேன்'*

என்று மாதவியைக் குறை கூறுகிறான்.

அப்படியே கண்ணகியையும் 'எழு' என்றவுடன் நீ ஏன் என்னுடன் மதுரைக்கு வந்தாய்? தடுத்து நிறுத்தியிருக்கக் கூடாதா? அல்லது நீயாவது வாராதிருக்கக் கூடாதா?' என்று எல்லாம் கூறுகிறான். ஆனால் இறுதியில் 'தன் தீதிலள் என் தீதே' என மாதவியை நினைந்து உண்மையை உணர்கிறான். இப்படிச் செயத்தக்கதை எண்ணிச் செய்யாது, செயத் தகாததை விரைந்து செய்து தானும் வருந்தி பிறரையும் வருத்துகிறான் கோவலன்.

மாதவியின் நலங்களை எல்லாம் பார்த்தோம். என்றாலும் அவள்பால் இருந்தகுறை பெருங்குறை தான் முழுவதுமாக கோவலனைக் காதலித்தாலும் அவன் குறை பொறுக்காமல் தானும் ஒருவனைக் காதலிப்பது போல் தன் உரிமையை நிலைநாட்ட எண்ணி அன்று பூம்புகார்க் கடற்கரையில் பாடியதே ஆகும்.

'ஏ அடும்புகளே! அன்னங்களே! நம்மை நாள்தோறும் வந்து சென்று காதலின்பம் அளித்துச் சென்ற நம் தலைவர் இப்போது மறந்துவிட்டாரே! என்றாலும் நம்மால் அவரை

மறக்க முடியவில்லையே' என்று யாரோ பிறிதொருவனிடம் தான் தொடர்பு கொண்டுள்ளதைப் போன்று மாதவி பாடிய கானல்வரிப் பாடல்களே அவளுக்குக் கேடாக முடிந்தன.

*"தம்முடைய தண்ணளியும் தாமும்தம் மான்தேரும்*
*எம்மை நினையாது விட்டாரோ விட்டகல்க*
*அம்மென் இணர அடும்புகாள் அன்னங்காள்*
*நம்மை மறந்தாரை நாம்மறக்க மாட்டேமால்"*

மொத்தமாக நோக்கும்போது கற்பு கற்பு என்றே காவலன் கோவலன் குறை உணர்ந்து அவனுக்கு ஈடு கொடுத்து உரிய இடத்தில் தன் உரிமையை நிலை நாட்டாமல் முழுக்க முழுக்க அடங்கியே வாழ்ந்து விட்டாள் கண்ணகி. அதற்கு மாறாக கலை கலை என்றே கோவலனின் மனநிலை உணர்ந்து அதற்கு ஏற்ப இயைந்து ஒத்துப்போகாமல் எதிலும் உரிமைக்குப் போராடி வாழாது போனாள் மாதவி; அப்படியே காதல் காதல் என்று தன் இன்பம் ஒன்றையே நினைந்து கண்ணகி கற்பினையும், மாதவி கலையினையும் உணரத் தவறியதோடு எண்ணித்துணியாது எதையும் விரைந்து செய்து கெட்டான் கோவலன். இதனால் நல்லோனாய் இருந்தும் வல்லானாய் இருந்தும் வாழாது போயினான்.

அடிமைத்திறம் பூண்டல் நன்றே; உரிமைவேட்கை தீதன்று; எழுச்சி வேண்டுவதே. ஆயினும் எங்கும் எப்போதும் எதனையும் ஏற்றுப் பின்பற்றல் வாழ்விற்கு கந்தது அன்று; விட்டுக்கொடுக்க வேண்டிய உளநிலை உணராது தன் உரிமையை நிலைநாட்ட விழைவது வாழ்க்கை சிதறிப்போகக் காரணமாகிறது; எண்ணித் துணியாது எதனையும் விரைந்து மேற்கொள்வது கழிவிரக்கத்திற்கு ஒருவரை ஆளாக்கி விடுகிறது. இம்மூன்றனையும் முறையே கண்ணகி, மாதவி, கோவலன் ஆகிய மூவர்வழி இளங்கோ அடிகளார் மல்லல் மா ஞாலத்து மக்களுக்கு உணர்த்தி அன்புடைமை, அறிவு உரிமை, எண்ணிச் செய்தல் ஆகிய மூன்றும் ஒன்றுக்கு ஒன்று மிஞ்சாது இயைந்து அமையும் வாழ்வே வெற்றி வாழ்வாக அமையும் எனத் தெளிவுறுத்துகிறார்.

# 2. கல்வியும் அறிவும்

மண்ணுக்குள் ஊற்று இருக்கிறது; தோண்டினால் பீறிட்டு எழுகிறது. மணிக்குள் ஒளி இருக்கிறது; பட்டை தீட்டினால் வீறிட்டு வீசுகிறது. அப்படியே ஒவ்வொரு குழந்தையிடமும் அறிவு உள்ளது. அதைப் பட்டைத் தீட்ட வேண்டும்; தோண்டித்துலங்கச் செய்ய வேண்டும். அதாவது கல்லுதல் வேண்டும். கல்வி தருதல் வேண்டும்.

காட்டுச் செடி கண்டபடி மண்டி வளர்கிறது. அவற்றைப் பூங்காக்களிலும் வளர்க்கிறார்கள்; அவ்வப்போது கத்தரித்துக் கத்தரித்து நெறிப்படுத்துகிறார்கள். அதனால் அவை வேறு மரஞ்செடி கொடிகளுக்கு இடையே அவற்றின் இடத்தைப் பறித்துக் கொள்ளாமல் ஒன்றுக் கொன்று உரிய தூரத்தில் ஒழுங்காக வளர்ந்து பூங்காவிற்கு அழகு தருகின்றன; தாமும் அழகு பெறுகின்றன; காண்பார்க்கும் இன்பம் பயக்கின்றன.

அவ்வாறு கல்லுதலும், கத்தரித்தலும் மானிட வாழ்வின் பண்பிற்கும் பயனுக்கும் துணை செய்கின்றன. இவ்விரண்டும் கூடிய போதே கல்வி நிறைவுறுகிறது. அதாவது அமைதி பெறுகிறது. இந்தக் 'கல்வி அமைதி' அனுமன்பால் அமைந்து விளங்குகிறது. (அனுமப் படலம் - 17).

அஞ்ஞானத்தை அறுத்து நன்றிது தீதிது என அறிந்து அல்லது நீக்கி நல்லதன் நெறி நிறுத்தும் இப்பயிற்சி தருதற்கு நல்லாசிரியர் வேண்டும். அனுமனுக்கு அத்தகு ஆசிரியர் ஒருவர் வாய்த்தார். அவரே சூரிய பகவான். உலகிருள் ஓட்டும் அக்கதிரோன் அனுமனின் உள்ளத்திருளையும் ஓட்டியருளினார். "கதிரோன் சொல்ல படித்தவன்" என்ற தொடரால் கம்பர் இதனைக் குறிப்பர். (அனுமப் படலம்-3-1).

சூரியன் ஓய்வின்றிச் சுற்றுவோன் ஆயிற்றே? அவன் பால் அனுமன் எப்படி இருந்து கற்றிருக்க முடியும்? என்ற ஐயம் எழலாம். முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார். விடா முயற்சியுடைய அனுமன் கதிரவன் செல்லுமிடமெல்லாம் தானும் தொடர்ந்து சென்று கொண்டே கல்வி கற்றானாம். இதனைப்

*"பாருல கெங்கும் பேரிருள் சிக்கும் பகலோன் முன்
தேர்முன் நடந்தே... தெரிவுற்றீர்".*

**(மயேந்திரப் படலம் - 14)**

என்ற சாம்பவான் மொழியிலிருந்து தெரியலாம். கதிரவன் உடனே தானும் சென்றதால் கல்வி கற்ற காலம் வரை அனுமன் இராப் போதைக் கண்டறியான் என்பது பெறப் படுகிறது. அதாவது இராப்பகல் என்ற வேறுபாடின்றி நாளெல்லாம் கற்றான் என்ற குறிப்பும், நகரங்கடந்து, நாடு கடந்து உலகெலாம் சென்று கருத்து சேர்த்தான் என்ற குறிப்பும் இத்தொடர்களில் கம்பன் அமைத்திருப்பதாகவும் தோன்றுகிறது.

இவ்வாறு கதிரோன் தேர்முன் நடந்து நாள் முழுதும் அனுமன் கற்றது தான் என்ன? கண்டதை யெல்லாம் கற்றானா? கழிவையும் இழிவையும் கற்றானா? குளிக்கப் போய்ச் சேற்றைப் பூசிக்கொள்பவர்களும் உண்டு. அந்த வகையைச் சேர்ந்தவனா அனுமன்? கற்க வேண்டுவனவோ எண்ணற்றன! எல்லையற்றன. கற்பவர் வாழ்நாளோ சில: பிணி, மூப்பு, சாக்காடு முதலான கேடு பலவற்றுக்கு உட்பட்டன. எனவே இவற்றையெல்லாம் எண்ணியே அனுமன் கற்றான்; அழியாக் கல்வி கற்றான்; வேதம் கற்றான். வேதாந்தம் கற்றான்; உயர்ந்த நூல், உள்ளத்தை உயர்த்தும் நூல் அனைத்தும் கற்றான். அவன் கற்ற நூல்களை, 'பண்டை நூல்' (3782) 'ஆரிய நூல்' (4724) 'மறை எலாம்' (4725) என்று ஆங்காங்கே கம்பர் தம் கதை மாந்தர்கள் வாயிலாய்க் குறிப்பிட்டுச் செல்கிறார்.

அனுமன் கற்றான்; கற்பவை கற்றான்; கசடறவும் கற்றான்; முழுமையும் கற்றான். 'செவி வாயாக நெஞ்சு களனாக' அமிழ்தமருந்தும் ஆர்வத்தோடு கல்வி கற்க வேண்டும் என்பர் பவணந்தி முனிவர். அனுமனும் அப்படியே ஆர்வத்தோடு நுணுகி நோக்கிக் கற்றான். அவன் கல்வித் திறத்தைக் கண்டறிந்த சாம்பவான்.

*"நூலை நயந்து நுண்ணிதின் உணர்ந்தீர்"*

**(மயேந்திரப் படலம் - 7)**

என்று போற்றுகின்றான். ஆழ்ந்து கற்றதை நுண்ணிதின் உணர்ந்தீர்' என்ற தொடரால் சுட்டிய சாம்பவான் ஆசிரியர்

பால் அனுமன் அணுகிக் கற்றதை 'ஓதி உணர்ந்தீர்' என்ற தொடரால் குறிக்கின்றான்.

கற்றபின் அதன்வழி நிற்கும் கல்வி அமைதியையும் நிறைவையும் காட்டுகின்ற நிகழ்ச்சி பல ஆங்காங்கே அமைந்துள்ளன. நுணங்கிக் கேட்ட அனுமனது கல்விச் சிறப்பு பின்வரும் அனுமனின் வணங்கிய வாய்ச் சொற்கள் மூலம் தெளிவாகின்றது. 'நீ யார்?' என்ற இராமபிரான் கேள்விக்கு 'ஏவல் செய்வான்', 'அஞ்சனை வயிற்றில் வந்தேன்' என்று கூறுகின்றான். இராம இலக்குவணரைச் சுக்ரீவற்கு அறிமுகப்படுத்துவது எதனைச் சொல்லி என அறிய விரும்பியபோது அன்னாரை நோக்கி அனுமன்,

*"யாரென விளம்புகேன் நான் எம்குலத் தலைவற்*
*கும்மை, வீரநீர் பணித்தீர்..."*

**(அனுமப் படலம் - 25)**

எனவும் வினயத்திலும் அவன் கல்வி அமைதி புலப்படு கின்றது. இச் சொற்கள் இராமனது நெஞ்சிலும் 'பெரும் பொறை அறிவினோன்' அனுமன் என்ற உண்மையைத் தோற்றுவித்து விடுகின்றன.

இராவணனை விடுத்து இராமன்பால் வந்த வீடணன் "கைப்புகற் பாலனோ? கழியற் பாலனோ" என ஒப்புற நோக்கி உரைக்குமாறு அனைவரையும் கேட்கின்றார் இராமபிரான். 'மாற்றவன் தம்பி, இரக்கமில் அரக்கன், நஞ்சினில் கொடியன்' என்றெல்லாம் வீடணனைப் பற்றி கூறி அவனை ஏற்க வேண்டாம் என்பன் சுக்ரீவன், 'சிற்றினத்தவன், பாதகன், மான் என வந்த மாரீசனது வருகை போன்றதே இந்த வீடணன் வருகையும். எனவே, கழிக்கற் பாலன், இவன்' என்று அறிவுரை கூறினன் சாம்பவான். தானை நாயகனாகிய நீலனோ, 'காலம் கற்ற நூல்களின் மூலம், அண்ணனை முனிந்து வந்த வீடணனின் சீலம் இவற்றை யெல்லாம் நோக்கின் ஏற்கத் தக்கவன் அல்லன் வீடணன்' என மேற்கோள் காட்டினன். மற்ற மந்திரக்கிழவர் அனைவரும், 'பற்றுதல் பழுது' என ஒரு பெற்றியாய்க் கூறினர். இத்துணையோர் போல் அல்லாது இலங்கைக்குச் சென்று வீடணனைப் பற்றி நன்கு அறிந்திருந்த அனுமனோ அடக்கமாக, அமைதியாக வாய்ப்பு நோக்கி இறுதிவரை பொறுமையாகக் காத்திருந்தனன். இவ்வாறு ஒன்றும் கூறாது நிற்கும் அனுமனை நோக்கி,

*"உறுபொருள் யாவரும் ஒன்றக்கூறினார்*
*றெறிபெருங் கேள்வியாய்! கருத்தென செப்பு..."*

**(வீடணன் அடைக்கலப் படலம் - 82)**

என்று குறிப்பாகக் கேட்டனர் சக்கரவர்த்தித் திருமகனார். அதற்கு விடை கூறத் துவங்கிய அனுமன் நின்ற காட்சியை

*"வணங்கிய சென்னியன், மறைத்த வாயினன்*
*நுணங்கிய கேள்வியன், நுவல்வ தாயினான்"*

என்று சொல்லோவியமாக்கிக் காட்டுகின்றார் கம்பர், எண்ணற்ற ஏதுக்களைக்காட்டி,

*"ஆதலால், இவன் வரவு நல்வரவே*
*எனவுணர்ந்தேன் அடியேன்; உன்தன்*
*வேதநூல் எனத்தகைய திருவுளத்தின்*
*குறிப்பறியேன் என்று"*

**- (வீடணன் அடைக்கலப் படலம் - 102)**

கூறி முடிவை இராமனுக்கே விட்டு விடுகின்றான் அனுமன்.

இதனினும் அனுமனது 'கல்வி அமைதியை' பளிச்சென எடுத்துக்காட்டும் நிகழ்ச்சி ஒன்று சுந்தர காண்டத்தின் இறுதியில் நிகழ்கிறது. அக்காண்டத்தை நிகழ்த்திச் செல்லும் அனுமன் ஆற்றலையும், அன்பையும் அறிவையும் ஏறக்குறைய ஆயிரத்து முந்நூறு பாடல்களில் அமைத்துக் காட்டுகின்றார் கம்பர். இவ்வாறு அக்காண்டக் கதாநாயகனாகத் திகழும் கவிக்கு (குரங்குக்கு) நாயகனாகிய அனுமன் இலங்கையுள் செயற்கரிய செயல் பல செய்து சேதுக்கரையில் காத்திருக்கும் தன் இனத்தாரை வந்தடைகின்றான். அனுமனைக் கண்ட வானரவீரர் அனைவரும் "சென்றது முதலா வந்தது இறுதியாக" அங்கு நிகழ்ந்தன எல்லாம் கூறுமாறு அனுமனை வேண்டுகின்றனர். 'சுருதி நாயகன் வரும் வரும் என்று மாதிரம்

அனைத்தையும் அளிக்கும் கண்ணளாகிய சீதாபிராட்டியின் அருந்தவத்தைப் பாரித்துப் பாராட்டிப் பேசி, அவள் பால் தான் பெற்ற சூடாமணி குறித்துச் சிறப்பாக எடுத்தியம்பும் அனுமன் அங்குத் தன் ஆற்றல் புலப்பட, அறிவு தோன்ற, அன்பு துலங்க இயற்றிய போர்கள் குறித்தோ, செயல்கள் குறித்தோ, பேச்சு குறித்தோ எதுவும் சொன்னான் அல்லன். ஏன்? கம்பரே விடை கூறுகின்றார் 'தன் வென்றியைக் கூற வெள்கினன்'. வெட்கப்பட்டான் என்று, சிறுமை தன்னைப் பற்றித் தானே பெருமை படுத்திக் கொள்ளும். பெருமையோ தன் சிறப்பைத் தான் கூறாமையோடு பிறர் கூறக் கேட்கவும் நாணும். அத்தகு பெரியோன் அனுமன். அதற்குக் காரணம் அவனது ஆழ்ந்து அகன்று நுண்ணிய கல்வி அமைதியேயாம். அந்த அருமையான பாடல் இதுதான்.

*"ஆண்தகை தேவி உள்ளத்து*
*அருந்தவம் அமையச் சொல்லி*
*பூண்டபேர் அடையா ளம்கைக்*
*கொண்டதும் புகன்று போரில்*
*நீண்டவாள் அரக்க ரோடு*
*நிகழ்ந்ததும் நெருப்புச் சிந்தி*
*மீண்டதும், விளம்பான் – தான்தன்*
*வென்றியை உரைப்ப வெள்கி".*

**(திருவடி தொழுத படலம் - 9)**

தன்னையே எண்ணி இறுமாப்பது அகந்தை; அஞ்ஞானம். பிறரையே நினைந்து உதவுவது அருள். அந்த அருளுக்குத் துணையாவதே அறிவின் பயன்.

*'அறிவினான் ஆகுவ துண்டோ பிறிதின் நோய்*
*தந்நோய்போல் போற்றாக் கடை.'* *(குறள்–315)*

என்பர் பொய்யாமொழியார்.

உருசியமுக பருவதம் நோக்கி வந்து கொண்டிருக்கும் இராம இலக்குவரைக் காண்கின்றனர் சுக்ரீவனும் அனுமனும். அன்னார் வாலி அனுப்பிய பகைவர் என எண்ணி ஓடி ஒளிகின்றான் சுக்ரீவன். "அனும! இவரைப் பார். வாலி ஏவலால் வருகின்றனர்; வில்லேந்தி உள்ளனர்; நீல மலைபோல் நிமிர்ந்துள்ளனர்" என்று கூறித் திரும்பிப் பாராது ஓடுகின்றான்.

அனுமனோ அமைதியாக அன்னாரை நோக்கி, 'இவரோ நொந்துபோய் உள்ளனர்; எதனையோ இழந்து எண்ணி எண்ணி ஏங்குவதுபோல் தோன்றுகின்றனர். அறத்தின் இருப்பிடம், 'அருளின் பிறப்பிடம்; அழகின் வடிவினர்' இப்படிப் பலவாறு கண்டு, 'பிறவிப் பிணியிலிருந்து மானுடத்தைக் கரையேற்றத் தோன்றிய தெய்வங்களோ இவர்? என் நெஞ்சும் உருகுகின்றதே; அன்பு பெருகுகின்றதே' என்று நெக்கு உருகுகின்றான் அனுமன்.

*'துன்பினைத் துடைத்து மாயத் தொல்வினை தன்னை நீக்கித்*
*தென்புலத் தன்றிமீளா நெறியுய்க்கும் தேவரோதாம்?*
*என்பு நெக்குருகு கின்றது; இவர்கின் றதளவில் காதல்*
*அன்பினுக் கவதி இல்லை;.......................'*

கண், செவி, மூக்கு முதலிய பொறிகள் காட்டும் புலக் காட்சிகளைக் கடந்து பொருள் ஒவ்வொன்றன் மெய்த் தன்மையைக் கண்டறிவது அறிவின் இயல்பாகும். இராம பிரானைக் காணும் அனுமன் கண்கள் அவருடைய கண்களை நேருக்குநேர் சந்திக்கின்றன. அந்த எழிலார்ந்த, இனிய, குளிர்ந்த, அகண்ட, பெரிய செந்தாமரைக் கண்ணழகிலே ஆழங்கால்பட்ட அனுமன், அன்பர்க்கு உயிர்வளர்க்கும் அமிழ்தமாய், வன்பர்க்கு வாழ்வொழிக்கும் நஞ்சாய் அது திகழ்வதன் மெய்த் தன்மையை கண்டு கொண்டு பின்வருமாறு இராமபிரானை அழைக்கின்றான்.

*"........மகளிர்க்கு எல்லாம்*
*நஞ்செனத் தகைய ஆகிநளிர் இடம் பனிக்குத் தேம்பாக்*
*கஞ்சம் ஒத்தலர்ந்த செய்ய கண்ண....."*

அறிவுடையார் ஆவது அறிவார். அறிவிலார் நிகழ் காலத்தைச் சரிவர நிகழ்த்தவே தடுமாறுவர். அறிவு வாயந்த சான்றோர்களோ எதிர்காலத்தையும் நிகழ் காலத்தில் நின்றே கண்டு செயலாற்றவல்லவர் ஆவர்.

இராமன் வருகையின் பயனை அனுமன் சென்று சுக்ரீவனுக்கு உரைக்கின்றான். "சுக்ரீவரே! இராமாவ தாரத்தால் யான் உய்ந்தேன்; என் குலம் உய்ந்தது; இந்தக் குவலயம் எல்லாம் விடுதலை பெற்றது. நீயும் உய்ந்தாய். ஏனெனில் வந்தவர் வாலியின் உயிர் எடுக்கும் காலர் ஆவர்" என்று, அண்மையில் சுக்ரீவருக்கு நலமாய் அமையப் போகும் வாலிவதையாகிய நல் எதிர்காலத்தையும், அதன்பின் அகிலமெலாம் தொடர்ந்து அடையப் போகும் பெரும் பயனையும் தன் அறிவுக் கண்களால் கண்டு அனுமன் உரைக்கின்றான்.

*"'யானும் என் குலமும், இவ் உலகும் உய்ந்தனம்' எனா*
*மானவன் குணமெலாம் நினையும் மா மதியினான்"*

**(கம். 3787)**

*"வாலி என்ற அளவிலா வலியினான் உயிர்தெறக்*
*காலன் வந்தனன்; இடர்க்கடல் கடந்தனம்"*

**(கம். 3788)**

இலங்கை மாநகர் சென்று சிறையிருக்கும் செல்வியைத் தேடலுற்ற அனுமன், அரக்கர் பலரைக் கண்டு உறங்கும் வீடணனையும் காண்கின்றான். அவனை அனுமன் பிரித்து உணர்கின்றான்.

*'உற்று நின்று அவனுணர்வைத் தன்னுணர்*
*வினாலுணர்ந்தான்*
*குற்றம் இல்லது ஓர் குணத்தினன் இவன்'*

என்று தெளிவுறுகின்றான்.

*இராவணன் தேவி மண்டோதரி மயன் மகள்; தெய்வ மகள் ஆயினமையின், சீதைபோல் தோன்றுகிறாள். 'அன்னள் ஆகிய சானகி இவள்' என அனுமன் ஐயுறுகின்றான்.*

*'கற்பு நீங்கிய கனங்குழை இவளெனின்*
*காகுத்தன் புகழோடும்*
*பொற்பும் யானும் இவ்விலங்கையும் அரக்கரும்*
*பொன்றுதும் இன்று'*

*என்று சாகத் துணிகின்றான். பின் தன் அறிவால் தெளிந்து, 'இவள் சீதை அல்லள். இராமனைக் காதலித்த காரிகை ஒருத்தி வேறொரு ஆடவனை அறியார் என்று, இராமன் அழகில் ஈடுபட்டு, சீதைக்கு உரிய இலக்கணங்களாக இராமபிரான் கூறியன சில இவளிடமும் உள்ளன எனினும், விரைவில் அழியப்போகும் குறிப்புடையது இவள் யாக்கை' என்று துணிகின்றான்.*

*சுக்ரீவரை வந்தடைந்த இராம இலக்குவர்க்கு வாலியால் சுக்ரீவன் உற்ற துயரெலாம் எடுத்துரைத்தனன். கேட்ட இராமபிரான்*

*"தலைமை யோடுநின் தாரமும் உனக்கு இன்று தருவென்."*

*என்று உறுதி கூறுகிறான். என்றாலும் வாலியின்பால் குத்தும் உதையும் உண்ட சுக்ரீவன், இராமபிரானால் வாலியைக் கொல்லக் கூடுமோ என்று ஐயுறுகின்றான். அவன் ஐயத்தைக் குறிப்பாக உணர்ந்துகொண்ட அனுமன், இராமபிரான் கையில் அமைந்து விளங்கும் சங்கு சக்கர அடையாளங்களை உரைத்து,அவனைத் தெளிவிக்கின்றான். 'அவன் திருமால் தான் என்பதற்கு இன்னும் ஏது உண்டு. அதற்கு என் அன்பே சான்று ஐய! என் என்பு நெக்குஉருகுகின்றதே உனக்குத் தெரியவில்லையா?' என்று வலியுறுத்தினன். இவையெல்லாம் சுக்ரீவன். அதனை அனுமன்பால் உரைக்க அவன் தயங்கினான். அதனைக் கண்டுகொண்டு பின்னர் மராமரம் ஏழினையும் ஓரம்பால் இராமன் எய்துவதற்கான வழியைச் சுக்ரீவனுக்கு உரைத்தான். இவ்வாறு எல்லாவகை யானும் அனுமன் அறிவு விளங்கிற்று.*

# 3. தமிழ் இலக்கியத்தில் தேசியம்

“ஒருவர்க்கொருவர் உதவியாகவும் பாதுகாப்பாகவும் இருக்கத்தக்க வகையில், இயைந்து அமைந்த மாபெரும் மக்கள் அமைப்பே தேசியம் ஆகும். பொதுவாக ஒரு பொதுமொழி, ஒரு பொதுவரலாறு, ஒரே ஓரினத் தோற்றம், ஒரே வகைப் பண்பாடு முதலியன தேசம் என்பதன் இயல்பாகும். தேசியம் என்ற சொல் தெளிவாக வரையறுக்க இயலாதவாறு ஒருவகை மக்கட்கூட்டம் தங்களை ஒரு தேசிய இனம் என்னும்போது தேசியம் உருவாகிறது. தேசங்கள் தனித்தனியாகத் தம்மைத் தாமே உரிமையோடு ஆளும்போது நாடுகள் உருவாகின்றன.” அரசியல் வழியில் நோக்கும்போது தனக்கென ஓர் அரசையும், அரசியலமைப்புகளையும் கொண்ட தனியுரிமை நாடே தேசமாகும். தற்கால உலகை உருவாக்குகின்ற அடிப்படை அரசியல், சட்ட அமைப்புக் களே தேசங்களாகும். “இன்னொருவகையில் கருதும்போது ஒரு குறிப்பிடத்தக்க எண்ணிக்கையுள்ள மக்கள் தமக்கென ஓர் அரசியல் ஆட்சியை உடையவராக இருத்தல் வேண்டும் என்னும் நெருக்கடி இல்லை என்றாலும், பிரிக்கமுடியாத ஒருசில உறவுகளினால் உருவாகிய ஒற்றுமை உணர்வுடைய குழுவைத் தேசியம் என்றிடலாம். இத்தகு பொதுத் தன்மைகளாக மொழி, நிலம், அரசு, இனம், சமயம், மரபுகள், உணர்வுகள் ஆகியன அமைகின்றன. போலந்து ஓர் உரிமை நாடாகத் தோன்றுவதற்கு முன்னரேயே, போலந்தியர் தேசிய இனம் உருவாகி இருந்தது.”

இத்தகு அறிஞர் பெருமக்கள் தம் தேசியம் பற்றிய சிந்தனைகளை நெஞ்சில் நினைந்து பார்க்கும்போது, “யாதும் ஊரே யாவரும் கேளிர்” என்னும் அடிப்படைக் கொள்கை, முப்புறம் கடலாலும் ஒருபுறம் மலையாலும் சூழப்பட்டுத் தீபகற்பமாக விளங்குகின்ற நில அமைப்பு, இமயம் தொட்டு குமரி வரை நிகழுகின்ற சமயச் சடங்குகள், தில்லியிலிருந்து திருவனந்தபுரம் வரை ஒரு சேர ஆளப்படும் இயல்பு - இவற்றையெல்லாம் நோக்கும்போது இந்திய தேசிய அமைப்பு உருவாகி இருப்பதனைத் தெளிவாகக் காணலாம்.

இத்தகு தேசிய அமைப்பும் உணர்வும் விதையுள் முளை போல, இலை மறை காய்போல பண்டை இலக்கியங்களில்

புதைந்து இருக்கக் காணலாம். அத்தகு பண்டை இலக்கியங்களில் தமிழ் மொழியில் உள்ள சங்க இலக்கியமும் ஒன்று.

தமிழ் இலக்கியத்தில் தேசியம் என்னும்போது பண்டைய புறநானூற்றிலிருந்து இன்றையப் புதுக்கவிதை வரை ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுக்கால எல்லையில் உருவாகிய இலக்கியங்கள் நம் கண் முன் தோன்றுகின்றன.

ஒற்றுமையும் ஒருமைப்பாடும் இல்லாமல் சிதறிக் கிடக்கின்ற மக்கள் கூட்டம் ஒரு தேசமாக உருவாவதில்லை. எங்கு நலம்நாடும் நல்லோர் வாழ்கின்றார்களோ அதுவே ஒரு நல்ல நாடு (தேசம்) ஆகும். இந்தச் சிந்தனை பின்வரும் அவ்வையார் புறநானூற்றுப் பாடலில் இலங்கக் காணலாம். மணங்கமழ் மலர்களும், துள்ளிப்பாயும் விலங்குகள் நிறைந்த முல்லைக் காடாயினும் நீ ஆகுக; நீர் வளமும் பயிர் நலமும் நிறைந்த மருதப் பண்ணையாயினும் நீ ஆகுக; வானளாவி உயர்ந்த குறிஞ்சியாயினும் நீ ஆகுக்; பள்ளமாகித் தாழ்ந்த நெய்தலாயினும் நீ ஆகுக; உன்சிறப்பு, உன்நலம் இவற்றுள் இல்லை. நன்மக்கள் எங்கு வாழ்கின்றார்களோ அந்த நிலமே நல்ல நிலம்; நல்ல நாடு (தேசம்) ஆகும்.

*"நாடா கொன்றோ காடா கொன்றோ*
*அவலா கொன்றோ மிசையா கொன்றோ*
*எவ்வழி ஆடவர் நல்லவர்*
*அவ்வழி நல்லை வாழிய நிலனே"*

என்னும் அவ்வையார் பாடலில் தேசம் இத்தகையது என்ற கருத்துப் பொதிந்திருக்கக் காணலாம்.

தேசியம் என்ற சிந்தனை அவ்வையார் பாடலில் பொதிந்திருந்தது போலவே. இந்தியாவை ஒன்றாகக் காணும் தேசிய இயல்பு புறநானூற்றுப் புலவரிடத்தும் பொலிந்து விளங்கிற்று. நில அடிப்படையில், நெஞ்ச நினைவோட்ட அடிப்படையில் இந்திய தீபகற்பத்தை ஒன்றாக காணும் தேசியக் காட்சி பண்டையப் புறநானூற்றுப் புலவரிடத்தே பொதிந்து விளங்குகிறது. வட இமயத்தையும் தென்குமரி யையும் புலவர் சிலர் ஒரு சேரப் பாடலில் அமைத்துப் பாடுகின்றனர். அத்தகு பாடலில் அமைந்துள்ள இமயச் சாரலின் புனைந்துரைகள் பல, இமயத்தின்பால், இமயம் வரை பரந்துகிடந்த இந்த மண்ணின்பால் அவர்கள் கொண்டி ருந்த ஈடுபாட்டை உணர்த்துகிறது.

*“தென்குமரி வடபெருங்கல்*
*குணகுடகட லாவெல்லை”*

புறம்-17-ல் இடம் பெற்ற இவ்வடி, இந்திய தேசிய எல்லையை அன்றே வரையறுத்துள்ளது. பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியைக் காரிகிழார் பாடிய புறப் பாட்டில் (புறம்.7) இக்கருத்து இன்னும் விரிவாக விளக்கப் பெற்றுள்ளதைக் காணலாம்.

*“வடாஅது பனிபடு நெடுவரை வடக்கும்*
*தெனாஅது உருகெழு குமரியின் தெற்கும்*
*குணாஅது கரைபொரு தொடுகடற் குணக்கும்*
*குடாஅது தொன்றுமுதிர் பௌவத்தின் குடக்கும்”*

இன்னும் தம்மைப் போற்றிய மன்னனை வாழ்த்தும் பாங்கில் அமைந்த பாடல் சிலவற்றுள் “இமயம் போல் நின்று நிலைப்பானாகுக” என்று வாழ்த்தும்போது வட இமயத் தையும் தென்பொதிகையையும் ஒன்றாக வைத்து உவமிக்கும்.

*“நடுக்கின்றி நிலீயரோ வத்தை அடுக்கத்துச்*

................
*பொற்கோட் டிமயமும் பொதியமும் போன்றே”* (20)

என்னும் அடிகள்,

*............இமயம் போல*
*நிலீஇய ரத்தைநீ நிலமிசை யானே!”* (160)

என்னும் தொடர்கள் இக்கருத்தை வலியுறுத்தக் காணலாம்.

மேலும் பிசிராந்தையார் தெற்கிலிருந்து வடக்கு நோக்கிப் போகும் அன்னப் பறவைகளை கண்ணில் கண்ட போது குமரியையும் இமயத்தையும் ஒருசேர இணைக்கும் அவற்றின் இயல்பைப் பின்வருமாறு போற்றிப் பாடுகிறார்:

*“குமரியம் பெருந்துறை யயிரை மாந்தி*
*வடமலைப் பெயர்குவை யாயின்”* (67)

வாழ்வின் பயன் பலபற்றி எண்ணுகின்ற கோப்பெருஞ் சோழன் (புறம். 214) இம்மண்ணுலக வாழ்வின் பயன் நிலைத்த புகழே என நினைக்கும் போது இமயமே அவன் எண்ணத்தில் திகழ்கின்றது.

*"....................இமையத்துக்*
*கோடுயர்ந் தன்ன தம்மிசை நட்டு"*

இமயத்தை நினைக்கும் போதெல்லாம், புறநானூற்றுப் புலவர் தம் இதயம் களிப்பதை எண்ணும்போது ஒருமை யுணர்வு அவர்தம் உள்ளங்களில் இடம் பெற்றுள்ள பாங்கு சிறப்பாகப் புலப்படுகிறது.சோழன் குளமுற்றத் துத்துஞ்சிய கிள்ளி வளவனை ஆலத்தூர் கிழார் வாழ்த்தும் போது, எண்ண இயலாத மழைத்துளிகள் போல எண்ணற்ற ஆண்டுகள் வாழ்க என வாழ்த்துகின்றார்.இமயத்தைத் தழுவி, குளிர்குரல் கொடுத்துக் கூடிய மேகங்களுக்கிடையே தோன்றும் மாமழையைக் கருதுகிறது.

*"இமயத் தீண்டி யின்குரல் பயிற்றிக்*
*கொண்டன் மாமழை பொழிந்த*
*நுண்பஃ றுளி"* (புறம். 34)

*"வரையளந்தறியாப் பொன்படு*
*நெடுங்கோட்டிமயம்"* (39)

*"நரந்தை நறும்புன் மேய்ந்த கவரி*
*குவளைப் பைஞ்சுனை பருகி யயல*
*தகரத் தண்ணிழற் பிணையொடு வதியும்*
*வடதிசை யதுவே வான்றோ யிமயம்"* (132)

*"சிறுதலை நவ்விப் பெருங்கண் மாப்பிணை*
*அந்தி அந்தண ரருங்கட னிறுக்கும்*
*முத்து விளக்கிற் றுஞ்சும்*
*பொற்கோட் டிமயம்"* (புறம் – 2)

*"................ செல்லாது*
*மழையண் ணாப்ப நீடிய நெடுவரைக்*
*கழைவள ரிமயம்"* (புறம். 166)
*"............. பாடாண்*
*எழிலி தோயு மிமிழிசை யருவிப்*
*பொன்னுடை நெடுங்கோட் டிமயம்"* (புறம். 369)

என்னும் புறப்பாடல் அடிகள், இமயத்தின்பால் கவிந்துள்ள பண்டைத் தமிழ்ப்புலவர்களின் நெஞ்ச உணர்வைப் புலப்படுத்தி, இந்திய தேசிய உணர்வு எல்லை அடிப்படையில் அன்று எந்த அளவு அமைந்திருந்தது என்று குறிப்பிட வல்லன.

கி.பி. இரண்டாம் நூற்றாண்டினதாகக் கருதப் பெறும் சிலப்பதிகாரக் காப்பியத்தில் இளங்கோ அடிகளார் தேசிய சிந்தனையை மிகநுட்பமாக எழுப்பிச் செல்லுகிறார். மரபு அடிப்படையில் அமைந்த குறுகிய தேசிய உணர்வைப் பரந்த மொழி அடிப்படையில் விரிவாக்கிப் பின்னர் மொழியையும் கடந்து, சமய அடிப்படையில் இந்திய தேசிய உணர்வை உருவாக்கிச் செல்கின்றார். சேர, சோழ, பாண்டியர் என்னும் மரபை, மொழி அடிப்படையில் இயைத்து,

*'தமிழ் வரம்பறுத்த தண்புனல் நன்னாடு'*
*'தென்தமிழ் நன்னாடு'*
*'தமிழ் நாடு'*

எனத் தமிழ்த் தேசிய உணர்வினை உருவாக்குகின்றார். 'தமிழ் வரம்பறுத்த தண்புனல் நன்னாடு' என்னும் தொடரில், முந்நாடும் மூவேந்தரும் என்று மரபின் வழி வருகின்ற பண்டைய மன்னர்ச் சிந்தனையை மாற்றி, மொழி அடிப்படையில் அமைந்த தமிழ்த் தேசியத்தைக் காண முயல்கிறார். அடுத்து வருகின்ற 'தென்தமிழ் நன்னாடு' என்னும் தொடர் தமிழ்த் தேசியம் பண்டைய முந்நாட்டு எல்லையினுள் முடங்காது நூற்றுவர் கன்னரையும் உள்ளிட்ட தென்தமிழ் நன்னாட்டுத் தேசிய உணர்வை ஊக்குகிறது. அடுத்து வருகின்ற 'தமிழ் நாடு' என்ற தொடர் முக்கடலும் சூழ்ந்து இமயம்வரை பரந்த பெரு நிலத்தைத் தமிழ்த் தேசமாக அரசியல் அடிப்படையில் நினைக்கத் தூண்டுகிறது. அதற்கும் மேலாகச் சென்று கண்ணகி தெய்வத்தின் அருளுக்கும் உரிமைப்படுத்தி இலங்கையையும் இமயத்தையும் ஒருசேர இணைக்கும், இன்று நாம் பெறத் தவறிய ஏற்றமிகு இந்திய தேசியம் ஒன்றை இளங்கோ தம் எண்ணத்தில் கொண்டிருந்ததை வரந்தரு காதை வழியே நம்மால் உணர முடிகிறது.

*"முடிமன்னர் மூவருங் காத்தோம்பும் தெய்வ*
*வடபே ரிமய மலையிற் பிறந்து*
*கடுவரற் கங்கைப் புனலாடிப் போந்த*
*தொடிவளைத் தோளிக்குத் தோழிநான் கண்டீர்"*

சிலப்பதிகாரம், சோழநாட்டுக் கண்ணகி வட பேரிமயமலையில் தோன்றிய கங்கையில் நீர் ஆடி, சேர நாட்டில் கோயில் கொண்ட சிறப்புக்கூறும் பாங்கில்,

கண்ணகி கோயில் கொண்ட தெற்கின் பண்பாடு அவள் வழியே இமயம்வரை பரவி ஒரு பெருந்தேசியச் சிந்தனையை உருவாக்கியதுபோல், இராமாயணம், வட இமயத்தின்பால் எழுந்து தென்கோடியில் உள்ள இலங்கைவரை இந்திய தேசிய உணர்வெனும் வெள்ளம் அலைவீசிச் செல்கின்ற அற்புதக் காட்சியைக் கம்பர் காட்டக் காண்கிறோம்.

கங்கை வேடனையும் கிட்கிந்தை குரங்குத் தலைவன் சுக்கிரீவனையும் இலங்கை அரக்க வீடணனையும் உடன் பிறந்தவர்களாகக் கொள்ளும் ஓர் உயர்ந்த தேசியத்தைக் கம்பர் பின்வரும் பாடலில் உருவாக்கிக் காட்டுகிறார்.

*"குகனொடும் ஐவரானேம் முன்பு பின்குன்று சூழ்வான்,*
*மகனொடும் அறுவரானேம்*
*அகனமர் அன்பின் வந்த காதலைய! நின்னொடும்*
*எழுவரானேம்" (கம்ப. **6507**)*

ஆழ்வார்களும் நாயன்மார்களும் சமய அடிப்படையில் இந்தியாவை ஒருமையாகக் கண்டு தொழுதுள்ளார்கள். திருவனந்தபுரம் துவங்கி, வடக்கு நோக்கி இன்று அகோபிலம் என்றழைக்கப் பெறும் சிங்கவேள் குன்றம், மதுரா என்று பெயர் கொண்டு விளங்கும் திருஆய்ப்பாடி, துவாரகா என்ற பெயர் கொண்டுள்ள துவராபதி அன்றும் இன்றும் ஒரே பெயர் கொண்டு விளங்கும் அயோத்தி, ஹரித்துவாருக்கு அப்பால் தேவப்ரயாக் என்ற கண்டங்கடி நகர், இன்று நேபாளில் இடங்கொண்டுள்ள ஷாலிக் கிராமம் என்னும் ஷாலக்கிராமம், நிம்ஷார் என்று குறிப்பிடப்பெறும் நைமிசாரண்யம் ஆகிய திருமால் குடிகொண்டுள்ள திருத் தலங்களும் சிவபெருமானுக்குரிய கைலாயமும் சமயச் சான்றோர்களால் தொடர்ந்து பாடிப் பரவப் பெற்றுள்ளன.

சிந்தனையளவில் தொடர்ந்து, தெய்வத் தமிழிலக் கியத்தில் செழித்து வளர்ந்த இவ்விந்திய தேசிய உணர்வு செயல் அளவிலும் சிறப்புறத் தொடங்கிய காலம் மகாகவி சுப்பிரமணிய பாரதியார் காலம் என்று குறிப்பிடலாம்.

பாரதியார் தோன்றிய காலம் இந்திய சுதந்திர உணர்வுகள் அலைமோதிக் கொண்டிருந்த காலம். அடிமைப் பட்டிருந்த உலக நாடுகளும் விழிப்புற்று உரிமை இடிக்குரல் எழுப்பி சுதந்திரப் போராட்டப் புயலை எழுப்பிய உலகச் சூழலின் ஒரு பத்திரிக்கையாசிரியனாகப் பணிசெய்யும்

வாய்ப்பு கவிஞர் பாரதிக்கு வாய்த்தது. அவர் இயல்பாகவே உரிமை உணர்வுகளையுடைய கவிஞர். ஆங்கிலப் பேரரசின் ஆட்சியின் கீழே இந்திய மக்கள் உற்ற இன்னல்களைக் கண்டு, வாழ்ந்த வறுமைச் சூழ்நிலையைக் கண்டு, அவர் உள்ளம் குமுறினார்; கொதித்தெழுந்தார். மேனாட்டு மோகத்தில் மயங்கிக் கிடந்த இந்தியர் பலர்க்கு பாரத நாட்டின், நாட்டு மக்களின் பழம்பெருமை பலவற்றை எடுத்துரைத்துத் தன்மானமும் தற்பெருமையையும் கொள்ளச் செய்தார்; புதிய பாரதத்தைத் தன் அறிவார்ந்த கற்பனையால் உருவாக்கிக் காட்டினார்; உலகத்திலும் இந்தியாவிலும் உரிமைக்குப் போராடியவர்களை போற்றிப் புகழ்ந்து வாழ்த்தினார்; தெய்வீகத்தில் தோய்ந்து கிடந்த தமிழ் இலக்கிய மரபு களையும் வடிவங்களையும் தேசியமாகத் திகழச் செய்தார்.

ஓங்கி உயர்ந்து பல்லாயிரம் ஆண்டுகளாக நிலைத்து நிற்கும் மலை இமயலை. அது எங்கள் பாரதத்து மலை. உலகில் எம்மலையும் ஏற்றத்திலும் தோற்றத்திலும் அதற்கு ஈடில்லை. இனிய நீர்பாயும் கங்கையாறு எங்கள் ஆறு. அதன் மாண்பிற்கும் மதிப்பிற்கும் ஈடு ஏது? எழுதுதற்கு அரிய இங்குள்ள உபநிடத நூல் போன்ற ஒன்று உலகில் எங்கும் இன்றும் தோன்றவில்லை. இத்தகு பொருளும் புகழும் நிறைந்த பாரதத்தில் பிறந்த எமக்கு உலகில் எவர் ஈடாவர்.

*மன்னும் இமயமலை யெங்கள் மலையே*
*மாநில தீதிது போற்பிறி திலையே!*
*இன்னறு நீர்க்கங்கை யாறெங்கள் யாறே*
*இங்கிதன் மாண்பிற் கெதிரேது வேறே?*
*பன்னரும் உபநிட நூலெங்கள் நூலே*
*பார்மிசை யேது ஒரு நூல் இது போலே?*
*பொன்னொளிர் பாரத நாடெங்கள் நாடே*
*போற்றுவம் இஃதை எமக்கிலை ஈடே!*

**........... (எங்கள் நாடு. 1)**

பலசாதியினர், மொழியினர், இனத்தினர் இந்த பாரதத்தில் இடங்கொண்டுள்ளனர் என்றாலும், அவர் தம் சிந்தனை யெல்லாம் ஒன்றே. செயலெல்லாம் அறநெறியினவே. அந்நெறிக்கு மாறாக, பாரதத்திற்கு எதிராக வருவோர் எவராயினும் அவரை அழித்து வீழ்த்துவதில் உருவாகும் ஓர் இயல்பு பாரதத்திற்கு உண்டு.

*முப்பது கோடி முகமுடைய யாள் உயிர்*
*மொய்ம்புற வொன்றுடை யாள் – இவள்*
*செப்பு மொழிபதி னெட்டுடையாள். எனிற்*
*சிந்தனை ஒன்றுடையாள்.*
*அறுபது கோடி தடக்கைகளாலும்*
*அறங்கள் நடத்துவள் தாய்–தனைச்*
*செறுவது நாடி வருபவ ரைத்துகள்*
*செய்து கிடத்துவள் தாய்.*

ஆங்கிலேயர் பேராற்றல் படைத்தவர்கள். அவர்களை எதிர்த்து நாம் வாழ இயலுமா? என்று ஐயுற்ற அறிஞர்கள் பலர் இந்தியாவில் இருந்தனர். அந்த ஐயம் இந்திய மக்களிடம் மெல்லப் பரவி அவர்தம் எழுச்சியையும், உயர்ச்சியையும் குலைத்தது. அதனை எதிர்த்துக் குரல் கொடுப்பதைப் போல பாரதியார் வெற்றியோ தோல்வியோ, உயர் பதவியோ தாழ்நிலையோ எப்பதம் வாய்க்கினும் இந்தியாவில் பிறந்த அனைவரும் அந்த இன்பத்துன்பத்தைப் பகிர்ந்து அனுபவிப் போம். வாழ்வு என்ற ஒன்று வாய்க்கின் அனைவரும் வாழ்வோம். இதை நன்கு தெளிதல் வேண்டும். இந்தத் தெளிந்த அறிவில் ஒன்றுறல் வேண்டும். இந்த ஒற்றுமையே வாழ்வு தரும். இந்த ஞானம் கைவரப் பெறின் பிறகு நமக்கு என்ன வேண்டும்?

*"எப்பதம் வாய்த்திடு மேனும் நம்மில்*
*யாவர்க்கும் அந்த நிலைபொது வாகும்*
*முப்பது கோடியும் வாழ்வோம் – வீழில்*
*முப்பது கோடிமுழுமையும் வீழ்வோம்*
*ஒன்றுபட்டால் உண்டு வாழ்வே–தம்மில்*
*ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே*
*நன்றிது தேர்ந்திடல் வேண்டும் – இந்த*
*ஞானம் வந்துற்றபின் நமக்கெது வேண்டும்"*

இந்தத் தெளிவு, அந்தத் திண்மை இவற்றோடு பின்வரும் செயல் திறனுங்கொண்டு பாரத தேசத்தைக் காத்தல் வேண்டும். தாயின் மணிக்கொடியினை,

*"செந்தமிழ் நாட்டுப் பொருநர் – கொடுந்*
*தீக்கண் மறவர்கள், சேரன்றன் வீரர்*
*சிந்தை துணிந்த தெலுங்க – தாயின்*

*சேவடிக் கேபணி துளுவர்*
*கன்னடர் ஒட்டிய ரோடு – போரில்*
*காலனும் அஞ்சக் கலக்கு மராட்டர்"*

முதலிய வீரப் பெருமக்கள் பாரதநாட்டுக் கொடிகாத் தலில் கூடிநின்று பணிசெய்தலைப் பாடிப் பாராட்டுகிறார்.

**(தாயின் மணிக்கொடி - 14: 6, 7)**

சுதந்திரப் போராட்டத்திற்கு வழிகாட்டிய சான்றோர் களையும், அதில் ஈடுபட்ட தேசபக்தர்களையும் போற்றிப் புகழ்வதன் - மூலம் பாரத தேசீய உணர்வைத் தூண்டும் வகையில் பல பாடல் பாடிப் புலப்படுத்தியுள்ளார். கோகலே, மகாத்மாகாந்தி, குருகோவிந்தர், தாதாபாய் நவுரோஜி, பூபேந்திரர், திலகர், லாலாலஜபதி, வ.உ. சிதம்பரனார் ஆகியோரைத் தம் பாட்டுத் திறத்தால் பாராட்டுவதோடு, வீரசேலிங்கம், இரவிந்திரநாததாகூர் முதலானோரைத் தம் எழுத்து வன்மையால் எடுத்து இயம்புகின்றார்.

பாரதி சுதந்திரத்திற்கு முன் வாழ்ந்த கவிஞர்; 1929 வரையே வாழ்ந்திருந்தார். எனினும் இந்திய சுதந்திரத்தில் உறுதியும், அதன் எதிர்காலத் திட்டத் தெளிவும் கொண்டி ருந்த அவர் அப்போதே உரிமை பெற்ற இந்தியர் விழாக் கோலம் பூண்டு ஆடிப் பாடுவதைத் தம் கற்பனைக் கண்களால் கண்டு,

*"ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே*
*ஆனந்த சுதந்திரம்அடைந்துவிட்டோம் என்று*
*ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே"*

என்று பாடினார்.

இத்தகு ஆடல்பாடல் ஒருபுறமிருக்க எதிர்கால இந்தியா பொதுஉடைமையினதாக, உறுதியானதாக, உழைப்புத்திறன் மிக்கதாக, பொருள்வளம் சிறந்ததாக, அறிவுநலம் வாய்ந்த தாக அமைவதற்கு உரிய வழி பலவற்றையும் சிந்தித்துப் பாடியுள்ளார்; அவர்தம் சிந்தனைகள் சில நிறைவேறியுள; இன்றும் பல நிறைவேற்ற வேண்டிய நிலையில் உள்ளோம்.

பாரத சமுதாயம் வாழ்க; பொது உடைமை சமுதாயம் அமைக. அந்தச் சமுதாயத்தில் பிறர் உழைப்பை, பொருளைப் பறித்து வாழும் கொடியோர்க்கு இடம் இல்லை; பிறர்

துன்பம் துடைக்கும் அருளாளர்க்கே அங்கு இடமுண்டு. ஒரே குலம், ஒரே இனம். ஆம் எல்லாரும் இந்தியர். ஒரேநிறைஒரே விலை-ஆம்-எல்லாரும் மன்னர்கள்.

*"பாரத சமுதாயம் வாழ்கவே – வாழ்க வாழ்க*
*பாரத சமுதாயம் வாழ்கவே*
*முப்பது கோடி ஜனங்களின் சங்கம்*
*முழுமைக்கும் பொது உடைமை*
*ஒப்பி லாத சமுதாயம்*
*உலகத் துக்கொரு புதுமை."*

**(பாரத சமுதாயம் - 1, 2)**

இந்த ஒப்பற்ற பாரத சமுதாய அமைப்பில் முதல் பணி பாதுகாப்பு (Defence); முதலில் படைபலம் வேண்டும். வடக்கே இமயத்திலும், மற்ற மூன்று திசைகளில் கடலிலும் நம் படைகள் நின்று சுற்றிச் சுழன்று நாட்டைப் பாதுகாக்க வேண்டும்.

வெள்ளிப் பனிமலையின் மீது நம் படைகள் கண்ணுங் கருத்துமாய்ச் சுற்றிக் கொண்டிருக்க வேண்டும்; மூன்று கடல்களிலும் நம் கப்பற்படை சிறந்தோங்க, ஞாலம் நடுங்கவரும் கப்பல்கள் பல நாம் கட்டல் வேண்டும்.

ஆற்றல் ஒருபால்; அதற்கேற்ப அறிவு ஒருபால்; இரண்டையும் ஒரு சேரப் போற்றி வளர்த்தல் வேண்டும். ஞாலம் நடுங்கவரும் கப்பல்கள் செய்தலோடு, வெள்ளிப் பனிமலையில் மீதுலவுதலோடு, பள்ளித் தலமனைத்தினையும் கோயில்களாகக் கொண்டு பணிபுரிதல் வேண்டும்; அங்குப் பயிலும் சின்னஞ் சிறார்களை ஒளி படைத்த கண்ணர்களாய், உறுதிகொண்ட நெஞ்சினராய், களிபடைத்த தோளினராய், ஒன்றுகாணும் காட்சியராய் சுருக்கமாகத் தெய்வங்களாக உருவாக்க வேண்டும்.

*"பாரத தேசமென்று பெயர்சொல்லு வார் –மிகப்*
*பயங்கொல்லுவார், துயர்ப் பகைவெல்லு வார்*
*வெள்ளிப் பனிமலையின் மீதுலவு வோம், அடி*
*மேலைக் கடல்முழுதும் கப்பல் விடுவோம்*
*பள்ளித் தலமனைத்தும் கோயில்செய் குவோம்; எங்கள்*
*பாரத தேச மென்று தோள் கொட்டுவோம்"*

இலங்கையை இந்திய மண்ணோடு இணைத்தல் வேண்டும். சிங்களத்தீவிற்கு நாள்தோறும் சென்று வரும் பாங்கில் ஒரு பாலம் அமைத்தல் வேண்டும். இப்படியே வங்கத்தில் ஓடிக் கடலில் கலக்கும் நீரைத் திருப்பி இந்திய மையப்பகுதிகளை வளம் செய்தல் வேண்டும்; சுரங்கங்கள் தோண்டி உலோகத் தாதுக்களைக் கொணர்ந்து உலக வாணிகத்தில் உயர்ந்து உயர்த்தல் வேண்டும்.

இத்தகு பொருளாதார மேம்பாடு ஒருபுறமிருக்க, சந்திரமண்டலத்தைக் கண்டுதெளியும் அறிவியல் திறனும் சந்தித்தெருக்களைத் தூய்மையாக வைத்திருக்கும் உடல் நல ஒழுக்கமும் வளர்த்தல் வேண்டும் என்றும் அவர் எண்ணிப் பார்க்கிறார்.

இத்தகு படைபலம், பொருள் வளம், அறிவுநலன் இவைமட்டும் இந்திய வளர்ச்சிக்கு, எழுச்சிக்குப் போதா. இந்தியரிடையே ஒருமைப்பாடு வேண்டும். இராசபுதானத்து வீரர்க்குக் கன்னடத் தங்கப்பதக்கங்கள் தந்தும், சிங்க மராட்டியர் கவிதைக்குச் சேரத்துத், தந்தங்கள் பரிசளித்தும், இந்திய ஒருமைப்பாட்டைக் கலை வழியில் ஒன்றுபடுத்தல் இன்றியமையாத பணியாகும். கலைவழியைவிடக் காதல் வழி இன்னும் இறுக்கமும் நெருக்கமும் உடையதல்லவா! எனவே தந்த நிலவு பொழிய, கரைபுரண்டோடும் சிந்து நதி வெள்ளத்தில் எழில் கொஞ்சும் சேரநாட்டுப் பெண்களுடன் ஒலிநயம் இயல்பாக இயைந்த தெலுங்குப் பாடல்களைப் பாடித் தமிழர்களாகிய நாம் மகிழ்வோம்.

***சிந்து நதியின் மிசை நிலவினிலே***
***சேரநன் னாட்டிளம் பெண்களுடனே***
***சுந்திரத் தெலுங்கினில் பாட்டி சைத்துத்***
***தோணிக ளோட்டி விளையாடி வருவோம்.***

**(பாரததேசம் - 5)**

சுதந்திரம், நம் பிறப்புரிமை. நம் இந்தியரின் பிறப்புரிமை மட்டும் அன்று; உலகநாடுகள் ஒவ்வொன்றின் பிறப்புரிமை அது. அம்மட்டோ - மானுடன் ஒவ்வொருவரின் பிறப் புரிமையும் அதுவே ஆகும். இந்தத் தெளிவு கொண்ட பாரதி உலக நாடுகளில் எழுந்த உரிமைக் குரல்களைத் தம் கவிக் குரலோடு இயைத்துப் பாடல் பல பாடினார். **மாஜினியின் சபதம், பெல்ஜியத்திற்கு வாழ்த்து, புதிய ருசியா** முதலியன அவற்றுட் சில.

*"விளக்கொளி மழுங்கிப் போக*
*வெயிலொளி தோன்றும் மட்டும்*
*களக்கமா ரிருளின் மூழ்குங்*
*கனகமா ளிகையு முண்டாம்;*
*அளக்கருந் தீதுற் றாலும்*
*அச்சமே யுளத்துக் கொள்ளார்,*
*துளக்கற ஓங்கி நிற்பர்;*
*துயருண்டோ துணிவுள் ளோர்க்கே,"*

எனப் பெல்ஜியத்தை வாழ்த்தும் வாழ்த்தில் இந்திய சுதந்திர வீரர்களுக்கும் 'துயருண்டோ துணிவுள்ளோர்க்கே' என்ற மந்திர மொழியொன்றை, மறைமொழி ஒன்றை பாரதியார் வழங்குகின்றார்.

ஜார் ஆட்சியின் வீழ்ச்சியும், சோவியத் தொழிலாளரின் புரட்சியும் பாரதியின் உளத்தைக் கொள்ளை கொண்ட நிகழ்ச்சிகளாகும். பாரத சமுதாயப் பாடலில் அந்த உளப்பாங்கைக் கண்டோம். 'புதிய ருசியா' என்ற பாடலில் தெளிவாக, தீர்க்கமாக உலக எதிர்காலத்தை, இந்தியாவின் தென்கோடியில் இருந்து கொண்டே பாரதி பாடுகிறான்.

*மாகாளி பராசக்தி உருசியநாட்*
*டினிற் கடைக்கண் வைத்தாள், அங்கே*
*ஆகாவென் றெழுந்தது பார் யுகப்புரட்சி*
*கொடுங்கோலன் அலறி வீழ்ந்தான்*

**(புதிய ருஷியா-1)**

*இமயமலை வீழ்ந்ததுபோல் வீழ்ந்திட்டான்*
*ஜார ரசன், இவனைச் சூழ்ந்து*
*சமயமுள படிக்கெல்லாம் பொய்கூறி*
*அறங்கொன்று சதிகள் செய்த*
*சுமடர் சடசடவென்று சரிந்திட்டார்,*
*புயற்காற்றுச் சூறை தன்னில்*
*திமுதிமென மரம்விழுந்து காடெல்லாம்*
*விறகான செய்தி போல*
*குடிமக்கள் சொன்னபடி குடிவாழ்வு*
*மேன்மையுறக் குடிமை நீதி*
*கடியொன்றி லெழுந்ததுபார்; குடியரசென்று*
*உலகறியக் கூறிவிட்டார்*

*அடிமைக்குத் தளையில்லை யாருமிப்போது*
*அடிமயில்லை அறிக என்றார்;*
*இடிபட்ட சுவர்போலே கலிவிழுந்தான்*
*கிருத யுகம் எழுக மாதோ.*

**(புதிய ருஷியா - 5, 6)**

பன்னூறு ஆண்டுகள் பாரதம், சிறப்பாகத் தமிழகம் பக்தியில் தோய்ந்து பல்லாயிரம் பாடல்களைக் கொண்டு விளங்குகிறது. அந்தப் பக்திக்கனிவை தேசப் பாசத்தேனில் தோய்த்தளித்தவர் பாரதியாவார்.

தெய்வ உணர்வைத் தேசிய உணர்வாகவும், தெய்வீகப் பாடல் வடிவைத் தேசியப் பாடல்களுக்கு உரியனவாகவும், தெய்வத்தைப் பாடுபொருளாகக் கொண்ட கீர்த்தனை அமைப்புக்களை தேசியத்தைப் பாடுபொருளாகக் கொண்ட கீர்த்தனை அமைப்புக்களாக உருவாக்கித், தமிழ் மக்களுக்குத் தெய்வ பக்தியில் தோய்ந்து கிடந்த தமிழ் மக்களுக்குத் தேசபக்தியை ஊட்டினார்.

'நாமார்க்கும் குடியல்லோம்' கோமார்க்கே நாம் என்றும் மீளா ஆளாய்க் கொய் மலர்ச் சேவடியிணையே குறுகினோமே' என்னும் சைவ சமயச் சான்றோர் திருநாவுக்கரசரின் கருத்தினை 'ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே' என்னும் சுதந்திரப்பாடலுக்கு, பாரினில் எவர்க்குமினி அடிமை செய்யோம் பரி பூரணனுக்கே அடிமை செய்து வாழ்வோம் எனக் கருவியாக்கிக் கொண்டார்.

*'வந்தே மாதரம் என்போம்'*

*'தாயின் மணிக்கொடி பாரீர்'*

என்னும் சுதந்திர கீதங்கள் தாயுமான அடிகளாருடைய ஆனந்தக் களிப்பின் வடிவைப் பின்பற்றி அமைகின்றன.

திருப்பாவை, திருவெம்பாவை, திருப்பள்ளியெழுச்சி எனத் தெய்வத்தைப் பாடு பொருளாகக் கொண்ட எண்சீர் அடிகளால் பாரத மாதா திருப்பள்ளியெழுச்சி பாடினார். பாரதமாதா நவரத்தின மாலை, பாரத மாதா திருத்தசாங்கம் முதலியனவும் அத்தகு நெறியின் வழி வந்தனவே.

அவர் காலத்தில் பெரிதும் மக்களிடையே, சிறப்பாகப் பாமர மக்களிடையே பழக்கத்திலிருந்த

*'கலக்க மறப் பொதுநடம் நான் கண்டு கொண்ட தருணம்'*
**(கோக்கலே சாமியார் பாடல்)**

*'மாடுதின்னும் புலையா உனக்கு மார்கழித் திருநாளா'*
**(தொண்டு செய்யும் அடிமை)**

*'ஓய் நந்தனாரே நம்ம சாதிக்கு அடுக்குமோ*
*ஞாயந்தானோ? நீர் சொல்லும்'*
**(நம்ம சாதிக்கு அடுக்குமோ)**

*'நாம் என்ன செய்வோம் புண்ணியரே–இந்தப்*
*பூமியில்லாத புதுமையைக் கண்டோம்'*
*நாம் என்ன செய்வோம்*
*'ஆண்டைக் கடிமைக் கார னல்லவே'*
**(பாரத தேவியின் அடிமை)**

என்னும் வழக்கத்திலிருந்த தெய்வீகக் கீர்த்தனை அமைப்புக் களில் தேசீய கீர்த்தனைகளைப் பாடிக் கொடுத்தார்.

தெய்வத்தைப் பற்றித் தாம் பாடிய பாடல்களிலும் தேசிய விடுதலையை வேண்டுகின்ற அகத்தெழுச்சி பாரதி பால் அமைந்திருந்தது. விநாயகர் நான்மணி மாலையில்,

*நமக்குத் தொழில் கவிதை, நாட்டிற் குழைத்தல்*
*இமைப் பொழுதுஞ் சோரா திருத்தல் – உமைக்கினிய*
*மைந்தன், கணநாதன் நங்குடியை வாழ்விப்பான்*

என வேண்டுகின்றார்.

பராசக்திப் பாடல்களில் எல்லாம் நாட்டு விடுதலையின் குரல் சுருதிபோட்டுக் கொண்டிருப்பதைக் கேட்கலாம். 'காணி நிலம் வேண்டும்' 'நல்லதோர் வீணை', 'பராசக்தி', 'யோகசித்தி', 'முத்துமாரி' என்னும் சக்திப் பாடல்களில் எல்லாம் தேசபக்தி திகழக் காணலாம்.

குயில் பாட்டு, கண்ணன் பாட்டு, பாஞ்சாலி சபதம் என்னும் அவர்தம் முப்பெரும் பாடல்களிலும், காதல் உணர்வுகளோடு விடுதலைக் கருத்துணர்வும் கரைந்து திகழக் காணலாம். சிறப்பாகப் பாஞ்சாலி சபதம், இன்று விடுதலைப் போரில் ஈடுபட்டிருந்த பாரதத்தை, விடுதலை வீரர்களுக்குத் துணைநிற்காமல் அஞ்சி அஞ்சித் தயங்கிய இந்தப் பாரதத்தைப் படம்பிடித்துக் காட்டுவதைக் காணலாம்.

இவ்வாறு பாதி தமிழ் இலக்கிய வரலாற்றில் தேசிய யுகம் ஒன்றைச் சிறப்பாக உருவாக்கினார். அடுத்து வந்த நாமக்கல் கவிஞர் முதலானோர் பாரதி வழியிலேயே சென்று தேசிய உணர்வை இலக்கிய வடிவில் ஆக்கித் தந்தனர்.

தற்கால இலக்கிய வடிவங்களில் தலைசிறந்த இடத்தைப் பெற்று விளங்கும் புதினங்களில் சில தேசீயத்தை, காந்தியத்தை கருவாகக் கொண்டு அமைந்துள்ளன.டி.டி. கிருஷ்ணசாமி அவர்களின் **கதரின் வெற்றி**, சுவாமிநாதனின் **பாணபுரத்து வீரர்** முதலியன தேசீய உணர்வை அடிப் படையாகக் கொண்ட துவக்கக்காலப் புதினங்களாகும். அடுத்து 1930-ல் வெங்கட்டரமணி எழுதிய **முருகன் ஓர் உழவன், தேசபக்தன் கந்தன்**, சீதாரா எழுதிய கரட்டூர் ராமா (1934), ராஜவேல் எழுதிய **1942**, கல்கி எழுதிய **தியாகபூமி** (1944) முதலியன அடுத்த கால கட்டத்தினைச் சார்ந்தனவாகும். காந்தியடிகள் நூற்றாண்டு விழாவின் போது (1969) தேசியத்தை அடிப்படையாகக் கொண்ட புதினங்கள் பல தமிழில் தோன்றின. நா. பார்த்தசாரதியின் **ஆத்மாவின் ராகங்கள்**, சிதம்பர சுப்பிரமணியத்தின் **மண்ணில் தெரியுது வானம்**, நல்லபெருமாளின் **கல்லுக்குள் ஈரம்**, ராஜம் கிருஷ்ணனின் **வளைக்கரம்**, கிருத்திகாவின் **தர்மக்ஷேத்திரே**, ஜெகசிற்பி யனின் **கிளிஞ்சல் கோபுரம்** இந்திரா பார்த்தசாரதியின் **தந்திர பூமி** முதலியன ஆகும். கல்கியின் **அலைஓசையும்** பார்த்த சாரதியின் **சத்தியவெள்ளமும்** அடுத்துக் குறிக்கத்தக்கன வாகும்.

நாட்டுப்புறப் பாடல் வகையில் அமைந்த கட்ட பொம்மன் கதை, சேர்வராயன் கதை, ராமப்பையன் அம்மானை கான்சாகிப் சண்டை முதலியனவும் தேசிய விடுதலை உணர்வை அடிப்படையாகக் கொண்டனவே.

தற்காலத்தில் எழுந்த தமிழ்ப் புதுக் கவிதைகளும் தேசியத்தை, கந்தியத்தை பாடுபொருளாகக் கொண்டு அமைந்து விளங்கக் காணலாம். விடுதலைக்குப் பின்னர் தேசியமும், காந்தியமும் தன்னலவாதிகளல் எவ்வாறு குறுகிய நோக்கங்களுக்குப் பயன்படுத்தப் பெறுகின்றன என்ற பொருளிலும், அந்த இரு சக்திகள் எவ்வாறு தாழ்த்தப் பட்டன என்ற பொருளிலும், கவிதை பல தோன்றின. திருத்தி எழுதிய தீர்ப்புகள் என்னும் தம் புதுக்கவிதைத் தொகுதியில், நம்மை அடிமைப்படுத்திய ஆங்கிலேயர் ஆண்ட காலத் திலும் இப்போது இந்தியர்களுக்கு உண்மையில் பயன் ஒன்று

*மில்லை என்று ஏக்கத்தோடு எதிர்ப்புக்குரல் காட்டி, இந்தியனுக்கு பின்வரும் பாடலில் வைரமுத்து உணர்த்து கிறார்.*

*'இந்திய மண்ணில்*
*வியாபாரம் செய்ய வந்தவர்கள்*
*அரசியல் நடத்தினார்கள்*
*(இன்று) அரசியல் நடத்த வந்தவர்கள்*
*வியாபாரம் செய்கிறார்கள்*
*இரண்டிலும்*
*நட்டப் பட்டது மட்டும்*
*நாம்தானே இந்தியனே!'*

*அரங்கநாதன் அங்கதப் போக்கில்,*

*'இரவிலே வாங்கினோம்*
*இன்னும்*
*விடியவே இல்லே'*

*என இடித்துரைக்கிறார் தன் அக்கினிச் சாரலில் (ப. 21). மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் மக்களை மறந்து, நாட்டை நலப்படுத்து வதற்குப் பதில் தங்களை வளப்படுத்திக் கொள்ளுகின்ற கொடுமையைச் சீதையின் மைந்தன் பின்வரும் பாடலிலே புலப்படுத்து கின்றார்:*

*'எங்கள் எம்.எல். ஏக்களுக்கு*
*கலி போர்னியா போகக்*
*கடல் மார்க்கம் தெரியும்*
*ஆஸ்திரேலியா போக*
*ஆகாய மார்க்கம் தெரியும்*
*தங்கள் தொகுதிக்குப் போகும்*
*தரைமார்க்கம் மட்டுந்தான்*
*இவர்கள் நினைவிலிருந்து*
*தப்பிப் போய்விட்டது'*

*கவிஞர் வாலி தன் பொய்க்கால் குதிரையில் (ப. 50) மனம் நொந்து போய் பதவிப்பித்தினால், **அ**மைச்சர்கள் எல்லாருமே தமக்கு ஒரு முறை கிடைத்த வெற்றியைப் பயன்படுத்திக் கொண்டு, பின்னர் பிறர்க்கு வாய்ப்புத் தராது இறுதிவரை*

தாங்களே ஆட்சிப் பீடத்தில் அமர்ந்து மானுடர்க்கு உரிய இரக்க உணர்வு இழந்து, அரக்கர்களாக ஆகிப்போவதைப் பின்வரும் கவிதையில் புலப்படுத்துகின்றார்.

*'எங்களால்*
*மனிதர்களை*
*மந்திரியாக்க முடிகிறது*
*மந்திரிகளைத்தான்*
*மறுபடியும்*
*மனிதர்களாக்க முடிவதில்லை'*

காந்தியம், தன்னல வாதிகளின் கையில் எவ்வாறு திசை மாறிப் போய்விட்டது என்பதைக் கவிஞர் மேத்தா அவர் களின் கவிதை தெளிவாகத் தெரிவிக்கக் காணலாம்.

*'சேரிகள் மட்டுமே நீ*
*யாத்திரை செய்வாய்*
*என்பதைத்*
*தெரிந்து கொண்டதால்*
*உன்னை நேசித்தவர்கள்*
*தேசத்தையே*
*சேரியாக மாற்றி விட்டார்கள்'*

இவ்வாறு அன்று தொட்டு இன்றுவரை தேசியம் பற்றிய சிந்தை தமிழ் இலக்கியங்களில் தொடர்ந்து அமைந் துள்ளதைக் காணலாம். சங்கப் புறநானூற்றுப் பாடல்கள் விதைத்த தேசியம் சேர இளவலின் காலத்தில் முளைவிட்டுப், பின்னர் கம்பன் கை வண்ணத்தில் தேசியச் செடியாக உருப்பெற்று, இறுதியில் பாரதியார் காலத்தில் கண்டோர் வியக்கும் பெருமரமாக விளங்கியதைக் காணலாம். இருபதாம் நூற்றாண்டில் தன்னலவாதிகள் என்ற புயலால் அம்மரம் சிறிது சிறிதாக அழிந்து கொண்டே செல்கிறது. ஒற்றுமையே வாழ்வு என எண்ணிய மக்கள் இன்று அதன் மறுபக்கமாகிய வேற்றுமையை ஆதரிக்கின்றனர். எனவே, வேற்றுமையை ஒழித்து ஒற்றுமையின் அடிப்படையில் அமைந்த ஒரே நாடாக ஒரே தேசியமாக வாழத் தமிழ் இலக்கியம் தொடர்ந்து பணிசெய்யும் என நம்புவோம்.

# 4. முள்ளும் மலரும்

'அய்யோ தாத்தா!' என்ற என் பேத்தியின் குரல் தோட்டத்தைச் சுற்றியபடியே வேப்பங்குச்சியால் பல்துலக்கிக் கொண்டிருந்த என் செவியில் விழுந்தது. 'என்னம்மா?' என்று ஆதங்கத்தோடு விரைந்து சென்றேன். தன் ஆள்காட்டி விரலைக் காட்டியபடி கண்ணீர் வழிய அழுதுகொண்டே என்னை நோக்கி வந்து கொண்டிருந்தாள்.

'என்னம்மா! என்ன? விரலில் இரத்தம் வழிகிறதே!' என்று பதட்டத்தோடு ஓடி, அவள் விரலில் கசிந்து கொண்டிருந்த குருதியை மெல்ல வழித்துவிட்டுப் பார்த்தேன். ஊசி குத்தியது போன்ற சிறு காயம் இருந்தது. 'எப்படி இந்தக் காயம் வந்தது?' என்பது போல் அவளைப் பார்த்தேன்.

'புது ரோசாப்பூ தாத்தா. அழகா இருந்திச்சி, பறிச்சேன் குத்திப்புடுச்சி, ஒரே வலியா இருக்கு' என்று தேம்பினாள்.

'அழாதே கண்ணு. இதோ உடனே வலிபோயிடும். சீக்கிரம் ஆறிடும்' என்று ஒரு துளி சுண்ணாம்பைத் தடவி, அவளைப் பாட்டியிடம் அனுப்பிவிட்டுப் பழையபடி தோட்டத்தைச் சுற்றலானேன்.

பொந்திலிருந்து பச்சைப்பாம்பு தலை நீட்டுவது போல அறுத்துவிட்ட வாழைக்கன்றுகள் குருத்துவிட்டிருந்தன. பளபளவென்று இளம்பச்சை வண்ணத்தில் அழகாக இருந்தன. வழவழவென்று மென்மையாக இருந்தன. தொட்டுப் பார்த்தேன். ஓரிரு குருத்துகள் இடையே கடிக்கப் பெற்றுக் கருநிற விளிம்போடு இருந்தன. பால் கறக்க வந்த கோனான் ஏமாந்த நேரத்தில் கன்றுக் குட்டி தின்று விட்டிருக்கும், கடித்துத் தின்றிருந்த அந்த வாழைக் குருத்துகளைப் பார்க்கும்போது வருத்தமாக இருந்தது.

பாவம் செய்யத் தெரியாத சென்மம்; துன்பத்தை எல்லாம் பொறுத்துக் கொண்டு துணை செய்யும் பிறவி என்று வாழையை நினைந்து என்மனம் முணுமுணுத்தது. 'முள்ளில் தான் பட்டாலும் தன்மேல் முள்பட்டாலும் வாழை தனக்குத் தான் துன்பம், முள்ளுக்கு ஒன்றும் இல்லையடா' என்று என் பாட்டி அடிக்கடி சொல்லி அங்கலாய்த்துக் கொண்டது நினைவிற்கு வந்தது.

தண்டை, இலையை, காயை, கனியை எல்லாவற்றையும், ஏன் தன்னையே முழுமையாக இந்த உலகுக்குத் தந்துவிடுகின்ற வாழை, எந்த உயிருக்கும் எப்படிப்பட்ட கெடுதலும் செய்ய இயலாத வாழை சின்னக் கன்றுக்குட்டி யிடமிருந்து கூடத் தன்னைக் காத்துக்கொள்ள இயலாத ஒரு பிறவியாய் அமைந்துள்ளதே என்று எண்ணி ஏங்கினேன்.

அதனை அடுத்து அரும்பெடுத்திருந்த முல்லைக் கொடி ஒன்று பந்தலில் படர்ந்திருந்தது. அதன் பக்கத்தில் வேலி ஓரமாகக் கப்பும் கிளையுமாக வளர்ந்திருந்த சுண்டைச் செடிகளில் நிறைந்திருந்த பூக்களுக்கும் பிஞ்சுகளுக்கும் இடையில் கூரிய முட்கள் நீட்டிக் கொண்டிருந்தன. கன்றுக்குட்டி அதன்பக்கம் போகவேயில்லை. அதனை யொட்டி முள்ளிச் செடிகள் வேலிபோல் புதராய் மண்டி யிருந்தன.

கேடொன்றுமறியாத, கேடெதுவும் செய்ய இயலாத வாழை காலை வெய்யிலில், இளங்காற்றில் என்கண்முன் அசைந்து கொண்டிருந்தன. மீண்டும், கன்றுதின்று குறையாக இருந்த அந்தக் குருத்துக்கள் என் கண்ணில் பட்டன.

அடுத்திருந்த முல்லைக்கொடியைப் பார்த்தேன். அதுவும் கேடறியாததே. மணங்கமழும் மலர்களை வழங்கி மகிழ்வித்தது. எளிய வெள்ளாடை பூண்ட காந்தியடிகளை நினைவூட்டியது. ஆனால் அதனைக் கன்றுக்குட்டி கடித்துத் தின்னவில்லை. அதன் வாய்க்கு எட்டாத உயரத்தில் அது படர்ந்து தன்னைக் காத்துக் கொண்டது.

அவற்றுக்கருகே இருந்த சுண்டைச் செடியைப் பார்த்தேன். சற்றுத் தொலைவிலிருந்த ரோசாச் செடியை நோக்கினேன். அவை தம்மைக் காத்துக் காயும் மலரும் தரும் ஆற்றல் பெற்றிருப்பதை கொண்டு நினைந்தேன்.

இறுதியில் இவற்றுக்கப்பால் தோட்டத்தைச் சுற்றிப் புதராய் மண்டியிருந்த முள்ளிச் செடிகளைப் பார்த்தேன். அவற்றின் மலர்கள் மணப்பதுமில்லை; காய்கள் பயன் நல்குவதுமில்லை. ஆனால் கழுகு மூக்கு போல் வளைந்த, கூரிய அவற்றின் முட்களோ அறியாமல் நெருங்குபவர்களைச் சதையில் குத்திக் கிழித்துவிட வல்லது என்பது என் அனுபவம்.

தோட்டத்தைச் சுற்றி ஆயிற்று. பல்லும் துலக்கியாயிற்று. அப்போது மாணவர் 'சௌ', 'அய்யா!' என்றழைத்தபடி வந்தார்.

வாய் கொப்பளித்துவிட்டு, 'என்னப்பா! என்ன இவ்வளவு காலையில்?' என்று அவரைப் பார்த்தேன்.

நின்றபடியே கண்கலங்கினார். 'ஆண்டு முழுவதும் திரட்டி வைத்திருந்த என் தேர்வுக் குறிப்புகள் அய்யா. நேற்றுக் காலையில் சொன்னேனே அந்த ஆளாகத்தானிருக்கும். இன்று காலையில் ஒன்றுகூடக் காணவில்லை அய்யா. தேர்வு நெருங்கி விட்டது. என்ன செய்வேன்' என்று திகைத்தார்.

வாழையை நினைந்து கொண்டேன். எந்தக் கேடும் செய்யத் தெரியாதவன். வந்தவர்க்கெல்லாம் சொல்லித் தருபவன் அந்த மாணவன். ஆனால் அவன் முதன்மை பெறக்கூடாது என்று ஓர் ஆசிரியரும், அவர் கை ஆளாகிய இந்த மாணவரும் இப்படி தவறான வழியில் முயல்வதை நினைந்து வருந்தினேன். 'கவலைப் படாதே, வகுப்பு நடத்துவதற்குப் பல ஆண்டுகளாகத் தயாரித்து வைத்துள்ள பாடக்குறிப்புகள் உள்ளன. மாலையில் வா. அவற்றைப் பார்த்து உனக்குத் தேவையானவற்றை எழுதிக்கொள்' என்று கூறி அவரை அனுப்பி வைத்தேன்.

வாழையும் முல்லையும் ரோசாவும் முள்ளியும் என் நினைவில் சுழன்று கொண்டிருந்தன.

சிலர் வாழ்விக்க மட்டும் தெரிந்தவர்கள்; வாழத் தெரியாதவர்கள், வாழையைப் போல. சிலர் வாழவும், வாழ்விக்கவும் அறிந்தவர்கள், ரோசா, சுண்டை போன்றவர் களோ தம் வாழ்வில், வளர்ச்சியில் பிறர் குறுக்கிடாதவாறு விழிப்பாகத் தங்களைத் தாங்களே காத்துக்கொள்ளும் திறமை உள்ளவர்கள். ஆனால் இம்மனிதர்களை வாழையைப் போன்றோ, முல்லையைப் போன்றோ, ரோசாவைப் போன்றோ, முள்ளியைப் போன்றோ அவ்வளவு எளிதாக இனங்கண்டு கொள்ள இயல்வதில்லை. தோற்றத்தால், மணத்தால், நிறத்தால் இம்மரஞ் செடிகொடிகள் தங்களைத் தாங்களே இனங்காட்டிக் கொள்கின்றன. ஆனால் மனிதர் களோ இவ்வாறு தங்களை அறிமுகப் படுத்திக் கொள்வ தில்லை; பிறர் அறிந்து கொள்ளவும் வாய்ப்புத் தருவதில்லை.

வாழையும் ரோசாவும் முல்லையும் முள்ளியும் சேர்ந்து வளர்வதே தோட்டமாக அமைகிறது. அப்படியே நல்லோர்களும் வல்லார்களும் பொல்லார்களும் கூடி இயங்குவதே இவ்வுலகம்.

ரோசாவும் சுண்டையும் வேலியின்றிக் கூட வாழ்ந்து விடும். ஆனால் வாழைக்குக் கட்டாயம் வேலி வேண்டும். முள்ளிக்கு அதுவே வேலி. அதற்கு இன்னொரு வேலி தேவையில்லை, ஆனால் வாழையைக் காக்க முள்வேலி தேவைப்படுகிறது; முள்ளிப்புதர் வேண்டியுள்ளது. வீட்டைக் காக்க கூரிய பற்களை உடைய நாய் தேவைப்படுவதுபோல, நாட்டைக் காக்க துப்பாக்கி ஏந்திய கொடிய படையாளன் வேண்டியது போல, வாழையைக் காக்க முள்ளியும் வேண்டியுள்ளது.

தோட்டக்காரன் புத்திசாலியே, என் பேத்தி தன் விரலைக் கிழித்துக் கொண்டதற்காக ரோசாவைக் குறை சொல்ல முடியுமா? முள்ளியில் என் காலைக் கிழித்துக் கொண்டதற் காக அதனைப் பழி கூற இயலுமா? அப்படித்தான் இந்த உலகமும். இங்கு எல்லோருக்கும் இடமுண்டு. இறைவன் படைத்த எல்லா உயிருக்கும் இடமுண்டு. ஆனால் யார் யாரை, எது எதனை, எது எதற்குப் படைத்துள்ளான்? என்று காரண காரியத்தோடு அறிந்து பயன்படுத்தும் மெய்யறிவை வளர்த்துக் கொள்ள வேண்டும். இதைத்தான் 'விவேக ஞானம்' என்பர். இந்த ஞானமே முள்ளும் மலரும், தீங்கும் நலனும், வெம்மையும் தண்மையும் முதலிய இருமைகள் இறைவனின் நோக்கத்திற்கும் துணை செய்யப் படைக்கப் பெற்றன என்பதை உணர்த்தும். இத்தகு இருமைவகை தெரிந்து ஈண்டறம் பூண்டலே மனிதன் வாழ்தலின் பயனாகும்.

# 5. படியாய்க் கிடக்கும் பான்மை

அங்கண் நெடியோன் நின்ற வண்ணத்தை எப்படிக் காண்பது? நேரே நின்று காணலம் என்றாலோ 'தோள் கண்டார் தோளே கண்டார்' என்றாற் போல அவனது திருமேனி முழுதினையும் ஒரு சேரக் காணமாட்டாது' "காலாழும் நெஞ்சழியும், கண் சுழலும்". நேரே நிற்பதற்கு அஞ்சி சற்று மேலே சென்று காண முயன்றால் 'கருவுடை முகில் வண்ணன், காயா வண்ணன் கருவிளைபோல் வண்ணனின் கமல வண்ணத் திருமுகத்தையும், காவிக் கண்ணையும், செம்பவள வாயினையும், காணப் பெற்றோம். எனவே அவன் திருவடியின்கீழ் ஒரு படியாய்க் கிடத்தலே உத்தமம். அப்படிக் கிடந்தால் பகவானின் திருவடியைக் கண்டு சரண்புகலாம்; திருமேனி கண்டு இன்புறலாம்; திருமுகங் கண்டு பரவசமடையலாம். அப்போது நம் 'செடியாய வல்வினை' எல்லாம் சிதைந்துபோம். எனவே படியாய்க் கிடக்கும் பான்மையே பான்மை.

படி என்றால் 'பணி', 'அடங்கு' எனப் பொருள் பெறும். 'பணியுமாம் என்றும் பெருமை', 'அடக்கம் அமரருள் உய்க்கும்' என்பர் திருவள்ளுவர். ஆண்டவன் அருகே ஜீவாத்மா செல்வதற்குத் தடையாய் இருப்பது 'யான் எனது என்னும் செருக்கே'. அந்தச் செருக்கு அழிந்து ஆண்டவனை அடைய இப்படியாய்க் கிடக்குந்தன்மை இன்றியமையாதது.

பகவானை அடைந்து பேரின்பப் பேறுபெற பல நெறிகள் உள்ளன. கர்மயோகம், பக்தியோகம், ஞான யோகம் எனப் பலவாறு அவை பேசப் பெறுகின்றன. இந்த நெறிபயில்வாரை இடையில் வீழ்த்த வல்லது அஹங்கார மமகாரங்கள். எனவே இத்தகு யோகநெறி பயில்வதற்குமுன் முதன் முதலாக, முதல் படியாகப் படியாய்க்கிடக்கும் பான்மையை உணர்ந்து கொள்ள, பகவானின் திருவடிப்பேறு பெறுவதற்கு முதல் படி படியாய்க் கிடத்தலேயாம்.

இக்கரைக்கு அக்கரை பச்சை. மனம் இதனையும் அதனையும், இவரையும் அவரையும் பற்றிக் கொண்டு சஞ்சலப்படுகிறது. அங்கும் இங்கும், அதற்காகவும் இதற்

காகவும் திரிகின்ற மனத்திற்கு, 'என் பின்னே வா நெஞ்சே எல்லாம் பெறக் கூடும்' என்று இதஞ்சொல்லி அழைத்து வந்து, யாவற்றையும் யாவரையும் அதற்குக் காட்டுதற்கு உரிய இடம் திருவேங்கடவன் திருவாயிலே, அந்த வாயில் வழியாக வந்தோரையும் வந்தோர் பெற்ற பேற்றினையும், சென்றோரையும் சென்றோர் உற்ற சிறப்பினையும் நாள்தோறும் கண்டு தன் நெஞ்சுக்குக் காட்டும் வாய்ப்பு, வேங்கடவன் வாயிற்படியாய்க் கிடப்பவர்க்குக் கிடைக்கும் நிலையான செல்வமாகும்.

அவன் அருளில் ஆழங்கால் பட்டவர்க்கு பாகவத விஷயமே, அடியார் தொண்டே பள்ளமடையாயுள்ளது. "ஆரங்கெடப் பரன் அன்பர் கொள்ளார் என்று அவர்களுக்கே வாரங்கொடு குடப்பாம்பிற் கையிட்டவர்" குலசேகர ஆழ்வார். அதனால்தான், திருவேங்கடவன் திருவாயிலில் வந்து, அவனை வழிபடுவோருள் வானவரையும், அரம்பையரையும் விட அடியாரே அவருக்கு முன்னாக, சிறப்பாகத் தோன்றுகின்றனர். அரம்பையரும் வானவரும் அடியாரும் என அடியாரைப் பின் வைக்காது, "அடியாரும் வானவரும் அரம்பையரும்" எனத் தம் பாடலில் அடியாரை முன் வைத்துப் பாடுகின்றார். "அடியார் தம் ஈட்டம் கண்டிடக் கூடுமேல் அதுகாணும் கண்பயன் ஆவதே!" "ஆடிப்பாடி அரங்காவோ! என்றழைக்கும் தொண்டரடிப் பொடி ஆட நாம் பெறில் கங்கை நீர் குடைந்தாடும் வேட்கை என்னாவதே" 'மெய்த் தழும்பத் தொழுது நாத்தழும்ப பேற நாரணா! என அழைக்கும் தொண்டர் சேவடி ஏத்தி வாழ்த்தும் நெஞ்சமே!' இப்படி எல்லாம் குலசேகர ஆழ்வார் தீராத மனக் காதல் கொண்டு அடியார்தம் தொண்டுக்கும் அன்னாருடைய திருவடித் தூசுக்கும் அவாவுற்றுக் கிடக்கின்றனர். அதனால் தான், படியாய்க் கிடத்தலின் பயனை உணர்ந்துதான் அப்படி அவர் பாடினார் போலும்.

'படி' என்றால் ஒன்றைப் போன்ற மறு வடிவு என்றும் பொருள்படும். பகவானின் திருவடிச் சேவையை அடியார்க்கும் அடியனாகும் பேற்றினைப் பெரிதும் விழையும். குலசேகரர், தம் கொள்கைக்குத் தாமே ஒரு வடிவாகிக் கிடப்பதே நன்று எண்ணியே படியாய்க் கிடக்கும் பேறு அருளுமாறு வேண்டினர் எனக் கருதவும் அத்தொடர் இடந்தருகிறது.

'படி' என்ற சொல்லுக்குப் பூமி என்ற பொருளும் தமிழில் உண்டு. படியாய்க் கிடந்து, அதாவது பூமிப் பிராட்டியாய்க் கிடந்து 'உன் பவளவாய் காண்பேனே' என்று கூட நினைக்க இடந்தருகிறது இந்த அடி. ஏனெனில் பகவானின் திவ்ய குணங்களிலும் திருவடிவிலும் மயக்கிக் காதலால் கதி பெற்றவர் மரபிலே இவரும் ஒருவர். 'மையல் கொண்டு ஒழிந்தேன் என்றன் மாலுக்கே' 'மாலெழுந்து ஒழிந்தேன் என்றன் மாலுக்கே' என்று 'கொண்டானை அல்லால் அழியாக் குலமகள் போல்' பண்டாய நான் மறைகள் பாடும் பெருமானை இவர் பரவித் துதிப்பதால் இதனை உணரலாம்.

படியாய் இருந்து என்று பாடியிருக்கலாம். படியாய் நிலைத்து என்றும் கூறியிருக்கலாம் யாப்புக் குற்றம் ஒன்றும் வாராது. இருந்து, நிலைத்து, கிடந்து என்பன எல்லாம் 'புளிமா' என்ற ஒரே வாய்பாட்டான் அமைந்தனவே. ஆனாலும் "படியாய்க் கிடந்து" என்று ஆழ்வார் பயன்படுத்தி யுள்ள பெற்றி உணர்ந்து பின்பற்றற்கு உரியது. படியாய்க் கிடந்து என்ற சொற்போக்கு,

*"எனக்கெ னச்செயல் வேறிலை யாவுமிங் கொருநின்*
*தனக்கெ னத்தகும் உடல்பொரு ளாவியுந் தந்தேன்"*

என்று அனைத்தையும் அவனுக்கு அளித்துவிட்ட அடிமைப் பெருந்திறத்தைக் காட்டும்.

இப்படி இப்படி எல்லாம் படியாய்க் கிடக்கும் பான்மை கைவரப் பெற்றால்தான் பகவானின் பவளச் செவ்வாய் காணவும், அவன் திருவாய் அருளிச் செயல்களைக் கேட்கவும் வல்லவர் ஆவோம். 'கற்பூரம் நாறுமோ கமலப்பூ நாறுமோ' எனவெண் சங்கை வினவிய காதற்பேறு நாமும் வாய்க்கப் பெறுவோம். அந்த வல்லமையும் வாய்ப்பும் பெற்று வாழ்வோமாக!

*"செடியாய வல்வினைகள் தீர்க்கும் திருமாலே*
*நெடியோனே வேங்கடவா நின்கோயிலின் வாசல்*
*அடியாரும் வானவரும் அரம்பையருங் கிடந்தியங்கும்*
*படியாய்க் கிடந்துஉன் பவளவாய் காண்பேனே"*

# 5. மூன்று பார்வைகள்

ஆப்பிள் பழம் ஒன்று மரத்திலிருந்து கீழே விழுந்தது. இளைஞன் ஒருவன் அதனைப் பார்த்தான். அவன் நாவில் எச்சல் ஊறவில்லை. அவன் கால்கள் அந்த ஆப்பிள் அருகே ஓடவில்லை. கைகள் அதனைக் கவரவில்லை. பற்கள் கடிக்க வில்லை. நா சுவைக்கவில்லை.

'வழவழப்பான ஆப்பிள் நல்ல செவ்வண்ண ஆப்பிள் அழகாக உருண்டு திரண்ட ஆப்பிள், இதழ்களுக்கு இனிமை தரும் ஆப்பிள். வெண்ணையும் மாவும் பாகும் கலந்தாற் போல நாவிற்கு மென்மையும் இனிமையும், ஊற்றின்பமும் தரும் ஆப்பிள். ஆனாலும் அவனுக்கு ஆப்பிள் தன் அன்புக்குரியவளின் கன்னத்தை நினைவூட்டவில்லை.'

கண்முன்னே விழுந்த ஆப்பிள் பழத்தைக் கண்டான். ஆசையோடு அல்ல; அன்போடும் அல்ல. 'ஏன் இந்த ஆப்பிள் கீழே விழுந்தது? அப்படியே மேலே போயிருக்கக் கூடாதா?' என்ற எண்ணத்தோடு பார்த்தான். அந்தப் பார்வைதான் அருள் பார்வை! விஞ்ஞானி காணும் அருள் பார்வை! அந்தப் பார்வை இறைவனின் வழிகள் இன்னது இன்னது என்று பார்க்கத் துணை செய்கிறது; வாழ்வுக்குப் பயன்படுத்திக் கொள்ளத் துணைசெய்கிறது.

சேவலும் பெட்டையும், காளையும் பசுவும் இணைந்து தழுவிச் செல்லுதல் எல்லோரும் காணும் காட்சியே. களிறும் பிடியும் கூடிச் செல்வதைக் காட்டிலோ, பெருங்கோயிலின் வாயிலிலோ சிற்சிலபோது காணக்கூடும். இந்தக் காட்சிகள் ஒரு நிலையில், சிலர்க்குக் காமக்கிளர்ச்சியை ஏற்படுத்தும். கலைஞன் ஒருவன் நெஞ்சில் அவை கவிதையையோ, ஓவியத்தையோ, சிற்பத்தையோ தோற்றுவிக்கும். ஆனால் இணை இணையாக அவை சென்ற காட்சி திருநாவுக் கரசருக்கு வழங்கிய உண்மையோ வேறு.

தம் தமக்கை திலகவதியார் மணப்பதற்கு உரியராகத் தேர்ந்த கலிப்பகையார் போரில் மாண்டார். அதனால் திலகவதி மணம் புரிந்து கொள்ளாமலேயே கைம்பெண் கோலம் பூண்டார். தமக்கையார் நிலை கண்ட இளைஞன்

திருநாவுக்கரசு தாமும் மணம் புரிந்து கொள்வதில்லை என்று உறுதி கொண்டார். திருநாவுக்கரசு துறவியாகவே இளமை துடுக்கான இருபது வயதைக் கடந்தார்; குடும்பமாக வாழும் முப்பதையும் கடந்தார்; பேரன், பேத்திகளைக் காணும் நாற்பது ஐம்பது ஆகிய வயதுகளையும் கடந்தார்; எண்பதையும் கடந்து விட்டார். அவர் வாழ்வு நாளின் இறுதிக்காலம். உடல் தளர்ந்தது. திருவையாற்றில் ஐயாறப்பனைக் காணத் தவழ்ந்து தடுமாறிச் செல்கின்றார். சேவல்பேடை, காளை பசு, களிறுபிடி ஆகியவற்றை அங்கே அவர் காண்கிறார். ஆனால் அவர் பார்த்த பார்வை வேறு. அது அருள் பார்வை. அப்பார்வை அவர்க்கு அவற்றிடையே, அந்த இணைகளின் இடையே கைலாயக் காட்சியை வழங்குகிறது. அவர் இறைவன் திருவடியை அவற்றிலே காண்கிறார். அங்கே இறைவன் நற்றாளைக் கண்டு அவர் தலை வணங்குகிறது. அப்போதே கற்றதனால் ஆயபயனை மானிடப் பிறவி பெற்றதனாலாம் பயனை இவர் அடைந்து விடுகிறார். அவர் கண்ட காட்சியைப் பின்வரும் திருவை யாற்றுப் பதிகப் பாடல் காட்டுகிறது.

*"மாதர்ப்பிறைக் கண்ணியானை மலையான் மகளொடும் பாடிப்*
*போதொடுநீர் சுமந்தேத்திப் புகுவார் அவர்பின் புகுவேன்*
*யாதுஞ் சுவடுபடாமல் ஐயாறடைகின்ற போது*
*காதன் மடப்பிடியோடும் களிறு வருவன கண்டேன்*
*கண்டேன் அவர்திருப் பாதம் கண்டறி யாதன கண்டேன்*

.............................................

*கோழி பெடையொடுங் கூடி குளிர்ந்து வருவன கண்டேன்*
*கண்டேன் அவர்திருப்பாதம் கண்டறியாதன கண்டேன்"*

இந்தப் பார்வை மெஞ்ஞானி கண்ட அருட்பார்வை. இறைவன் திருவடி கண்டு அதன்வழி சென்று வாழ்வின் பயனை அடைய இது துணை செய்கிறது.

*முதல் பார்வை விலங்கு மனப்பார்வை. அதனினும் உயர்ந்த அடுத்த பார்வை மனித மனப்பார்வை. தலையாய பார்வை, தெய்வப்பார்வை.*

*முதல் பார்வையில் மனிதன் எல்லாம் தனக்கெனப் பார்க்கிறான். தன் விருப்பு வெறுப்பாகவே உலகைக் காண்கிறான். அப்போது அவன் மனம் 'நான்' என்ற மையத்தையே பற்றிச் சுற்றிச் சுழல்கின்றது.*

*அதனினும் உயர்ந்தது மனிதப் பார்வை. அது அன்புப் பார்வை. அதில் தன் விருப்பு வெறுப்பும் மட்டுமன்றித் தான் காணும் பிறர் ஒருவரின், பிறிது ஒன்றின் விருப்பு வெறுப்புக்களையும் இயைத்துக் காண்கிறான். தான் அந்தப் பிறரோடு அல்லது பிரிதோடு ஓரளவு ஒத்துப் போகிறான்; சிலபோது விட்டுக்கொடுக்கிறான். பெரும்பாலும் இந்தப் பார்வை நான் நீ அல்லது நான் எனது என்ற இரண்டோடு கலந்த பார்வை ஆகும்.*

*மூன்றாவதாகப் பெரிய பார்வை, தலையாய பார்வை ஒன்று உண்டு. தெய்வ மனநிலையில் மனிதன் உலகையும், உயிரையும், அண்டங்களையும் பிண்டங்களையும் காணும் காட்சியாகும் அது. அப்போதும் அவன் 'நான்' 'நீ' கடந்து காண்கிறான். யான் எனது என்ற சுழற்சிக்கு அப்பால் நின்று காண்கின்றான். அதுவே பிறவியில் பெறவேண்டிய பார்வை ஆகும். கல்வியின் பயனும் அதுவே. நியூட்டன் முதலான விஞ்ஞானிகளும், திருநாவுக்கரசர் முதலான மெஞ்ஞானியும் பெற்ற பார்வையும் அதுவே. அதுவே மூன்று பார்வையில் தலைசிறந்த அருட்பார்வை யாகும்.*

# 7. தாயுமானவர் பாடலில் உருவகநலன்

அறிவுக் கூறும் உணர்ச்சிக் கூறும் ஒரே அளவினதாக அமையும்போது உவமை உருவாகின்றது. அறிவினும் உணர்ச்சிக்குகூறு மிகுமாயின் அங்கு உருவகம் தோற்றம் கொள்கிறது. உணர்வு பிழம்பாகும்போது படிமக்காட்சி வடிவெடுக்கின்றது. இந்த மூவகை மன நிலையிலும் தாயுமானவர் பாடுகிறார். எனவே அவர் பாடலில் உவமை (Simile), உருவகம் (Mataphor), படிமம் (Imagery) என்னும் மூவகை அணிநலங்களும் அமைந்துள்ளன. அவற்றுள் இடையில் இடம் பெறும் உருவகம் உவமையைவிட ஆழமான புலக்காட்சியை உண்டாக்க வல்லது. தமிழ்ப் புலமைச் சான்றோரால் பண்டுதொட்டு இன்றுவரை பயன்படுத்தப்பெற்று வரும் பெற்றியும் அதற்கு உண்டு. அதனைத் தாயுமான் அடிகளாரும் தாம் பெற்ற இன்ப துன்ப அனுபவத்தை உணர்த்துவதற்கு, அழகுறப் பயன்படுத்தி யுள்ளார்.

அவர் பயன்படுத்தியுள்ள உருவக் காட்சிகளைப் பண்டுதொட்டுப் பயின்று வரும் உருவக் காட்சிகள், புதிய உருவக் காட்சிகள், புதுக்கிய உருவக்காட்சிகள், ஓர் உருவக் காட்சியில் பல கருத்துக்களை உணர்த்தல், பல உருவக் காட்சிகளில் ஒரு கருத்தை விளக்கல் எனப் பலவாறு பிரித்து அறியலாம்.

**பயின்ற உருவக் காட்சிகள்:**

பிறவியைப் பெருங்கடலாகக் காணும் காட்சி தமிழ் இலக்கியத்தில் மிகப் பழைமையானதே. பட்டினத்தார் இந்தக் காட்சியின் கூறுகளை எல்லாம் ஒன்று படுத்தித் தம் மும்மணிக் கோவையில் அழகுறத் தொகுத்துரைக்கின்றார். அவர் அகவற்பாவில் பாடியவற்றையே தாயுமானவர் பன்னிருசீர் விருத்தப்பாவில் தொகுத்துப் பாடுகிறார்.

பாடல்,

*"இப்பிறவி என்னுமோர் இருட்கடலில் மூழ்கிநான்*
*என்னுமொரு மகரவாய்பட்ட*
*இருவினை எனுந்திரையின் எற்றுண்டுபுற்புதம்*
*எனக் கொங்கை வரிசை காட்டுந்*

*துப்பிதழ் மடத்தையர் மயற்கண்ட சண்டமாருதச்*
*சுழல்வந் தடிப்பச்*
*சேராத ஆகையாங் கானாறு வான்நதி*
*சுரந்ததென மேலும் ஆர்ப்பக்*
*கைப்பரிசு காரர்போல் அறிவான வங்கமும்*
*கைவிட்டு மதிமயங்கிக்*
*கள்ளவங் கக்காலர் வருவரென் றஞ்சியே*
*கண்ணருவி காட்டும் எளியேன்*
*செப்பரியா முத்தியாங் கரைசேர வுங்கருணை*
*செய்வையோ சத்தாகி என்*
*சித்தமிசை குடிகொண்ட அறிவான தெய்வமே*
*தேசோ மயானந் தமே"*

இவ்வாறு முற்றுருவகமாக இவர் பாடிய பாடல்கள் பல.

**புதிய உருவக் காட்சிகள்:**

உடம்பைக் 'காலிரண்டு நவவாசல் பெற்று வளர் காமவேள் நடன சாலை'யாக உருவகிப்பது, தவசியைச் 'சிங்கத்தோடு' ஒப்பிடுவது, தன்னை 'ஞானமத்தகஜமாக' உருவகித்துக் கொள்வது முதலியன இவர் கண்ட புதிய உருவகங்கள் எனலாம்.

**புதுக்கிய உருவக் காட்சிகள்:**

புலன்களைக் கள்ளர்களுக்கும், வேடர்களுக்கும் உருவகிப்பது பண்டைய மரபே. நாவுக்கரசர் "வளைத்து நின்ற ஐவர் கள்வர்" என்று புலன்களைக் கள்வர்க்கு உருவகிக்கின்றார். 'ஐம்புலவேடரின் அயர்ந்தனை' என மெய்கண்டார் புலன்களை வேடர்க்கு ஒப்பிட்டு உரைக்கின்றார். இப்பண்டை உருவத்தைப் போற்றி எடுத்துக் கொண்டு மேலும் புதுக்கி, ஆற்றலும் அழகும் பெறுமாறு விரித்து விளக்குகின்றார் தாயுமான அடிகளார். காட்டுப் புறங்களில் எலிகளைப் பிடிப்பதற்கு வேடர்கள் பின்வரும் வகையில் முயல்வர். ஒரு கலயத்தில் புகையை உண்டாக்கி எலி வாழும் ஒரு பொந்தில் செலுத்துவர். உள்ளே மூச்சுத் திணறி எலி வெவ்வேறு பொந்துகள் வழியே வெளிவர முயலும். அப்போது அப்பொந்துகளின் வாயிலில் நிற்கும் வேடர்கள் அது தப்ப இயலாதவாறு பிடித்து இழுத்துக் கொழுந்து

விட்டெரியும் தீயிலே வாட்டி அது துடிக்கத் துடிக்க அரை வேக்காட்டில் கடித்துச் சுவைத்துத் தின்பர். இந்தக் காட்சியை என்றோ கண்டு நெஞ்சில் கொண்டு வருந்திய தாயுமானவர் புலன்களுக்கு அதனைப் பின்வருமாறு உருவகித்துப் பாடியுள்ளார். ஐந்து பொந்துகளும் ஐந்து பொறிகள்; வேடர் புலன்கள்; தீயே காமம்; எலியே அடிகளார் உயிர். பண்டைய உருவகத்தின் விரிவை இதில் காணலாம். இந்தப் புத்துருக் காட்சியைக் காட்டும் பாடல் பின்வருமாறு:

*'வாயில் ஓர் ஐந்திற் புலன் எனும் வேடர்*
*வந்தெனை ஈர்த்து வெங்காமத்*
*தீயிலே வெதும்பி உயிரொடும் தின்ன'*

## ஓர் உருக்காட்சியில் பல கருத்துக்களை உணர்த்தல்:

பாசம், ஞானம், இன்பம், துன்பம், மனம் முதலியவற்றின் இயல்பைப் பற்பல உருக்காட்சிகளால் தாயுமானவர் படம் பிடித்துக் காட்டுவர். அவ்வாறே கடல் என்னும் ஓர் உருக்காட்சி கொண்டு பலவகைக் கருத்துக்களையும் பல்வேறு உணர்வுகளையும் கற்பார் கண்முன்னர்க் கொண்டு வருவார்.

இறைவனுடைய அருள் பேரின்பமயமானது. அஃது இடத்தால் எல்லை இல்லாதது. காலத்தால் முடிவு இல்லாதது; அதனை 'ஆனந்தக்கடல்' என்கின்றார்.

கடவுள் பற்றி எத்தனை எத்தனையோ கருத்துக்கள். எண்ணற்ற கோடி மனித மனநிலைகளுக்கு ஏற்ப ஏராளமான கடவுள் தத்தவங்களும் தோன்றியுள்ளன; இனியும் பல தோன்றக்கூடும். கடலில் தோன்றி அலைகளைக் கணக்கிட முடியுமா? அல்லது இனித் தோன்றப் போவனவற்றையேனும் எண்ணிச் சொல்ல முடியுமா? அவற்றின் நீட்சியை, எழுச்சியை, வீழ்ச்சியை எப்படி எடுத்துரைப்பது? இத்தனைக் கருத்துக்களும், உணர்வுகளும் தோன்றுமாறு கடலை, "நவங்கொள் தத்துவத் திரையெறிகடல்" என்று உருவகிக் கின்றார்.

அமைதியான கடலில் விழுந்தால் மெல்ல மெல்ல நீந்திக் கரை சேரலாம்; அல்லது கரையில் உள்ள எவருடைய கண்ணிலேனும் பட்டு அவரால் காப்பாற்றப் பெற்றுக் கரை சேரலாம். ஓசையோடு பொங்கி எழும் கடலில் விழுந்தவன்

மீள இயலாது. அப்படித்தான் பெண்ணாசையும் அமைதியும்,அடக்கமும் உள்ள நல்ல பெண்ணிடத்தே கொண்ட காதலில் இருந்து மீள்வதே அரிது. என்றாலும் வீட்டுப்பேற்று முயற்சிக்கும் ஞான குரு காட்சிக்கும் அந்த நல்ல இல்லற வாழ்வில் வழி உள்ளது. அஃது அவற்றுக்குத் தடையாக இல்லை. ஆனால் ஆரவாரத்தோடு ஆடும் பரத்தையர்பால் கொண்ட காமத்தொடர்பிலிருந்து ஒருவன் எழுவது எப்படி? பிறர் அவனைக் காப்பதுதான் எவ்வாறு? அவனைக் கடவுள்தான் காப்பாற்ற வேண்டும். இந்தக் கருத்துக்கள் எல்லாம் 'கோதையர் மோகக் குரை கடலில் அழுந்தாத வண்ணம்' என்ற உருவகத்தில் குமிழிடக் காணலாம்.

கடலில் ஆறுகள் பல வந்து கலந்து கடல் வண்ணம் ஆகின்றன. அந்த ஆறுகள் தோன்றக் காரணமாக இருந்ததும், அந்தப் பெருங்கடலே. அந்த ஆறுகளைத் தன்னுள் அடக்கித் தன்மயம் ஆக்கிக்கொண்டதும் அந்த மாபெருங்கடலே. உலக ஆறுகளுக்கு உரிய நீரை மேகங்கள் பல தன்பால் வந்து முகந்துகொண்டு சென்றபோதும் தான் தன்னளவில் குறைந்துவிடவில்லை. பின்பு மழையாய்ப் பொழிந்து ஆறாகப் பெருகி ஓடிவந்து கலந்தபோதும் தான் பொங்கிக் கரைகடந்து விடுவதில்லை. அது கடலின் இயல்பு. மோனத்தன் பண்பும் அதுவே; மோனமே அனைத்துக்கும் அடிப்படை. அதனை அனைத்தும் அடைகின்றன. எல்லாம் தோன்றுவதும் ஒடுங்குவதும் அதனுள்ளேயே. இத்தகைய தோற்ற ஒடுக்கங்களால் மோனத்திற்கு எத்தகைய நிறைகுறையும் ஏற்படுவதில்லை. அது முழுமை. அதனை 'மோனவாரி' என்று குறிப்பர்.

கடல் கடத்தற்கு அரிதாக உள்ளது எங்கும் எப்போதும் சூழ்ந்து உள்ளது. அதனுள் விழுந்தவன் எத்திசை நோக்கி நீந்திச்சென்றாலும் கண்ணுக்கு எட்டிய சேய்மைவரை கடத்தற்கரிய நீர் சூழ்ந்து கொண்டிருப்பதைக் காண்கிறான். இப்படியே தான் பிறவியும். சீவனை அது என்றும் சூழ்ந்து கொண்டிருக்கின்றது. அதனை மீறிக் கடந்து அப்பால் செல்ல இயலாது. பிறந்து பிறந்து உயிர் உழன்றுகொண்டே இருக்கின்றது. இந்தக் கருத்தினைப் 'பிறவி வளை கடல்' என்ற உருக்காட்சியால் உணர்த்துகிறார் தாயுமானவர்.

கடல் எல்லை இல்லாமல் பெருகுவது; வற்றாத ஆழங்காண முடியாதது; கங்குகரையற்றது; திமிங்கிலம், சுறா

முதலிய கொடிய நீர்வாழ்வனவற்றைக் கொண்டது; எழுச்சி உடையது; உயர்ந்தோங்கு மலைகளோடு உலகைச் சூழ்ந்து அச்சுறுத்துவது; கண்ணில் காணும் அந்தக் கடலின் காட்சியைக் கண்ணுக்குப் புலப்படாத பாசத்தின் உருவாக்கி உணர்துகின்றார், தாயுமானவர் 'பாசக்கடல்' 'ஆசைக்கடல்' என்ற தொடர்களில்.

## பல உருவக் காட்சியில் ஒரு கருத்தை உணர்த்தல்

இவ்வாறு கடல் என்னும் காட்சி ஒன்றைக் கொண்டு கருத்து பலவற்றை உணர்த்தியவாறே கருத்து ஒன்றைப் பல உருவக் காட்சிகளின் மூலம் தாயுமானவர் விளங்குவதும் இங்குக் குறிக்கத்தக்கது. பதி, பசு, பாசம் என்னும் முப்பொருளில் பாசம் என்பதனைப் பின்வரும் உருக்களைக் கொண்டு தாயுமானவர் உணர்த்துகின்றார்.

இறைவன் அருள் பழுத்து ஒழுகும் தேவதரு. அது கேட்டதை எல்லாம் கொடுக்கும். அதனைக் கண்டறியாமல் வழி தவறி, இருண்ட கானகத்துள் நுழைந்து வெளியே வர இயலாது. அங்கு வாழும் கொடிய வனவிலங்குகளைக் கண்டு அஞ்சி நடுங்குகின்றான் மனிதன். அத்தகைய காடே பாசமாகிய அடவியாகும். அதனைப் 'பாசாடவி' என்கிறார் அடிகளார். அதனுள் நுழையாதவனே இறைவனை அடைய முடியும்.

எத்தனையோ பொருள்கள் உலகில் உள்ளன. நமக்கு வேண்டிய நல்லனவும் உள்ளன; வேண்டாத தீயனவும் உள்ளன. எது நன்று, எது தீது, எது வேண்டும், எது வேண்டா என்று நம்மால் கண்டு கொள்ள முடிவதில்லை. இப்படியே தான் பாசமும் நம் கண்ணை மறைக்கின்றது; கருத்தை மயக்குகின்றது; எனவே பாசத்தை இருளாக்கிப் 'பாச இருள்' என்பர் அடிகளார்.

காட்டாற்றில் எப்போது வெள்ளம் வரும், எப்படி வெள்ளம் வரும், எவ்வளவு வெள்ளம் வரும் என்று முன்கூட்டிச் சொல்ல இயலாது. மேலும் காட்டாற்றுக்கு

நெறியான கரை ஒன்றும் கிடையாது. அவ்வப்போது புதுப்புது வழிகளில் அறுத்துக் கொண்டு ஓடிப் பயிர் களுக்கும், உயிர்களுக்கும் பற்பல கேடுகளை விளைவிக்கும். ஆசையும் அப்படித்தான். அதனை 'ஆசையாம் கானாறு' என்ற காட்சி மூலம் அடிகளார் தெளிவு செய்கிறார்.

அங்கும் இங்கும் செல்லாமல் நின்ற இடத்திலேயே நிற்கும் மரங்களைவிட நீண்டு நெளிந்து செல்லும் மண்புழுப் பிறவி எவ்வளவோ உயர்ந்தது. மரம் போல் அஃது ஒரே இடத்தில் கட்டுண்டு கிடப்பதில்லை. நினைத்த நினைத்த இடத்திற்கெல்லாம் நெளிந்து நெளிந்து செல்ல அதனால் இயலும். என்றாலும், அதனருகே வந்தமர்ந்து பிடித்துத் தின்னும் பறவைகளைக் காணும் சக்தி அதற்கில்லை. காட்சி அளவில் அது கட்டுண்டு கிடக்கின்றது. இப்படி ஒவ்வொரு வகையில் கட்டுண்ட உயிர்ப் பிறவி பலவற்றுள் மானுடம் எவ்வளவோ உயர்ந்தது ஆனால், அதுவும் ஆசை வயப்பட்டு உண்மையை எண்ணவும் நன்மையில் செல்லவும் இயலாமல் கட்டுண்டு கலங்குகிறது. அதனை அடிகளார் 'பாசக் கட்டு' என்ற உருவகத்தால் உணர்த்துகின்றார்.

உண்ணும் பொருள் உலகில் எத்தனை எத்தனையோ உள்ளன. அவை எல்லாம் உயர்வாழ்வுக்காக, உயிர்வாழ்வுக் காகப் படைக்கப்பட்டனவே. ஆனால் அவற்றுள் நஞ்சு கலந்து விடின் அவற்றின் நல்லியல்பு அழிந்துவிடும். வாழ்விக்கத் தோன்றிய அவை உயிர்களைக் கொல்ல துவங்கிவிடும். உலகின் இயல்பும் இதுதான். அது மானிட வாழ்வுக்காக, வளர்ச்சிக்காகப் படைக்கப்பட்டதே. ஆனால் ஏனோ ஆசை என்னும் நஞ்சுக் கையோடு, நஞ்சு நாவோடு, நஞ்சுக் கண்ணோடு, நஞ்சுச் செவியோடு, நஞ்சு மனத்தோடு அதனை மனிதன் தீண்டும்போது. இந்த உலகம் நஞ்சுமயமாகிறது. ஆசை அப்படி உலகை நஞ்சாக்கவல்லது. எனவேதான் 'வேட்கை, நஞ்சு' என்று பாசத்தை உருவாக்கிக் காட்டு கின்றார் அடிகளார்.

நஞ்சு உடனே கொல்லும்; முதலில் உடல் உறுப்புகளைக் கொல்லும். மதுவோ மெல்ல மெல்லக் கொல்லும், முதலில் உயிர்ப் பண்பாகிய இரக்கம், அறிவு, அறம் முதலிய நல்லியல்புகளை நாசம் செய்யும். பின் குடிகாரனையும் கொல்லும். அந்த மயக்கத்தில் கயிறு பாம்பாகவும், பாம்பு கயிறாகவும் தோன்றும். இவற்றை யெல்லாம் 'வேட்கை மது' என்னும் உருவகத்தால் உணர்த்துகிறார்.

பிசாசு பிடித்தவனுக்குத் தன்னுணர்வு இருப்பதில்லை. தாய், தந்தை, மனைவி, மக்கள் என்ற அறிவையும் அவன் இழந்துவிடுகிறான். நண்பர், தலைவர், கடவுள் என்ற அறத் தெளிவும் அவனைவிட்டு நீங்கிவிடுகின்றது; அஃது ஆட்டுகின்ற ஆட்டுக்கு ஏற்ப அதன் கைப்பாவையாக ஆடுகின்றான். ஆசையும் அப்படியே. அதுவும் தான் பற்றிய ஒருவனின் அன்புணர்வு, அறத்தெளிவு, அறநெறி ஆகிய வற்றைக் கெடுத்துத் தன்போக்கில் அவனை ஆட்டுவிக் கின்றது. இதனை ஆசைப் பிசாசு' என உருவகித்துக் காட்டு கிறார் அடிகளார்.

இவ்வாறு உருவக நலம் பல தோன்றத் தாம் உணர்ந்த சமயதத்துவ உண்மைகளை யெல்லாம் பிறரும் உணருமாறு உணர்த்தும் மகாகவி தாயுமானவர் ஆவார். அதனால்தான் அமரகவி பாரதியாரும்,

*"என்றும் இருக்க உளங் கொண்டாய்*
*இன்பத் தமிழுக்கு இலக்கியமாய்*
*இன்றும் இருத்தல் செய்கின்றாய்*
*இறவாய் தமிழோடு இருப்பாய்நீ;*
*ஒன்று பொருளஃ தின்பமென*
*உணர்ந்தாய் தாயு மானவனே*
*நின்ற பரத்து மாத்திரமோ*
*நில்லா இகத்தும் நிற்பாய் நீ!"*

என்று பாடிப் பரவுகின்றார்.

# 8. செத்த நாயும் சித்தாந்தமும்

சித்து என்பதன் பொருள் அறிவு, ஞானம் என்பதாகும். சித்தின், அறிவின் முடிந்த முடிபே சித்தாந்தமாகும்.

முல்லை மலர் வெண்மையாக இருக்கிறது என்பது கண்வழியே பெறும் அறிவு. மாலையில் முல்லை மலரும் போது மணங்கமழ்கிறது என்பது மூக்கால் பெறும் அறிவு, மலர் மிக மென்மையாக வழவழப்பாக, மிருதுவாக, குளிர்ச்சியர்க இருக்கிறது என்பதெல்லாம் தொடு பொறியால் பெறும் அறிவு. தனித்தனியே காணும் இந்த் அறிவு குறை அறிவு. முல்லை மலரைக் கண், கை, மூக்கு முதலிய பொறிகளால் துய்த்த துய்ப்பு மனதுள் சென்று முல்லை பற்றிய ஒரு பொதுவான, ஒரு முழுமையான கருத்தைத் தருகிறதே, அதனை முல்லை மலரைப் பொறுத்தவரை நிறை அறிவு எனலாம்.

முல்லையின் அமைப்பு, வகை, இனம், இன வளர்ச்சி, உரிய எரு, மண் முதலியன பற்றியெல்லாம் அறியும் அறிவு அறிவியல் அறிவு. அதாவது விஞ்ஞானம்.

அதற்கு அப்பாலும் ஓர் அறிவு நிலை உண்டு. முல்லை மலர் மாலையில் மலர்கிறது; மணங்கமழ்கிறது. தாமரை காலையில் விரிகிறது. குறிஞ்சி பன்னிரண்டு ஆண்டுகட்டு ஒருமுறையே மலர்கிறது. சில மலர்கள் வண்ணம் நிறைந்து கண்ணுக்கு இனிய காட்சி தருகின்றன. சில மலர்கள் மணங்கமழ்ந்து மூக்கிற்கு விருந்தாகின்றன. குறிஞ்சி, வேம்பு முதலான மலர்கள் நிறைந்த தேன் தருகின்றன.

சில மலர்கள் ஏன் வண்ணத்தால் சிறந்துள. சில ஏன் பெரிதும் மணங்கமழ வல்லவையாய் உள? தேன் நிறைந்துள மலர்களுள் குறிஞ்சி சிறந்துளது எதனால்? ஆலுக்கு ஏன் விழுது? அரசுக்கு ஏன் இல்லை?- இவற்றுக்கு அடிப்படையில் அமைந்துள்ள படைப்பின் நுட்பம், அருள் நோக்கி, இறைக்காட்சி யாது எனக் கண்டறிவதே சித்தாந்தமாகும்.

இத்தகு சித்தாந்த அறிவு மின்னொளி போல அவ்வப் போது நம் வாழ்வில் குறுக்கும் நெடுக்குமாகக் கணப்போது தோன்றி மறைகின்றது. அந்த ஒளியைப் பற்றிக் கொண்டு, பிறவற்றையெல்லாம் சிறிதுபோது மறந்து அதனையே தொடரும்போது, அது ஒரு சித்தாந்தத்தைக் காட்டி நிற்கக் காணலாம்.

அப்படித்தான் அன்று காலையில் வயல்வெளி நோக்கி நடந்து செல்கையில் கொடிய நாற்றம் ஒன்று வந்து என் மூக்கைத் துளைத்தது. கைத்துண்டால் மூக்கை மூடிக் கொண்டு விரைந்து அந்தப் பகுதியைக் கடந்தேன். கடக்கும்போதே சாலை ஓரமாகச் செத்தநாய் ஒன்றன் உடல் உப்பியிருப்பதையும், அதன் உடலில் அங்கும் இங்கும் புண்பட்டு உடைந்திருப்பதையும், அவ்வாறு உடைந்த இடங்களைச் சுற்றி ஈ மொய்த்துக் கொண்டிருப்பதையும் கண்டேன். கண்டுகொண்டே, மூக்கைப் பொத்திக் கொண்டே விரைவாக அந்தப் பகுதியைக் கடந்து, அப்பால் போனேன்.

அங்கே ஒரு மதகடி. அதன்மேல் அமர்ந்தேன். 'அப்பா! என்ன கொடிய நாற்றம்!' எனக்குள் முணுமுணுத்துக் கொண்டேன். திடீரென என்னையும் அறியாமல் என்னுள் ஒரு கேள்வி எழுந்தது. ஏன் இந்த நாற்றம் உண்டாகிறது? அறிவியல் வழி ஏதோ விடைக் கிடைத்தது. ஆனால் மனம் அமைதி அடையவில்லை. மரம் பட்டுப் போகிறது. பல நாள் இலை இழந்த கிளை ஒடிந்து அப்படியே நிற்கிறது. நாற்றம் ஒன்றும் இல்லையே நாய், நரி, ஆடு, மாடு முதலியவற்றின் உடலுக்கு மட்டும் ஏன் இந்தக் கொடிய நாற்றம் என்று மேலும் மனம் உளைந்தது. இத்தகு மாண்ட உயிர்களின் உடல்கள் மண்ணுக்கு நல்ல உரமாகும். ஒருமுறை இறந்துபோன பூனையை ஏன் பாட்டி நாரத்தை மரத்தின் கீழே புதைத்தாள். அந்த ஆண்டு நிறைய நாரத்தங்காய்கள் கிடைத்தன. எனவே உரமாகும் இந்தப் பொருள்களைப் பூமியில் புதைத்தல் வேண்டும் என உலகிற்கு உணர்த்தத்தான், மனிதனுக்கு அறிவுறுத்தத்தான் இப்படி நாற்றத்தை உண்டாக்குகிறதோ என்று நினைத்தேன்.

அப்போது அங்கே திரும்பிப் பார்த்தேன். காகங்கள், பருந்துகள் சில வட்டமிட்டுக் கொண்டிருந்தன. ஓகோ இப்படிப்பட்ட வேறு உயிரினங்களுக்கு உணவாவதையும் நோக்கமாகக் கொண்டதுதானோ இந்த நாற்றம் என்ற நினைவு வந்தது.

அப்போது என் பேராசிரியர் ஒருநாள் விலங்குக் காட்சி சாலையில் என்னோடு பேசிக்கொண்டிருந்த போது கூறியது நினைவுக்கு வந்தது. "செளரி! புலி, சிங்கம் முதலிய கொடிய விலங்குகளைக் கடவுள் ஏன் பதைத்து உலவவிட்டிருக்கிறார் என்று நினைத்துப் பார்த்திருக்கிறாயா?"

"இல்லையா அய்யா! ஏன்? எளிய மான்களையெல்லாம் அடித்துக் கிழித்து அவை உண்கின்றன. ஏனோ இப்படிக் கொடிய விலங்குகளை இறைவன் படைத்திருக்கிறான்."

'நான் இப்படி எண்ணுகிறேன் செளரி! நாட்டில் தோட்டிகள் உண்டு; காட்டில் தோட்டிகள் இல்லை யல்லவா? மாண்டு மடிந்துபோன உயிரினங்களால் காடே நாறிப்போகாதிருக்கத்தான் கடவுள் புலி சிங்கம் முதலிய இந்தத் தோட்டிகளைப் படைத்திருப்பார் என்று, இன்னும் என்னவோ சொல்லத் தயங்கி நிறுத்தினார்.'

'அப்படியானால் உயிரோடு வாழ்கின்ற மான், மாடு முதலியவற்றை அவை ஏன் கொன்று தின்கின்றன என்றவாறு, அவரை ஏறிட்டுப் பார்த்தேன்.'

"ம்...ம்... எண்ணினேன். இப்படி ஒரு விடை கிடைத்தது. "வேலையில்லாத திண்டாட்டம் நாட்டில் ஏற்பட்டதுபோல, உயிரின இயற்கைச் சாவு குறைந்த போது, உணவில்லாத திண்டாட்டம் ஏற்பட்டது. சாவு குறைந்து புலியும் சிங்கமும் மிகுந்துவிட்டதாலும், இப்படிப்பட்ட நெருக்கடி ஏற்பட்டிருக்கலாம்" என்றார்.

"என்னவோ இதில் நியாயம், அறம் இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை" என்று வானத்தைப் பார்த்தவாறு எனக்குள் உரத்துக் கூறிக்கொண்டேன்.

அவர் சிரித்தார். தொடர்ந்தார். காட்டில் மருத்துவமனை இல்லை. நாட்டில் நோய் நொடி வந்தவரைக் கவனித்து மருத்துவம் செய்து துன்பமின்றிக் காப்பாற்ற எத்தனையோ வசதிகள் உள்ளன. ஆனால் காட்டில்? நோய் நொடியால், முதுமையால் நீண்டகாலம் வாடி வருந்தாமலிருக்கவும், இந்தத் தோட்டிகள் பயன்படுகிறார்கள். ஏனெனில் முதிர்ந்த, மெலிந்த, நோயுற்ற விலங்குகள் தானே இவற்றின் வாயில் அகப்படுகின்றன என்றார் என்னை ஊடுருவிப் பார்த்தவாறே.

எனக்கென்னவோ இன்னும் திருப்தி ஏற்படவில்லை. அவர் அதனை உணர்ந்து கொண்டவர் போல, “இப்படியும் நினைக்கிறேன் சௌரி! இறைவன் வாழ்விற்கெனச் சில அடிப்படை அறங்களை வகுத்துள்ளான். அவற்றுள் ஒன்று விழிப்புணர்வு (ஜாக்கிரதை உணர்வு). அந்த விழிப்புணர்வில் எப்போது தவறுகிறோமோ அப்போதெல்லாம் தண்டனை ஏற்படுகிறது. இந்த விலங்குகள் தங்கட்குள் பகையால், காமத்தால், உணவுப் போரட்டத்தால் கால, இடச் சூழ்நிலையை மறந்து போராடும் போதே பெரிதும் அகப்பட்டுக் கொள்கின்றன” என்று கூறியபோது படைப்பின் நுட்பம் ஓரளவு புலப்படுவது போலக் காலைக் கதிரின் செவ்வொளி சிதறல்கள் கிழக்கே வானை கிழித்துக் கொண்டு தோன்றின.

# 9. வேமனவும் ஔவையாரும்

இன்று தெலுங்கு நாட்டில் அனைவராலும் அறிந்து போற்றப் பெறும் புலவர் பெருமகனார் வேமன கவி ஆவர். தெலுங்கு நாட்டில் மட்டுமன்றி, அதனைச் சுற்றிச் சூழ்ந்துள்ள திராவிட மொழி பயிலும் பிற மாநிலங்களிலும் வேமனவின் புகழ் விளக்கம் பெற்றுள்ளது. ஆயிரத்துத் தொள்ளாயிரத்து இருபத்து ஆறிலேயே, அதாவது சற்று ஏறக்குறைய ஐம்பத்தைந்து ஆண்டுகட்கு முன்னரேயே, 'வேமன்ன பத்தியம்' என்ற நூல் ஒன்று தமிழ் மொழியில் தோன்றி யுள்ளமை இதனை வலியுறுத்தும். பதினேழாம் நூற்றாண்டில் இராயல சீமைப் பகுதியாகிய சித்தூர், கடப்பை மாவட்டப் பகுதிகளில் வாழ்ந்தவராகக் கருதப்பெறும் கவி வேமன பாடிய பாடல்கள் இரண்டாயிரத்து எழுநூற்றுக்கும் மேலாகும்[1]. இந்தப் பாடல்கள் கூறும் கருத்துகள் பலவகையின. சிறப்பாக மெய்ப்பொருள் உண்மைகளையும், இரசவாத வித்தைகளையும் உரைப்பன பல; அவை தமிழ்நாட்டுச் சித்தர் பாடல்களோடு, சிறப்பாகச் சிவவாக்கியர் பாடல்களோடு ஒப்பிட்டு உணரத்தக்கன. சாதிசமய சீர்திருத்த பாடல்கள் சில; அவை இராமலிங்க அடிகளார் பாடல் சிலவற்றோடு இணைத்து வைத்து நோக்கத்தக்கன. அனைவருக்கும் பொதுவாகப் பயன்படும், அனைவராலும் போற்றப்பெறும் அறம், பொருள் பற்றிய பாடல்கள் பல. எனவே அவை திருக்குறளோடு ஒப்ப வைத்து ஆயப்பெறுவதில் வியப்பில்லை. நீதி நெறிகளை விளக்கிக் கூறும் பாடல் சிலவும் வேமன பாடல்களில் இடம் பெற்றுள்ளன. அவையே இங்கு அவ்வையார் பாடல்களோடு ஆயப் பெறுகின்றன.

கவி வேமன வாழ்வு பற்றியும், அவர் பாடல் நலங் குறித்தும் பல நூல்கள் இன்று தெலுங்கில் தோன்றியுள்ளன[2]. அவற்றின் மூலமாக அறியப் பெறுவன. கவி வேமன வளமான குடியில் பிறந்தவர்; உழவுத் தொழிலில் ஈடுபாடு கொண்டவர். துறவு பூண்டு திகம்பரராகிப் பாமரமக்களின் இன்ப துன்பங்

---

1. வேமன பத்யமுலு: பதிப்பு. வி. வேங்கடேசுவர சாத்திரிலு.

*களைக் கண்டு, தெளிந்து அனைவருக்கும் விளங்குமாறு, ஒரு முறை படித்ததுமே உள்ளத்தில் நின்றுவிடும் இயல்புடைய 'ஆடவலதி'* என்னும் இனிய பாவகையில் எளிய உவமைகள் அமையப் பாடல் பல பாடியவர் என்பனவாகும்.*

*இவர் கையாளும் உவமைகள் மக்கள் வாழ்விலிருந்து உருவாயினவாக இருத்தலின், மக்கள் கவிஞராக இவர் இந்த மாநிலத்தில் சிறப்பிக்கப் பெறுகிறார். பின்வரும் பாடல் ஒன்றில் அமைந்துள்ள உவமை அடுக்குகள் மேலே சொன்ன உண்மைக்கு அரண் செய்வன.*

*கணவன் மனைவி வீட்டுப் போராட்டத்தால் தோன்றும் நெஞ்சத் துன்பத்தை, செருப்பில் புகுந்து கொண்டு காலில் நெருடும் கல்லுக்கும், செவியில் புகுந்து கொண்டு ரீங்காரம் செய்யும் ஈக்கும், கண்ணில் விழுந்து உறுத்தும் தூசுக்கும், காலில் தைத்த முள்ளுக்கும் பின்வருமாறு ஒப்பிடுகின்றார்:*

> *"செப்புலோனி ராயி செவிலோனி ஜோரீக*
> *கண்டியந்து நலுசு காலி முல்லு*
> *இண்டிலோனி போரு இந்திந்த காதையா*
> *விஸ்வதாபி ராமா! வினுர வேம!"*

*'மந்திரித்துத் தரும் தீர்த்தத்தைத் தலையில் தெளித்துக் கொள்வதைவிட, நாவிதர் தரும் தண்ணீரைத் தலையில் தடவிக் கொள்வது பயன் மிக்கது?' என்ற*

> *"மந்த்ர ஜலமுகன்ன மங்கலி ஜலம் கெச்சு"*

*இவரது தொடர் இவர்தம் சீர்திருத்தப் போக்கைக் காட்டும்.*

---

2\. (அ) வங்கூரி சுப்பாராவ், வேமன.

(ஆ) ஆருத்ர, சமக்ர ஆந்திர சாகித்யமு.

(இ) மருபூரி கோதண்டராமரெட்டி பிரஜாகவி வேமனயோகி

(ஈ) நார்ல வெங்கடசுவரராவ் 'Vemana', 1969, பதிப்பு சாகித்ய அகடமி, தில்லி.

* 'ஆடவலதி' என்பது ஐஞ்சீர் நான்கடி கொண்ட ஒருவகை பா ஆகும்.

'அவ்வையார்' என்றதும் கோலூன்றிய பாட்டி ஒருவரின் உருவமே இன்று மக்கள் கண்முன் தோன்றும்; 'அவ்வைக் கிழவி நம்கிழவி' என்ற கவிமணி பாடல் வரியும் அவர் நாவில் தவழும். ஆனால் உண்மையில் அவ்வை பெண் ஒருவரின் முதுமையைக் குறிப்பதில்லை. இன்று தெலுங்கில் வழங்கும் 'அவ்வா' என்று சொற்பொருளில் அன்று தமிழில் அச்சொல் பயிலவில்லை. வேண்டுமாயின் அறிவின் முதிர்ச்சியை, அனுபவ வளர்ச்சியைக் குறிப்பதாகக் கொள்ளலாம். சங்க கால அவ்வை பற்றி வரும் 'மடவரல் உண்கண் வாணுதல்' என்னும் புறப்பாட்டுத் தொடர்[3] அழகிய, இளைய சங்ககால அவ்வையைக் குறிக்கும்.

அறிவிலும் பண்பிலும் சிறந்த பெண்கள் 'அவ்வை' என்றழைக்கப் பெற்றதாகத் தமிழ்க் கலைக் களஞ்சியம் விளக்குகிறது[4] சீவக சிந்தாமணி, துறவு பூண்ட பெண்டிரை 'அவ்வை' என்ற சொல்லால் குறிப்பிடுகிறது.[5]

'அவ்வையார் ஒருவர் தானா? பலரா?' என்பது ஒரு கேள்வி. கற்றார் அனைவரும் 'அவ்வையார் பலர்' என்னும் கருத்தில் அய்யங் கொள்ளார். புராணச் செய்திகள் புகுந்த இடைக்காலத்தில், அற்புதச் செயல்களுக்கு ஆற்றலும் ஆக்கமும் வாய்த்த பிற்காலத்தில், அவ்வை பலர் ஒருவராக உருவாக்கப் பெற்றனர். எனினும் அவ்வையார் பெயரில் புலமைச் செல்வியர் பலர் தமிழ் மண்ணில் தோன்றி அவ்வப்போது விளங்கி வந்துள்ள உண்மையைத் தமிழ் இலக்கிய வரலாற்றினை முறையாகப் பயின்றார் எல்லோரும் ஒப்புக் கொள்வர்.

அதியமான் நெடுமான் அஞ்சியால் போற்றப் பெற்ற சங்ககால அவ்வையார், சுந்தரர், சேரமான் காலத்து அவ்வையார், நீதி நூல்கள் பாடிய இடைக் கால அவ்வையார், ஞானக்குறள் பாடிய பிற்கால அவ்வையார் எனப் பலர் வாழ்ந்து பாடல் பல பாடித் தமிழை வளப்படுத்தியுள்ளனர். இந்த அவ்வையாருள் இடைக் கால அவ்வை சில இனிய தனிப் பாடல்களும் பாடியுள்ளார். பிற்காலத்தே புராணச் செய்திகளுக்கு இணங்க அவ்வை கதை பாடவந்த நாடகத்திறனும் கற்பனை வளனும் வாய்ந்த புலவர் சிலர் அவ்வையார் பெயரில் தாங்களே சிற்சில பாடல்களைப் பொருத்தமாகப் பாடி அவ்வையார் பலர் வாழ்வையும்

ஒருவருடையதுபோல உருவாக்கினர். அவையாவும் இன்று 'தனிப் பாடல் திரட்டுகளில்' கலந்து அவ்வையார் பாடல்களாக அமைந்துள, இத்தகு அவ்வையார் பலருள் மூதுரை, நல்வழி பாடிய அவ்வையாரும் ஒருவர். அவர் பாடல்களே இங்குத் தெலுங்குக் கவி வேமன பாடல்களுடன் ஒப்பிடப் பெறுகின்றன.

சமுதாயம், கல்வி, சமய ஒழுக்கம், இல்வாழ்வு இவை பற்றியெல்லாம், இருவரும் ஒத்த கருத்துடையவர்களாக, ஒருவர் கருத்துக்கு இன்னொருவர் விளக்கம் தருபவராகப் பாடிச் செல்கின்றனர்.

**சமுதாயம்**

சமுதாயத்தின் அடிப்படை பொருள். 'பொருள் இல்லார்க்கு இவ்வுலகம் இல்லை' என்றார் பொய்யா மொழியார். அதனைச் சற்று விரிவு படுத்தினாற்போல 'இல்லானை இல்லாளும் வேண்டாள், ஈன்றெடுத்த தாயும் வேண்டாள்' என்கிறார் அவ்வையார். 'தலைப் பாகை, நல்லாடை, பொன்னணிகள் உடையவர்களையே உறவினர் மதிப்பார்கள் என்கிறார் வேமன.'

> *"பாக பச்சடம்பு பைகம்பு சொம்முலு*
> ......................
> *கதுலுவாரினைன கைகோடுபந் துவுல்*
> .................. *(522)**
>
> *"பரகலேமிசே பந்துவுல் பகவாரு"* *(799)*

என்ற பாடலில் பொருளின்மையினாலே உறவினர் பகைவர் ஆவர் என்று மேலும் விளக்கிச் செல்வார். 'கையில் பொருள் இருந்தால், கல்லாதவனைக்கூட எல்லோரும் புகழ்வர்' (நல்வழி 34) என்கிறார் அவ்வையார். வேமனர் பொருள்

3. புறநானூறு 89 : 2
4 கலைக்களஞ்சியம், பகுதி 2. பக். 756.
5. சீவக சிந்தாமணி. பா. 2637.

* இங்கு குறிக்கப்பெறும் வேமன பாடல் எண்கள், 'வேமன பத்யமுலு' எனும் தமிழ் நூலினைப் பின்பற்றி யனவாம்.

இருப்பின் இழிந்தவனைக் கூட உலகம் போற்றும்' என்று, "பூசபோகு பசிகி" எனத் துவங்கும் பாடலில் குறிப்பார்.

வறுமையால் விளைவது பசிக்கொடுமை. 'வயிறே! உன்னோடு வாழ்தல் அரிது' (நல் 11) என்பார் அவ்வையார். வேமனவோ, "புலியொடும் வாழலாம் ஆனால் கலியோடு (பசியோடு) வாழ்தல் இயலாது (179)" என்பார்.

'நாழி அரிசிக்காக மானுடத்தில் குறிக்கோளை மறந்து பாவித்துப் பராண்டும், பாட்டிசைத்தும் மனிதன் வாழ்நாளைப் பாழ்நாளாக்குவதை (நல் 19) நினைந்து அவ்வையார் வருந்துவார். பசிவந்திட மானம், குலம், கல்வி முதலிய பத்தும் பறந்துபோம் (நல் 26) என்பார் அவ்வையார். 'வாழ்வின் நன்னெறிகளும், தூய முறைகளும் பசியினால் கெடும்' என்பதை, 'ஆகலிவலெ செடுனும ஆசார க்ரம மெல்ல' (402) என்பார் வேமனர்.

சமுதாயப் பண்பினை உருவாக்குவதில் பழங்குடியில் பிறந்து வளர்ந்தோர்க்கு சிறந்ததோர் இடம் உண்டு. அவர்தம் பண்பினை இருவரும் ஒரே வகை உவமையைக்கொண்டு வெவ்வேறு கோணங்களில் காணுகின்றனர். 'சந்தனம் தேய்ந்த போதும் மணத்தில் குறைவதில்லை. உயர்குடியில் பிறந்தோர் வளங்கெடினும் பண்பில் கெடுவதில்லை' (மூது 28) என்பார் அவ்வையார், சந்தன மரம் ஒன்றினால் தோப்பொன்று சிறப்புறுவதைப்போல நல்லான் ஒருவனால் குடி உயரும்' எனக் "குலமுலோன னொகொடு" (525) என்ற பாடலில் குறிப்பர் வேமன.

சாதி இரண்டொழிய வேறில்லை. "வறியவர்க்கு இட்டார் உயர்சாதியினர். இடாதார் கீழ்ச்சாதியினர்" (நல் 2) என்பார் அவ்வையார். சாதியும் மதமும் விட்டவனே யோகியவான். உயர்ந்த குலம் என்றும் தாழ்ந்த குலம் என்றும் சொல்வதில் பயனில்லை? (531) 'என்று சொல்லி, வேடுவர்குலத்தில் பிறந்த வான்மீகி நல்ல பிராம்மணனாவான்' (538) என்று செயற்கரிய செயல், செய்தலே உயர்சாதிக்குக் காரணம் என்று நிலை நாட்டுவர் வேமன.

**கல்வி:-**

'கல்லாதான் கற்றவன்போல் கவிபாடுதல் மயிலாகத் தன்னை நினைத்துக் கொண்டு ஆடிய வான் கோழிக்கு

ஒப்பாகும்' (மூது 14) என்பார் அவ்வையார். வேமனரோ, "கற்றவர்க்கு இடையே கல்லாதவன் இருப்பது அன்னங் களுக்கு இடையே கொக்கு இருப்பது போன்றதாகும்."

*"கொலனி ஹம்சலகட கொக்கொலுன்னட்ளு"* **(597)**

என்பர்.

'தீயாரைக் காண்பதும், அவர் சொல்லைக் கேட்பதும் அவரைப் பற்றிப் பேசுவதும் அவரோடு இணங்கி இருப்பதும் தீது' (மூது 9) என்பார் அவ்வையார். நல் உணவுகளோடு வயிற்றுக்குள் புகுந்த ஈயொன்று அந்த உணவுகளையெல்லாம் குமட்டி வெளிக்கொணர்வது போல, தீயோனை வீட்டில் வைத்துக் கொள்வதால் கேடு நேரும்' என்று கூறுவார் வேமன.

**சமய ஒழுக்கம்**

சமய நம்பிக்கைகளில் விதி, ஒன்று. பொய்ச் சான்று கூறுவோன் அழிவன், வஞ்சகர் துன்புறுவர். மனம் ஒன்றை விட்டு ஒன்று பற்றும் சஞ்சல இயல்புடையது என்பன யாவும் இதன்கண் குறிக்கப்பெறும். 'இன்பதுன்பங்கள் வினை வயத்தன' (நல் 17), பருவத்தாலன்றி எதுவும் பழுக்காது' (மூது 5) என்பார் அவ்வையார். 'விதிலேக ஐரகது' (865), 'விதிக்ருத மந்துரு யந்துரு' (866) என்பன வேமனவின் வாக்குக்கள்.

'பொய்ச்சான்று கூறுவோன் அழிவதன்றி அவன் குடியும் கெடும் என்பதனை அவ்வையார் 'வேதாளம் சேருமே வெள்ளெருக்குப் பூக்குமே' (நல் 23) என்ற பாடலில் ஓவிய மாக்கிக் காட்டுவர். வேமன, ஓட்டைப் பாண்டத்தில் நீர் ஊற்றியதைப் போலப் பொய்யன் செல்வம் அவனை விட்டு சென்றுவிடும் என்பதனைத் 'தப்பு பலிகினான' (755) என்ற பாடலில் குறிப்பர்.

'நஞ்சினையுடைய பாம்பைப் போல வஞ்சகர் மறைந்து வாழ்வர்' என்று சுட்டுவார் அவ்வையார். அதற்குக் காரணம் காட்டுவது போல, 'வஞ்சகர் தாம் காணும் அனைவரையும் வஞ்சகராகவே கருதுவர்' என்ற கருத்தினை,

*"தனமதி கபட முலுண்டின்*
*தனவலெநேக பட்டமுண்டு தகஜீவலகுன"* **(703)**

என்ற பாடலில் வேமன குறிக்கிறார் உண்பது நாழி உடுப்பது

நான்கு முழம் எண்ணுவனவோ பலகோடிகள் (28) என்று சஞ்சல மனத்தின் இயல்பினை உரைப்பர் அவ்வையார். "மனசுலோன புட்டு மரிகோரகெ லண்ணிய" (610) என்ற பாடலில் மனத்தின் எல்லையில் ஆசையினைக் குறிக்கிறார் வேமன.

**இல்வாழ்வு:**

இல்வாழ்வு என்பது இல்லாளால் அமைவது. அந்த நல்ல வாழ்விற்குப் பொல்லாங்காய் வருவது பரத்தமையாகும். இவ்விரு கூறுகளை இருவரும் பின்வருமாறு எண்ணிப் பார்க்கின்றனர். 'இல்லாள் அகத்திருக்க இல்லாத தொன்றில்லை' என்றும், 'அவள் பொல்லாள் ஆகில் வீடு புலி கிடந்த புதராகி விடும்' (மூது. 21) என்றும் அவ்வையார் உரைப்பார். வேமன, 'நல்லவளால் இன்பமும் அல்லவளால் துன்பமும் குடும்பத்தில் விளைகின்றன' என்பதை, "அனு கல்லமைன" (198) என்று பாடலில் குறிக்கிறார்.

'பரத்தையரின் தொடர்பால் ஞானம், குலம், கல்வி முதலியன கெடுகின்றன' (நல். 36); 'அத்தொடர்பை யுடையவன் இம்மை மறுமைப் பயன்களை இழக்கின்றான்' (887) 'உத்தமனுக்குப் பொருந்தாச் செயல்' (888) என்பர் வேமன.

இருவரும் இனிய எளிய உவமைகளைக் கையாள்வதில் சிறந்து விளங்குகின்றனர். அற்ற குளத்தில் அறுநீர்ப் பறவையைப் பொய்யுறவிற்கும்; கொட்டி, ஆம்பல் முதலிய நீர்க் கொடிகளை உண்மையுறவிற்கும்; பொன்னின் குடமுடைதலை மேலோர் கேட்டிற்கும், மண்ணின் குடம் உடைதலைக் கீழோர் கேட்டிற்கும் உவமித்துச் செல்லும் அவ்வையின் திறமையை அனைவரும் நன்கறிவர். இவ்வாறே வேமனவும் உவமைகளைக் கையாண்டு தான் உணர்ந்ததைக் கற்பார் அனைவருக்கும் உணர்த்துகிறார். 'கரியைப் பாலில் கழுவினாலும் அதன் நிறம் மாறாது' என்ற உவமையினால் என்ன படித்தாலும், இழிந்தோன் பண்பட்டு உயர்வதில்லை' (573) என்று உணர்த்துவார்.

தாழ்ந்தோர் தற்பெருமை பேசித் தம்பட்டம் அடித்துக் கொள்வர். உயர்ந்தோர் அடக்கமாகி இருப்பர். இதனை வெண்கலம் ஒலிப்பதுபோல பொன் ஒலியெழுப்புமா? என்ற உவமையால் பின்வருமாறு வேமன அழகாக குறிப்பர்:

*"அல்புடெப்புடு பல்கு ஆடம்பர முகானு*
*சஜ்சனுண்டு பல்கு சல்லகானு*
*கஞ்சு ம்ரோகிடைடு கனகமு ம்ரோகுனா*
*விஸ்வதாபி ராமா! விரை வேமா!"*

பொருள் வெளிப்படையாகப் புலப்படாமல் எண்ணிப் பார்ப்பார்க்கே விளங்குமாறு அமைத்துப் பாடுகின்ற உத்தியை இருவர் பாடல்களிலும் காணலாம்.

"எட்டேகா லட்சணமே எமனே றும்பரியே" என்று அவ்வை 'ஒரு காலடி நாலிலைப் பந்தலடி' என்று கூறிய புலவனுக்கு விடையிறுத்த பாடலையும், அதனுள் மறைந்திருக்கும் பொருளையும் தமிழ் மக்கள் அறிவர். அதுபோன்றே பின்வரும் வேமன பாடலும் முதன்முறை படிக்கும்போது கேலியாகத் தோன்றிப் பின்னர் ஆழ்ந்து எண்ணும்போது அரிய பொருளைத் தருவதாய் அமையக் காணலாம்.

*"குக்க தின்னவாடு குருலிங்க ஜங்கம்பு*
*பந்தி தின்னவாடு பரம யோகி*
*யேனுகு தினுவாடு யெந்தசுக் ஞானிரா*
*விஸ்வதாபி ராமா! விரை வேமா!"*

**இதன் பருப்பொருள்:-** நாயைத் தின்றவன் நற்குரு அடைவான். பன்றியைத் தின்றவன் பரமயோகியாவான். யானையைத் தின்பவன் நல்யோகியாவான்.

**இதன் நுண்பொருள்:**

எதனையும் பிறர் துய்க்க வொட்டாது எல்லாம் தனக்கென நினைந்து 'எனது' என்னும் செருக்கால் குரைக் கின்ற நாய்த் தன்மையைக் கொன்றவர்கள் நல்ல குருவினை அடைவர். தாழ்ந்த இடத்தையும், கெட்ட பொருளையும் தேடித்திரியும் பன்றியின் இழிகுணத்தைக் கொன்றவர்கள் பரம யோகியாவர். 'நான், நான்' என்ற அகங்காரத்தால் மதங்கொண்ட யானையைப் போல் உள்ளத்தே எழும் ஆணவத்தை வென்றோர் நல்ல ஞானியாவர்!

இவ்வாறு வேமனவும் அவ்வையாரும் காலத்தால் மாறுபட்டாலும், மொழியால் வேறுபட்டாலும், கருத் தாலும், உணர்த்தும் முறையாலும் ஒன்றுபட்டு விளங்கக் காணலாம்.

# 10. குயிற்பாட்டில் வேதாந்தக் கருத்துகள்

உபநிடதங்கள் எண்ணற்றன. ஆத்மனையும் பரபிரம்மத்தையும் பற்றிய ஆராய்ச்சியை மையமாகக் கொண்டன அவை. அவையெல்லாம் வேதங்களில் கூறப் பெற்ற சாரமான கருத்துகளேயாகும். வேதங்கள் குறிப்பிடும் செயல்களிலிருந்தும், செயலூக்க மறை மொழிகளிலிருந்தும் அப்பாற்பட்ட சிந்தனைச் செல்வங்கள் இவை. இவற்றை நிறைமொழிகள் எனலாம். இவற்றை வேதத்தின் இறுதியில் 'ஞான காண்டம்' என்ற தலைப்பில் சான்றோர் தொகுத்து அவமதித்துள்ளனர். வேதத்தின் இறுதியாயும் உறுதியாயும் இவை அமைந்திருப்பதால் 'வேதாந்தம்' என்னும் பெயரினை இவை பெற்றன.

வேதங்களின் இறுதியில் பலவாறு அமைந்திருக்கும் இந்த ஆன்மீயக் கருத்துகளெல்லாம் தொகுத்து வகைப் படுத்தப் பெற்றன. அந்த நூலே 'பிரம்ம சூத்திரம்' என வழங்கலாயிற்று. இதற்கு அறிஞர் பெருமக்கள் பலர் உரை விளக்கம் செய்யலாயினர். அந்த உரைகளே வேதாந்தத்தின் விரிவுகளாக அமைந்தன. அத்தகு உரை விளக்கம் செய்த சான்றோருள் சங்கரர், இராமாநுசர், மத்துவர் என்னும் மூவர் குறிக்கத்தக்கவர்கள். இவர்களுள் சங்கரரின் 'அத்வைத விளக்கம்' பிற்காலத்தில் 'வேதாந்தம்' என்ற சொல்லாலேயே வழங்கப் பெறலாயிற்று.

> *"சோலை, குயில், காதல், சொன்ன கதை யத்தனையும்*
> *மாலையழகின் மயக்கத்தால் உள்ளத்தே*
> *தோன்றியதோர் கற்பனையின் சூழ்ச்சி யென்று*
> *கண்டு கொண்டேன்,*
> *ஆன்ற தமிழ்ப்புலவீர், கற்பனையே யானாலும்,*
> *வேதாந்த மாக விரித்துப் பொருளுரைக்க*
> *யாதானுஞ் சற்றே யிடமிருந்தாற் கூறீரோ?"*

இந்த அடிகளால் அமரகவி சுப்பிரமணி பாரதியார் வேதாந்தக் கருத்துகள் சில தோன்றுமாறு குயில் பாட்டைத் தாம் பாடியுள்ளதாக உணர்த்துகிறார். 'சற்றே யிடமிருந்தாற் கூறீரோ?' 'என்ற அவர் பாடல் தொடரின் முதலில் அமைந்துள்ள ஏகாரத்தை எதிர் மறையாகக் கொண்டு,

வேதாந்த உண்மைகள் இதன்கண் சற்றும் இல்லை என விவாதிப்போரும் இல்லாமலில்லை. எனினும் 'ஆழ்ந்திருக்கும் கவி உள்ளத்து' நோக்கையும், 'சொல்முடிவின்' போக்கையும் பார்க்கும்போது. குயில்பாட்டில் வேதாந்தக் கருத்துகள் விளங்கக் காணலாம்.

இறை, இறையை நாடும் உயிர், உயிரைக் கவர்ந்திழுக்கும் உலகப் பொருள் இவற்றுள் 'இறை ஒன்றே உண்மை; பிறவெலாம் பொய்' என்பது சங்கரர் கூறும் 'ஓம்தத்சத்' என்ற உபநிடத நிறைமொழி விளக்கம். இந்த விளக்கமே,

*"சோலை, குயில், காதல், சொன்ன கதையத்தனையும்*
*மாலை யழகின் மயக்கத்தால் உள்ளத்தே*
*தோன்றியதோர் கற்பனையின் சூழ்ச்சி யென்றேகண்டு*
*கொண்டேன்"*

என்ற தொடரில் குறிக்கப் பெறுவதாகக் கொள்ளலாம். மேலும் 'நெட்டைக் கனவு' என இப்பாடலில் வரும் தொடரும் இதனை வலியுறுத்தக் காணலாம். இந்தக் கேவலாத்துவிதக் கொள்கையை,

*"உலகெ லாமோர் பெருங்கனவஃதுளே*
*யுண்டுறங் கியிடர் செய்து செத்திடும்*
*கலக மானிடப் பூச்சிகள் வாழ்க்கையோர்*
*கனவி னுங்கனவாகும்"*

என்ற பாரதி பாடல் வலியுறுத்தக் காணலாம்.

*"வாழ்வு முற்றுங் கனவெனக் கூறிய*
*மறைவ லோர்த முரைபிழை யன்றுகாண்"*

என்ற அவர் பாடலும் இதனையே உணர்த்தும். மாயை (பிரபஞ்சத் தோற்றம்) பொய் எனல் முந்தித் தெளிவுறுத்தும், இதனை இன்னும் சற்று விரிவாக்கினால், குயிற்பாட்டில் பின்வரும் பூதங்கள், பொருள்கள், காலங்கள், இடங்கள், நிகழ்ச்சிகள் இடம் பெறுகின்றன. இவையாவும் இறுதியில் நெட்டைக்கனவாய், கற்பனையின் சூழ்ச்சியாய் மறையக் காண்கிறோம்.

அ. வானம், பூமி, கடல், காற்று.

ஆ. குயில், நெட்டைக்குரங்கன் மாடன், சேர இளவரசன், கவிஞன், பறவை, குரங்கு, மாடு, சோலை, மரம், கிளை.

இ. காலை, மாலை, கதிரவன் தோற்றம், மறைவு, இரவு பகல்.

ஈ. நாடு, ஊர், தெரு, வீடு.

உ. பாட்டு, பேச்சு, நடத்தல் - நிற்றல் - இருத்தல், கிடத்தல், காதல் - இன்பம் - துன்பம் - பிறப்பு - இறப்பு முற்பிறப்பு.

'இவையெல்லாம் மாலையழகின் மயக்கத்தால் மனத்தில் தோன்றியதோர் பொய்த்தோற்றம்' என்பது கவிஞர் தரும் கருத்து. இவையாவும் கவிஞர் கற்பனையில் நிகழ்கின்றன. இங்கே கவிஞர் மட்டுமே உண்மை. பிறவெலாம் பொய். 'அகம் சத்யம்! ஜகம் மித்யம்' என்னும் கேவலாத்துவைத வேதாந்த விரிவு இங்கு இடம் பெற்றிருத்தலைத் தெளியலாம்.

ஒன்று பரம் பொருள். உயிருள்ள, உயிரில்ல பிறவெல்லாம் அதன் விசேடனங்கள். அதாவது உயிரொன்றுக்குச் சில குணங்களும், உயிருள்ளதும் இல்லது மான உடற் கூறுகளும் சூழ அமைந்திருப்பது போலப் பரமாத்மனைக் கல்யாண குணங்களும், ஜீவாத்மாக்களும் பிரபஞ்சமும் உடலாகச் சூழ்ந்து அமைந்துள. இவ்வாறு விசேடனங்களோடு கூடிய ஒருபொருளே உள்பொருள் என்பர் இராமாநுசர். இவர் கூறும் வேதாந்தம் 'விசிட்டாத்துவைதம்' வேதாந்தத் தத்துவப்படி இறை, உயிர், தடை, நெறி, பலன் என்னும் ஐந்து நோக்குகளில் மானிட வாழ்வு ஆயப்பெறும்.

இங்குக் குயிற்பாட்டில் தோன்றும் கவிஞனை இறையாக உருவகிக்கலாம். எனில் கருங்குயிலி உயிராகும். நெட்டைக் குரங்கனும் மாடனும் இறையாகிய இளவரசனை அடைய முடியாமல் தடுத்த தடைகளாகும். பொதிய மலைச்சாரல் முனிவர் நெறிகாட்டும் ஆசாரியன் ஆவர். பலன் குயிலாகிய உயிரைக் கவிஞனாகிய இறை ஏற்றுக் கொள்வதாகும்.

மத்துவர் கூறும் துவித வேதாந்தத்திற்கு இங்கு இடமில்லை. ஆனால் பதி, பசு, பாசம் எனும் சைவ சித்தாந்த உண்மைகள் குயிற்பாட்டில் விளங்கக் காணலாம். பசுவாகிய குயிலி பதியாகிய அரசனை அடைய முடியாமல் கடமை, கருணை என்னும் பசாத்துள் அகப்பட்டு மாடனுக்கும் நெட்டைக் குரங்கனுக்கும் உரியதாகின்றது. அப்பாசம்

ஞானவாளினால் அழிகின்றது. உடனே இறைவனும் மறைகிறான். இறைவானல் உணர்த்தப் பெற்ற குயிலாகிய பசு தன்னை மறந்து, தன் நாமம் கெட்டு, அவனைக் காண அலைந்து திரிகிறது. பொதிகை மலையில் குரு உபதேசம் கிடைக்கிறது. பின்னர் திரோதன மாயையிலிருந்து நீங்கிப் பதியினைப் பசு அடைகிறது.

இவ்வாறு குயிற்பாட்டிற்குத் தத்துவ விளக்கம் தரலாம். ஆனால் சிற்சில இடங்களில் இந்த விளக்கங்களில் ஐயங்களும் சில தோன்றாமல் போகவில்லை. கேவலாத்துவித வேதாந்தப்படி பரம்பொருள் பேரின்பமும் பேரா ஞானமும் பெற்று விளங்கும் சத்தியப் பொருளாகும். ஆனால் இங்குக் குறிக்கப்பெறும் மானுடனோ மாயையில் மயங்கி உயிரின் உண்மையை உணராது தடுமாறுகிறான். எனவே கேவலாத்து வித வேதாந்தம் குயிற்பாட்டில் ஓரளவே பொருந்துவதாகக் கொள்ளலாம். இப்படியே பதியின் பரஞானத்திற்குக் குறை ஏற்படுவதால் சைவ சித்தாந்தத்தையும் முழுமையாகப் பொருத்திக் காட்ட இயலவில்லை என்று சொல்லலாம். ஆனால் அவதாரக் கொள்கைகளையும் அந்தந்த அவதாரத் திற்கேற்ப மாயா காரியங்களுக்குட்பட்டு ஆடல் புரியும் திருமாலை இறையாகக் கொண்டிலங்கும் விசிட்டாத்துவித வேதாந்தத்திற்கு இது பெரிதும் பொருந்தும்.

நாத தத்துவத்தைக் குயிலாக உருவகித்தல் மரபு. மயிலை விந்து தத்துவமாகவும், சேவலை நாதமாகவும் முருகப்பிரான் மயிலையும் சேவலையும் கொண்டு விளங்குகின்ற குறிப்பால் உணரலாம். விந்து தத்துவமாகிய ஒளி, நாத தத்துவமாகிய ஒலியாக மாறும் தன்மையை,

> *"மயில் குயிலாச்சுதடி அக்கச்சி*
> *மயில் குயிலாச்சுதடி"*

என்ற வடலூர் வள்ளலார் பாடலால் அறியலாம். 'காலை இளம்பரிதி வீசும் கதிர்களிலே வேகத்திரைகளினால் வேதப் பொருள்பாடும்' என இத்தத்துவங்களை நெஞ்சிலே

கொண்டு துவங்கும் பாரதியார், "நாதக்கனலினிலே நம்முயிரைப் போக்கோமோ" என்று பாடுகிறார். எனவே நாத தத்துவத்தில் துவங்கி ஏக மௌனத்தில் இருப்பது குயில் பாட்டில் குறிக்கப் பெற்றிருக்கிறது எனக் கொள்வதில் தவறில்லை.

காதல் காதல் எனத் துவங்கி ஒன்பது சரணங்களில் அமையும் குயில் பாடல் காதல்-காதல்-காதல்; இன்பம்-துன்பம்-இன்பம்; கூடல்-ஊடல்-கூடல் என்று இவ்வுலக வாழ்வு தப்பமுடியாத ஒரு சுழற்சியில் அமைந்திருப்பதைக் குறிப்பதாகக் கொள்ளலாம்.

வேதாந்த விளக்கங்களின் மூலமாகிய உபநிடதங்களைத் தெரிந்தவர் பாரதியார். இந்திய சிந்தனைச் சிறப்புக்கு அதுவே காரணமாயிற்று என்றும் உணர்ந்தவர் அவர்.

*"பன்னரும் உபநிட நூலெங்கள் நூலே*
*பார்மிசை யேதொரு நூலிது போலே"*

என்று பாடியவரும் அவரே. அத்தகு உபநிடத உண்மைகள் பல குயில்பாட்டில் ஒளிரக் காணலாம்.

*"காலை யிளம்பரிதி வீசுங் கதிர்களிலே*
*நீலக்கடலோர் நெருப்பெதிரே சேர்மணிபோல்*
*மோகனமாஞ் சோதி பொருந்தி முறை தவறா*
*வேகத் திரைகளினால் வேதப் பொருள்பாடும்"*

எனத் துவங்கும் குயிற்பாட்டின் அடிகள் பிரச்சனோப நிடதத் துவக்கம் போல் அமைந்து திகழக் காணலாம்.

"வேகத் திரைகளினால் வேதப் பொருள்பாடி" என்னும் அடி மாண்டூக்கிய உபநிடத 1, 8, 9, 10 பிரிவில் அமைந்துள்ள 'ஓம்' என்னும் பிரணவத்தின் மந்திர விளக்கம் எனலாம்.

இன்னும் ஒரு கருத்தையும் இங்குக் கூறி முடிக்கலாம். வாமன் மகன் மாடன் என்பான், 'பொன்னை மலரைப் புதுத்தேனை' நாளுந்தந்து அவள் மணத்தை விரும்பி

நின்றான். அவன்பால் தனக்குக் காதல் இல்லை எனினும் கருணையினால் அவனை மணந்துகொள்ள; குயிலி இசைகின்றாள். ஆனால் அவளையும் அறியாமல் அவள் தந்தை வீரமுருகன் மொட்டைப் புலியனின் மூத்தமகன் நெட்டைக் குரங்கனுக்குத் தன் மகளைத் தருவதாக உடன்பட்டு வந்து உரைத்தபோது கடமை வயப்பட்டு அதனை மீற இயலாமல் அமைகிறாள் இறுதியில் சேர இளவரசனைக் கண்டபோது காதல் கொள்கிறாள்.

இங்குக் குயிலி ஆகிய ஆன்மா பரமாத்மன் ஒருவனையே காதலிக்கும் இயல்புடையது. இதனை யாக்ஞவல்கியர் தம் மனைவிக்கு உரைக்கும் சொற்களால் உணரலாம். ஆனால் மாயை வழிப்பட்டு அது கருணைக்கும் கடமைக்கும் தன்னை ஆளாக்கிக் கொண்டு உரிய குறிக்கோளிலிருந்து பிறழ்கிறது. இவ்வாறு உலகக் கடமை, உயிர்ப் பேற்றுக்குத் தடையாவதை உணர்ந்தே பாரதியாரும் பிறிதோரிடத்தில்............

*“கடமை புரிவா ரின்புறுவார்*
*என்னும் பண்டைக் கதைபேணோம்;*
*கடமை யறியோம் தொழிலறியோம்;*
*கட்டென் பதனை வெட்டென்போம்;*
*மடமை, சிறுமை, துன்பம், பொய்,*
*வருத்தம், நோவு, மற்றிவைபோல்*
*கடமை நினைவுந் தொலைத் திங்கு*
*களியுற் றென்றும் வாழ்குவமே”*

எனப் பாடித் தெளிவு செய்கிறார்.

# 11. ஒருவருள் நால்வர் அல்லது மு.வ. காட்டும் வாழ்க்கை நெறி

**1961** விநாயகச் சதுர்த்திக்கு முதல்நாள். அன்று செவ்வாய்க்கிழமை என்று நினைக்கிறேன். அன்றுதான் அவர் மாணவருள் ஒருவர், சித்தூர் அரசினர் கல்லூரி விரிவுரை யாளர் பதவிக்கு நேரில் சென்று விண்ணப்பிக்க வேண்டு மெனப் பேராசிரியர் மு.வ. எண்ணியிருந்தார்கள். அதற்கு முந்தியநாள் இரவு மு.வ. வின் பெங்களூர் உறவினர்கள் அவரைக் காணச் சென்னை நோக்கி வந்து கொண்டிருந்த போது,அவர்கள் ஏறிவந்த கார் பூந்தமல்லி யருகே புளியமரத்தில் மோதிச் சிக்கிச் சிதைந்து போய்விட்டது. ஒருவர் கார் மோதியபோதே மாண்டு போனார்; இன்னொருவர் மருத்துவ நிலையத்தில் மாண்டு கொண்டிருந்தார். ஆகவே, அவர்களுக்காக மு.வ. அங்கும் இங்கும் அலைந்து கொண்டிருந்தார். அந்த நெருக்கடியான நேரத்தில், அந்த மாணவர் அங்கேயே, அவருடனேயே தங்கினால் அவர்க்கு உதவியாக இருக்குமென எண்ணிச் சித்தூர்ப் பயணத்தை நினைக்காமல், அவருக்கும் நினைவூட் டாமல் இருந்து விட்டார்.

ஆனால் அவர் மறக்கவில்லை. திங்கள் இரவு உறவினர்க்கு நிகழ்ந்த அந்தக் கேடு காரணமாகப் பற்பல கடமைகளுக்கு ஆளாகியிருந்த அவர், தன் மாணவர் செவ்வாய் காலைச் சித்தூர் செல்ல வேண்டும் என்ற செயலையும் நினைவில் வைத்துக்கொண்டிருந்தார். செவ்வா யன்று பிற்பகல் தொலைபேசி மூலம் திரு.வி.க. உயர்நிலைப் பள்ளி இந்தி ஆசிரியர் நடராசனோடுபேசி, அழைத்து, பயணச் செலவுக்குப் பணமுங் கொடுத்து அந்த மாணவரைச் சித்தூருக்கு அழைத்துச் செல்லுமாறு கூறினார்.

"அய்யா! நம் வீட்டுநிலை இப்படி இருக்கிறதே! உறவினர்களுக்கு இப்படி நேர்ந்துவிட்டதே! வீட்டிலும்

வெளியிலும் அம்மாவுக்கும் தங்களுக்கும் வேலை நிறைய உள்ளதே. நான் இப்போது இங்கிருந்தால் உதவியாக இருக்குமே!'' என்று அந்த மாணவர் கெஞ்சினார்.

“இங்கு என் உதவிக்கு யாரையேனும் நான் வைத்துக் கொள்வேன். மருத்துவ நிலையத்தில் அரசு கவனித்துக் கொள்ளும். இதற்கு நீதான் போகவேண்டும். ஒருகால் இது உன் எதிர்கால வாழ்வைத் திட்டமிடும் செயலாகவும் அமைந்துவிடக் கூடும். நீ போய் வா. இதனால் வாழ்வைத் தேடிப்போகும் உன் எதிர்காலம் கெட்டு விடக் கூடாது. உம். போய் வா! இன்று இரவே வந்து விடுவாய் அல்லவா? வந்தவுடன் உதவலாம்'' என்று ஆதரவாகக் கூறி அனுப்பி வைத்தார்.

அன்று அவர் அவ்வாறு தயங்காது தடுமாறாது, உறுதியோடு அந்த மாணவரை அனுப்பி வைத்ததால்தான் இன்று திருவேங்கடவன் பல்கலைக் கழகத்தில் தமிழ்ப் பேராசிரியாராக விளங்கும் பெருவாழ்வு அந்த மாணவர்க்கு வாய்த்துள்ளது.

எப்படி அவரால் அப்படி நடந்துகொள்ள முடிந்தது? நெருக்கடியிலும் மிகத் தெளிவாகச் சிந்தித்துச் செயல்பட முடிந்தது? இயற்கையான சாவாக இருந்தால்கூட கடமைகளை எல்லாம் தள்ளிப் போட்டு விட்டுக் காலம் கடத்தும் இந்த மண்ணின் மரபிலிருந்து, மனநிலையிலிருந்து எப்படி விலகி, எப்படிக் கடந்து, அவரால் வாழ முடிந்தது? வழிகாட்ட முடிந்தது?

1957 அன்று கல்லூரி இடைநிலை வகுப்பின் இறுதி நாள். வகுப்பின் இறுதியில் சிலவற்றைக் கூறியருளுமாறு நாங்கள் கேட்டுக் கொண்டோம். ‘மு.வ.’ என்ற இரு எழுத்துக்களும் பிரணவ மந்திரம்போல் தமிழ் இல்லங்களிலும் தமிழர்தம் உள்ளங்களிலும் உணர்வூட்டி வளர்த்துவந்த காலம் அந்தக் காலம். அவர்தம் வாழ்வின் விளக்கம் கூறுவதுபோல, வெற்றிக்குக் காரணம் கூறுவது போலப் பின்வரும் சில கருத்துக்களை உரைத்தார்.

'என் வாழ்வை இப்படி வகுத்து அமைத்துக் கொண்டேன். அதுதான் இந்த என் வெற்றிக்குக் காரணம். இது உங்கள் வாழ்வுக்கும் உதவும்; உங்களை உயர்த்த உதவும் என்று நம்புகிறேன். அதனால் சொல்கிறேன், செயல்களை இப்படி வகுத்து அமைத்துக் கொள்ளுங்கள். உடல், கடமை, குடும்பம், சமுதாயம் - என்று இப்படி நான்காக வகுத்து அமைத்துக் கொள்ளுங்கள். அன்றாடம் அலுவலக மேசைக்கு வரும் கோப்புக்களைப் போல் அவற்றைக் கருதுங்கள். இயலுமாயின் முதன்மைக் கோப்பாகிய உடலைப் போற்றி, அடுத்த நிலையில் நிற்கும் கடமை ஆற்றி, மூன்றாம் இடம்பெறும் குடும்பத்தை வளர்த்து, இறுதியில் அமைந்துள்ள சமுதாயப் பணிபுரிந்து - நான்கினையும் ஒருசேரக் கவனித்துப் பெருவாழ்வு வாழுங்கள். அப்படி அனைத்தையும், வாழ்வின் நான்கு கூறுகளையும் போற்றி வாழ இயலாது போயின், இறுதியில் அமையும் சமுதாயத்தை விடுத்து முதல் மூன்றினையும் காத்து வாழ்க. அப்படிச் சமுதாயப் பணிபுரிந்து, குடும்பம்போற்றி வாழ இயலாதாயின் கடமையிலாவது தவறாது, உடல் நலங்காத்து வாழ்க. அப்படி அவற்றை யெல்லாம் செய்யமுடியாது தளர்ந்து போவீரானால், உடலையேனும் நோயணுகாமல் காத்து வாழ்க!! என்றார்.'

சிறிது நேரம் எல்லோரும் அவரையே அமைதியாகப் பார்த்துக் கொண்டிருந்தோம். 'அய்யா!' என்ற குரல் கேட்டு, குரல்வந்த திசையை நோக்கினோம். நண்பர் - 'க' - 'அய்யா!'

*'தன்பெண்டு தன்பிள்ளை சோறுவீடு*
*சம்பாத்யம் இவைஉண்டு தான்உண்டென்போன்*
*சின்னதொரு கடுகுபோல் உள்ளங்கொண்டோன்'*

என்று பாரதிதாசன் பாடியுள்ளாரே? தாங்கள் கூறுவதைப் பார்த்தால், சமுதாயத்தை நான்காம் நிலையில் வைப்பதைப் பார்த்தால், சிற்சிலபோது அதனையும் பொருட்படுத்த வேண்டா என்று கருதுவதைப் பார்த்தால், பலர் கடுகுள்ளம் கொண்டவராக அமைந்துவிடுதல் சரியெனத் தாங்கள்

நினைப்பதாகத் தோன்றுகிறதே! என்று ஏற்ற இரக்கக் குரலோடு ஆர்வமாகக் கேட்டார்.

'புன்னகை செய்தபடியே' எது சமுதாயம்? குடும்பங்கள் எல்லாம் கூடி அமைவதுதானே சமுதாயம்? ஒவ்வொருவரும் தத்தம் குடும்பத்தைப் புறக்கணித்து விட்டு, தம் கடமைகளைச் சரிவர ஆற்றாமல், தம் உடலை நோய்களுக்கு இடமாக்கி விட்டு என்ன சமுதாயத் தொண்டு செய்யமுடியும்? அப்படிப் பட்டவன் குடும்பத்தைக் காக்க இன்னொரு சமுதாயத் தொண்டன் தேவைப்படுவான்; அப்படிப்பட்டவன் அலுவலகக் கடமை பல இன்னொருவன் தலையில் ஏறிக் கழுத்தை முறிக்கும்; கைகளை நோகச் செய்யும். இப்படி எண்ணிப் பாருங்கள். நோயில்லாமல் தன் உடலை வைத்துக்கொள்பவன். முறையாகக் காலந்தவறாமல் தன் அலுவலகப் பொறுப்புக்களை நிறைவேற்றுபவன், நெறியாகத் தன் குடும்பத்தைப் பாதுகாத்து வளர்ப்பவன். சமுதாய வளர்ச்சிக்குத் துணை செய்பவன் அல்லனோ! எல்லோரும் இப்படி வாழ்ந்தால் சமுதாயத் தொண்டு என்பதே பொருளற்றதாகிப் போய்விடுமல்லவா? இப்படியே மேலும் எண்ணிப்பாருங்கள். அலுவலகக் கடமைகளை ஒழுங்காக ஆற்றி நன்றாக உழைத்துச் சம்பாதித்தால் தானே குடும்பம் நன்கு வாழும்; மேலும் வளரும்-பொறுப்பின்மை யால் வேலை போய்விட்டால் அப்போது எப்படிக் குடும்பத்தைக் காப்பது. நல்ல தந்தை ஒருவன் அன்பான தாய் ஒருத்தி மகன் தன்னுடன் இருப்பதைவிடக் கல்லூரியில் கற்பதை, மகள் தன்னுடன் இருப்பதைவிடக் கணவன் வீட்டில் வாழ்ந்து கடமையாற்றி உயர்வதைத்தானே எண்ணுவார்கள். இப்படி எண்ணிப் பார்த்தால் நான் கூறிய வாழ்வின் வகைப்பாடுகள் உங்களுக்குத் தெளிவாகும் என்றார்.

பல்லாண்டுகள் ஆகிவிட்டன. அவர் மறைந்தும் பத்தாண்டுகள் ஆகிவிட்டன. இன்று நினைத்துப் பார்க்கிறேன். அவர்நெறி தென்பொருனை நீர்போல் தெளிவாகத் தெரிகிறது.

. மு.வ. என்ற அந்த உடலுள், உள்ளத்தில், அறிவில், ஆற்றலுள் பல மு. வக்கள் அடங்கியிருந்தனர். ஆசிரியர் மு.வ. ஒருவர்; அவர் சான்றோர். எழுத்தாளா மு.வ. ஒருவர்; அவர் புகழ் வாய்ந்தவர். குடும்ப மு.வ. ஒருவர். அவர் பொறுப்பு மிக்கவர். சமுதாய மு.வ. ஒருவர்; அவர் தமிழ் உணர்வினர், பலர்க்கும் நண்பினர்; வறியவர்க்கு நல்கும் வள்ளல். இப்படி நான்கு மு. வக்கள் ஒருருவில் அமைந்து இணைந்து செயல் புரிந்தனர்.

ஆசிரியர் மு.வ. வுக்கு எழுத்தாளர் மு.வ. என்றும் தடையாக இருந்தது இல்லை. ஏனெனில் பச்சையப்பனில் இதுவரை பணிசெய்துள்ள ஆசிரியர்களுள் மிகக் குறைவாக உரிமைவிடுதி எடுத்தவர் அவர் ஒருவரே; பல்லாண்டுகள் ஒருநாள் கூட உரிமைவிடுதி எடுக்காமலேயே ஆசிரியப் பணிபுரிந்து வந்தவர் அவர். அன்றாடம் துறை துவங்குமுன் வந்து கல்லூரி முடிந்த பின் செல்வதை வழக்கமாக, வாழ்வாகக் கொண்டிருந்தார். காலங்கடக்காமல் கல்லூரி செல்வதற்காகவே கால்நடையில் சென்று, அதனை அடையும் தூரத்தில் வீட்டை அமைந்தகரையிலேயே கட்டிக் கொண்டார். வகுப்பைத் தள்ளிப்போடாமல், முதல் நாள் நடத்திய பாடத்தைச் மறக்காமல், புதிய பாடக் கருத்துகளைக் கற்றுச் சிந்தித்துத் தொகுத்து வகுத்துத் தயாரித்துக் கொண்டுவருவதில் குறைநேராமல் நல்லாசிரியராக, திறமையான ஆசிரியராக, ஒழுக்கமான ஆசிரியராக விளங்கினார். இந்த ஆசிரிய மு.வ. வுக்கு எழுத்தாளர் மு.வ. ஒருநாளும் இடையூறாக இருந்ததில்லை.

இப்படியே எழுத்தாளர் மு.வ. வின் கண்விழிப்புகள், சிந்தனைச் சுமைகள், நெஞ்சக் குமுறல்கள் மு.வ.வின் உடல் நலத்தைப் பாதிக்காதவாறு உடலைக் காத்துக் கொண்டார். தலைவலி என்று அவர் ஒருநாள் கூட கூறக் கேட்டதில்லை.

இப்படியே ஆசிரியர் மு.வ. வும், எழுத்தாளர் மு.வ. வும் அவர் குடும்ப வாழ்வுக்குக் குறுக்கே நின்று குலைக்கவில்லை. இறுதி நாள்வரை மனைவி மகிழ, மக்கள் வளர, அன்பான

கணவானக, பண்பான தந்தையாக வாழ்ந்தார். மனைவியைத் துணைவியாக்கிக் கொண்டார்; தோழியாக்கிக் கொண்டார்; அவர் உரிமையோடு வாழ அஞ்சாமல் வாழ வாய்ப்பு நேரும் பொழுதெல்லாம் வழிகாட்டி வளர்த்து வந்தார். மக்களை எல்லாம் சிறந்த மருத்துவராக உருவாக்கினார். இளமையில் தன்னைப்போல் வறுமையில் வாடி வருந்தாமல் வாடகைவீடு தேடித் தேடித் துன்புறாமல் அவர்களுக்கு வளமான வீடுகள் கட்டி வழங்கினார்.

அவர் தம் தமிழ்ப்பற்றுக்கு, கொடை உள்ளத்திற்கு குடும்ப மு.வ. தடையாக இல்லாமல் அப்பர் அறக் கட்டளை, வீட்டில் விற்கும் நூல் நிதி, தேர்வுப்பணியில் பயணப்படியில் பெறும் பணத்தின் உதவிப்பங்கு - எனத் தன் வருவாயைப் பகுத்துப் பற்பலவாறு அறம் செய்து வந்தார். நூறு நூறாக வறிய மாணவர்களுக்கு வழங்கினார். ஆயிரம் ஆயிரமாகத் தமிழ் வளர்ச்சிக்குப் பாடுபடும் தொண்டர்க்கும், கட்சிக்கும், சங்கங்களுக்கும் அளித்தார். பத்தாயிரக் கணக்கில் திரு.வி.க. பள்ளிக்கு அவ்வப்போது உதவிவந்தார். இந்தச் சமுதாய மு.வ. வைக் குடும்பம் கட்டுப்படுத்தவில்லை. யாரையும் கேட்காமல், ஏன் யாருக்கும் கூறாமல் அவர் கொடுத்து வந்தார். வாங்கியவர் கூறியே அறியும் அளவு தந்ததை யாருக்கும் கூறாமல் மறைத்தும் வந்தார்.

அதனால்தான் இன்று மாபெரும் மனிதராக, நம் வணக்கத்திற்கு உரியவராக அவர் சிறந்து விளங்குகிறார். அவர் காட்டிய நெறி தெளிவானது; வாழ்ந்த வாழ்வு ஒளிவு மறைவற்றது. ஒன்றுக்கு ஒன்று சிக்கல் இல்லாமல், மாறுபடாமல், பலநோக்கில் செயல்புரிந்து வெற்றி விளைத்தது. 'அறம் இஃதென்றும் மறம் இஃதென்றும் அறிகிலாது குழம்பும்போது தெளிவுதரும் திருக்குறள் போல, பல்வேறு பணிகளையும் சீர்மையோடு, நேர்மையோடு, நிறைவேற்றி வெற்றிபெற வழிகாட்டவல்லது, ஒருவருள் நால்வராய் விளங்கிய மு.வ. வின் நல்வாழ்வு.'

# 12. கிறித்துவக் கம்பர் கிருஷ்ண பிள்ளையின் கவியுள்ளம்

"இரட்சணிய யாத்திரிகத்தில் என்னுடைய வாழ்க்கையையே ஊற்றிவிட்டிருக்கிறேன்; என்னுடைய இதயத்தின் ஆழத்தின் ஆழம் அதில் இருக்கிறது." எனக் கிருஷ்ண பிள்ளை அவர்கள் கருதுவது போல, அவருடைய உள்ளத்தை உணர்வதற்கு 'இரட்சணிய யாத்திரிகம்' என்னும் காப்பியம் பெரிதும் துணைசெய்கிறது. மேலும், காப்பியக் கல்வியில், 'ஆழ்ந்திருக்கும் கவியுளம் தேர்தல், தலையாய நோக்கமாகும் என்று அமர கவி சுப்பிரமணிய பாரதியாரும் குறிப்பிடுகின்றார்.'

கவிஞன் ஒருவன் உள்ளம், அவன் எழுதிய கவிதைகளில் கவிதைப் பொருளாக, மேற்கோள்களாக உவமைக் காட்சிகளாக இடம் பெறும். இங்குக் கிறித்துவக் கம்பர் கிருஷ்ணபிள்ளையின் உள்ளம் 'இரட்சணியத்தில் எவ்வெவ்வாறெல்லாம் இடம் பெற்றுள்ளது என்று முன்னர்க்கூறிய மூன்றுவகை அடிப்படையுள் சுருக்கமாகக் காணலாம்.'

பாடுபொருளாக இரட்சணிய யாத்திரிகத்தைக் கிருஷ்ண பிள்ளை மேற்கொண்டது. தாம் தம் வாழ்வாகிய யாத்திரையில் இரட்சணியப் பாதையைப் பின்பற்றி முன்னேற வேண்டும் என்பதற்காகவே யாகும். பல இடங்களில் ஏங்கி ஒலிக்கின்ற, தேம்பித் தவிக்கின்ற, திகைத்துக் கலங்குகின்ற கிறிஸ்தியான் குரல்கள் கிருஷ்ண பிள்ளையின் குரல்களாகவே நமக்குக் கேட்கின்றன.

மறைத் தெளிவு ஏற்பட்ட பின்னர், கிறித்துவ நெறியின் உண்மைகளை உணர்ந்த பின்னர், புற்றீசல் போலச் சாகின்றவர்கள்வழியில் போக இவர் மனம் இடம் தரவில்லை. இறை தண்டனையை எண்ணிப் பார்க்கும் பணிவுள்ளம் இவர்க்கு வாய்க்கிறது. மறை அறியாது, நெறியல்லா நெறியிலே சென்று நிலை கெடவும் தான் விரும்பவில்லை. இவர்தம் குறை உணர்ந்து துணை செய்வோர் பலமும் இவர்க்கில்லை. இவர்தம் இவ்வருத்தக் குரலும் ஆன்மீகன் அவலக் குரலும் ஒன்றுதான்.

*"சாகவும் மனம் இலை; தண்டனைக் கெதிர்*
*போகவும் துணிவிலை புறத்துள் ளாரைப்போல்*
*ஏகவும் புகல் இலை, ஈடு செய்வோர்*
*பாகமும் பலம்இலை பதைக் கின்றேனென் நான்"*

**(இ.யா. பா. 23)**

'அம்மையப்பனாய் அருள்புரிகின்ற தனித்தலைவர் உயிர்க்குத் தயைபுரிய என்றும் விழிப்போடு காத்திருக்கிறார். அவருக்கு ஒப்பாரும் மிக்காரும் யாருமில்லை. இருந்தும் ஆசை, ஆணவம், அவநம்பிக்கை என்னும் மூன்று பாவ வயப்பட்டு அழிந்து தவிக்கின்றேன்.' என ஆன்மீகன், தனக்குள்ளே உணர்ந்து உரைப்பது கவிஞர் தம் உள்ளத்துள் எழும் உண்மைக் குரலே யாகும்.

*"அன்னையாய் அப்பனாய் அன்றுதொட் டின்றுமட்டு*
*என்னையன் பொடுபுரந் தென்றும்நன் றேதரும்*
*தன்னையே நிகர்வதோர் தம்பிரான் தயை மறந்து*
*என்னையே முப்பகைக்கு ஈடழிந்து இனைகு வேன்."*

**(இ.யா.பா. 180)**

இரட்சணிய யாத்திரிகம் பாடப்பாட ஆன்மீக யாத்திரையில் கிருஷ்ணப் பிள்ளையும் மறை வாணனோடு முன்னேறப் பார்க்கின்றோம். அந்த முன்னேற்றத்தோடு தம் உயிர் பற்றிய சிந்தனைத் தெளிவு அவர்க்கு வாய்க்கப் பெறுவதையும் அறிகிறோம். கடந்தகால வாழ்வின் குறைகள், நிகழ்கால நிலை, இறைவன் திருவருள் துணையின்றேல் பிழைக்கும் வழி வேறு இல்லை. அடைக்கலமாக அவன் திருவடியில் விழுந்து வணங்குதலே வழி எனக் கருதும் மறைவாணன் மனத்தோடு, மகாகவியின் மனமும் இயைந்து அருளுக்கு ஏங்குகிறது.

'இறைவா! பக்தி கொண்டு பாடினேனிலேன்; தூய மறைநெறியில் வாழ்ந்திலேன்; வாழ் நாளெல்லாம் ஆசை, ஆணவம், அவநம்பிக்கை என்னும் பாவங்களில் ஈடுபட்டு எத்தனாய் வீழ்ந்தேன்; அமரவாழ்வு அடையும் தகுதியில்லாது அழிவுக்குரியவனானேன். இப்போது மண்ணுலக மயக்கம் இந்தப் பித்தனுக்குத் தீர்ந்தது. உன் பேரருள் துணையில்லாமல் பாவத்திலிருந்து கரையேறுவதற்கு உயிருக்கு வேறு வழி யில்லை என்ற தெளிவு தோன்றியுள்ளது. தலைவா! அதனால் நின் அடியவனாகிய நான் நின் திருவடிகளைச் சரணாக

அடைந்தேன். 'அஞ்சற்க!' என்று நின் திருவடிப் பேற்றினை எனக்குத் தந்தருள வேண்டும்" என்னும் மறைவாணன் குரலில் மகாகவியின் குரல் இயைந்து ஏங்குவதைக் காணலாம்.

*"பத்தனாய்ப் பாடேன் சுத்தனாய் ஒழுகேன்*
*பகலெலாம் பாவமே பழகி*
*எத்தனாய்க் கழித்தேன், இன்றுளேன் நாளை*
*இலன்என எண்ணவும் படுவேன்*
*பித்தனேற் குன்து பேரருள் அல்லால்*
*பிழைக்குமா றில்லையா தலினால்*
*அத்தனே, அடியேன் நின்சரண் அடைந்தேன்*
*அஞ்சலென் றடைக்கலம் அருளே"* *(இ. யா. 370)*

இயேசு பிரானின் சிலுவைப் பாட்டில் கவிஞன் நெஞ்சம் கலந்து, கரைந்து கலங்குகின்றது.

*"தன்னரிய திருமேனி சதைப்புண்டு தவிப்பெய்திப்*
*பன்னரிய பலபாடு படும்போதும் பரிந்து எந்தாய்*
*இன்னதென அறிகில்லார் தாம்செய்வது இவர் பிழையை*
*மன்னியு மென்று எழிற்கனிவாய் மலர்ந்தார் நம்*
*அருள் வள்ளல்"*

**(இ.யா. 340)**

'இவர் செய்வது இன்னதென்று அறிகிலார் இறைவா! இவரை மன்னியும்' என்ற வசனம், பின்வரும் பாடலில் உருக்கத்தோடுஅமைந்து கிறித்துவ மறையில் கிருஷ்ண பிள்ளைக்கு உள்ள தோய்வினை நமக்கு நன்கு புலப்படுத்து கின்றது.

*"கீண்டிருப்பு முளையுடலை கிழித்து உருவி வதைப்புண்டு*
*மாண்டுபடும் போதிவர்க்கு மன்னியும் என்று உரைத்த மொழி*
*ஈண்டு இவரே உலகினுக்கோர் இரட்சகரென்று எடுத்துரைக்கும்*
*வேண்டுமோ இனிச்சான்றும் இதைவிடுத்து வேறொன்றே?"*
**(இ.யா. 342)**

இவ்வாறு பாடுபொருள்வழி கிருஷ்ணப்பிள்ளையின் உள்ளக் கிடக்கையை உணருமாறுபோல அவர் எடுத்தாளும் மேற்கோளிலிருந்தும் உணரலாம்.

தமிழ் மறையாம் திருக்குறளில் இவர் உள்ளம் திளைத் திருந்த இயல்பை இரட்சணிய யாத்திரிகத்தில் பல இடங்

களில் காணலாம். அன்பின் திறத்தைத் தெளிவாக்க நினைந்த திருவள்ளுவர், எல்லாம் எனக்கு எனக்கு என்பார் அன்பின் எதிர் நிலையினர், எல்லாம் பிறர்க்கு பிறர்க்கு என்பார் உண்மை அன்பினர். அவர் உடலையும், உடலைத் தாங்கி நிற்கும் உயிராம் என்பையும் உலகுக்கு ஈவர், என்பார்.

*"அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்*
*என்பும் உரியர் பிறர்க்கு"* (குறள் – 72)

இந்தக் குறள் கருத்தில் கருத்தூன்றிய கவிஞர் உள்ளம், இத்தகு மானுட உய்விற்குரிய அன்பிற்கு எடுத்துக்காட்டாய் அன்றும் இன்றும் என்றும் திகழும் ஒருவர் இயேசு பெருமானே என உணர்கிறது.

*"அன்பிலர் தமக்குரியர் அன்புடையர் ஆக்கை*
*என்பும் உரியார் பிறருக்கு என்றும் உரை எம்மான்*
*தன்புடைய லாதுஎவரில் சான்றுபடு மாயின்*
*முன்புமிலை பின்புமிலை மூதுலகின் மாதோ"*

**(இ.யா. 313)**

இவ்வாறு மறையிரண்டிலும் இவர் உள்ளம் ஈடுபட்டிருந்த பாங்கு நமக்குப் புலப்படுகிறது.

'பக்திச் சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய கவிவலவனாகிய சேக்கிழார் காணுகின்ற காட்சிகளிலெல்லாம், எடுத்துரைக்கின்ற உவமைகளிலெல்லாம் சிவபெருமானையும் அவன் திருக்கோலத்தினையும் கண்டுரைக்கக் காணலாம். அப்படியே கம்பர் பெருமானும் காற்றையும் கதிரையும் நீரையும் நிலத்தையும் காணும் போதெல்லாம் கடவுள் காட்சியைக் கண்டுரைக்கின்றார். இத்தகு உரைகளில் அச் சான்றோர்தம் உள்ளங்களை உணர்வதுபோல, நம் கவிஞர் உள்ளத்தையும் இரட்சணிய யாத்திரிகக் காப்பியத்தில் அவர் படைக்கும் காட்சிகள் வழி நன்கு கண்டுணரமுடிகிறது. சிலுவைப் பாடுகளில் இயேசு பெருமான் வருந்துவதற்கு முன் "கெதுசேம்" சோலைக்குள் தம் அடியாரோடு செல்கின்றார். அப்போது அங்கு மலர்ந்து தேன் பிலிற்றும் நீலமலர்க் காட்சி அவர் இனி உறப்போகும் துயரத்தை நினைந்து கண்ணீர் ததும்பி கலங்கியனவாக அன்பின் வழிபட்ட கவிஞர் அகக்கண்ணுக்குத் தோன்றுகின்றது.

*"செழுமலர்ச் சோலை ஓங்கும்*
*சினை தொறும் நிறையப் பூத்த*
*கொழுமுகை அவிழ்ந்து செந்தேன்*
*குளிர்நறுந் துளிர்வார் காட்சி*
*அழகிய மணவா ளன்தன்*
*அகத்துவந் தடையும் ஆன்மக்*
*கழிதுயர்க்கு இரங்கிச் சிந்தும்*
*கண்ணின்நீர்த் தாரை போலும்"*

**(இ.யா. 304)**

'இவ்வாறு இறைமகனார் எய்தப் போகும் இன்னல் அறிந்துதானோ பறவைகளெல்லாம் வாய்மூடிக் கொண்டன! தழை குழைந்து கிளைகளும் சோர்ந்து போயின!' என்று கவிஞர் உள்ளம் சொல்லொணாத்துயரில் தோய்ந்து, குழைந்து, சோர்ந்து போய்விடக் காண்கிறோம்.

*"பொழிலுறு பறவை யாவும்*
*புண்ணிய மூர்த்தி வந்து*
*கழிதுயர் அடைவர் என்று*
*கருதின கொல் லோ? கங்குல்*
*வழிவரும் இயற்கை தானோ*
*வாய்விடாது ஒழிந்த! வண்பூந்*
*தழை யெலாம் குழைந்து சாம்பித்*
*தருக்களும் சடைத்த மாதோ."* **(இ.யா. 305)**

கிறித்தியான் துன்ப மலைக்கு அருகே சோலை ஒன்றைக் காண்கின்றான். அங்கே, வேங்கை, கோங்கு, செண்பகம் முதலிய நன்மரங்களின் மலர்பல பற்பல வண்ணங்களில் தோன்றி மணங்கமழ்கின்றன. இந்த வண்ணங்களும் மணங் களும் பசிய மரங்களின் அகத்தே பல்லாண்டுகள் நினைந்த நினைவுகளின் முகிழ்ப்புகள். அவை போலவே அடியவர்கள் உள்ளத்தே ஆண்டாண்டாய் ஆண்டவனுக்காக அமைந் திருந்த அன்பு, புறத்தே பற்பல தொண்டுகளாய்த் தோன்றி இறைவனின் புகழ் மணம் பரப்புகின்ற நற்காட்சியாக முகிழ்க்கின்றதாக நம் கவிஞர் காண்கிறார்.

*"புண்ணி யன்திரு வடிமலர்க்கு அன்புசெய் புனிதர்*
*உண்ணி கழந்த மெய்ப் பத்தியின் ஒள்ளிய செயல்போல்*
*வண்ண வான்தருக் குலமலர் நறுமணம் மலிந்து*
*கண்ண கன்புவி முழுவதும் நறுங்கடி கமழும்"*

**(இ.யா. 230)**

இரவுப் பொழுது பற்றிய புனைந்துரையில் கம்பன் காளிதாசன் முதலான மகாகவிகளைப் போலவே, தம் உள்ளத்து உணர்வுகளையெல்லாம் கிருஷ்ணபிள்ளையும் பெய்து வைக்கின்றார். 'பஞ்ச பாதித் திரள் படர்ந்தது போல மேலும் கீழும் எங்கும் இருள் செறிந்தது' என்கின்றார். **(இ.யா. 271).**

பேய்க்கணத் தலைவனாகிய அழும்பன் ஆங்காங்கே விரித்துவைத்த வலைபோல இருட்கூட்டம் ஆங்காங்கே திட்டுத் திட்டாய்த் திரண்டன என்கிறார். **(இ.யா. 272).**

இருண்ட சோலைகள் போல நடித்துத் திரண்ட இருட்குழாம் வஞ்சக நெஞ்சமுடைய கயவர்தம் உள்ளத்தையும் நரக பாதாளத்தையும் ஒத்தது என்கிறார் **(இ.யா. 273).**

இத்தகு இருட்செறிவுக்கு இடையிலே விண்மீன்கள் தோன்றுகின்றன. அக்காட்சி கொடியவர்கள் செய்யும் கேடுகளுக்கு இடையிலும் துன்பம் பல நேரும்போது இறையை நினைந்து கைகூப்பித் தொழுவோர்க்கும் இறையருள் சுரப்பது போலக் கவிஞர்க்குப் புலப்படுகிறது.

*"கெடுக்குநர் அடர்ந்துபல் கேடு சூழினும்*
*நடுக்குறு நோய்பல நலியு மேனும்கை*
*எடுக்குநர்க்கு இறையருள் இலங்குமாறு போல்*
*உடுக்கணம் விளங்கின உம்பர் எங்குமே"*

**(இ.யா. 274)**

அழும்பன் தோற்றுவிக்கின்ற ஆசை, ஆவணம், அவநம்பிக்கைகளாகிய சோதனைகளினின்று மீண்டு வெற்றி பெறுகின்ற மறைவாணனை வியந்து விண்ணகத் தூதர்கள் அவன்மேல் மலர்மாரி பொழிந்தது போலக் கவிஞர் உள்ளம் இரவு வானத்தில் எழுகின்ற விண்மீன்களைக் காண்கின்றது.

*"சோதனைக்கு இடைந்திடா சூர சேனன்மெய்*
*வேதியன் எனநனி வியந்து மேம்படு*
*தூதர்தூ வியமலர்த் தொகுதி போலுமால்*
*மீதுறந் திகழ்ந்திடை மிளிருந் தாரகை"* **(இ.யா. 275)**

இவ்வாறு இயேசு பெருமான்பால் பெரிதும் ஈடுபாடு கொண்ட கிறித்துவக் கம்பர் கிருஷ்ணபிள்ளையின் உள்ளம் காவியப் பொருளிலே, மேற்கோள்களிலே, உவமைக் காட்சிகளிலே சிறந்து அமைந்து விளங்கக் காணலாம்.

# 13. திருவுறப் பயந்தனள் திறங்கொள் கோசலை

இன்பத்தைக் குறியாக உடையது உயிர் வாழ்வு. தத்தம் பொறிபுல வளர்ச்சிக்கும் மலர்ச்சிக்கும் ஏற்ப உயிர்கள் இன்பம் உறுகின்றன எனினும், அவற்றின் இன்பங்கள் அவ்வவற்றின் பொறி புல அளவுக்கும் ஆற்றலுக்கும் ஏற்பக் கட்டுண்டுள்ளன. ஆனால் மானுடம் பிறவுயிர்களினின்றும் இவ்வகையில் இயல்பாகவே ஒருபடி உயர்ந்துள்ளது.

மானுட இன்பமும் பொறிபுல திட்பநுட்பங்களுக்கு ஏற்ப அமைவதே ஆயினும், பிற உயிரினும் அரியதொரு கருவியாம் மனம் என்னும் ஒன்றை இம்மானுடம் பெற்று இருத்தலால், அப்பொறி புலன்களைக் கடந்தும் இன்புறவல்ல ஆற்றல் உடையதாக அமைந்துள்ளது. மனப் பண்பாட்டிற்கு ஏற்பவே மானுடத்தின் இன்பம் அமைகிறது.

மனம் பண்படுவதற்கு இல்லறவாழ்வு ஓர் இயல்பான நெறியாகும். தன்னலமே, தன்னின்பமே இயல்பாகக் கொண்டு வளரும் மனிதமனம் காதல் துணையாலும் அதன்வழிக் கனிந்த குழந்தையாலும் பண்பட்டு, பரந்த எல்லை உடையதாக மலர்கிறது. அந்த அன்புமலர்ச்சியே அருள் மணம் கமழ்ந்து இன்பத்தேன் பிளிற்றவல்லது. இதனால்தான் திருவள்ளுவர் அன்புடைமையை இல்வாழ்க்கை, வாழ்க்கைத் துணை நலம், மக்கட்பேறு என்னும் அதிகாரங்களை அடுத்து அமைத்துள்ளார்.

குழந்தையன்பு மானுட இன்பத்திற்குத் தடையாகும் அனைத்துச் செருக்கையும் (அகங்கார மமகாரங்கள்) அடியோடு அழிக்க வல்லதாகும். கல்விச் செருக்கு, கலைச் செருக்கு, பொருள் செருக்கு, புகழ்ச் செருக்கு இவை யெல்லாம்,

*"இட்டும் தொட்டும் கவ்வியும் துழந்தும்*
*நெய்யுடை அடிசில் மெய்பட விதிர்க்கும்"*

மயக்குறு மக்கள்முன் முனைமழுங்கிப் போகின்றன. அடித்து இன்புற்ற நெஞ்சம் குழந்தையின் அடிக்கு மகிழ் கிறது. கொடுத்துக் கொடுத்து இன்புற்ற மனம் குழந்தையிடம் கேட்டுக்கேட்டுப் பெறுதலில் இன்பம் காண்கிறது. தான்

பேசுவதைப் பிறர் கேட்பதில் இன்பம் கொண்ட உள்ளம், குழந்தை பேசப் பேசக் கேட்டுக் கேட்டு இன்புறுகின்றது. பொருள் ஒவ்வொன்றையும் சிந்தித்து அதில் இன்பங்கண்ட சிந்தை, பொருளற்ற மழலைச் சொற்களைக் கேட்பதில் இன்பமடைகிறது.

கிருஷ்ணாவதாரமும், இராமாவதாரமும் இந்த உண்மையை, வாழ்க்கைத் தத்துவத்தை உலகிற்கு உணர்த்தத் தோன்றியனவாகும்.

குழந்தையைப் பெறுதல் இன்பமென்றால் அதனை வளர்த்தல் பேரின்பமாகும். பெற்ற பாசத்தினும் பெரும் பாசம் வளர்த்த பாசம். அது சிறந்தது என்பதை உலகம் நன்கு அறியும். பெற்ற தாயாகிய நற்றாயினும், வளர்ப்புத் தாயாகிய செவிலித்தாய் தன் வளர்ப்பு மகளைக் காணாமல் தவித்த அன்புத் தவிப்பினை, அகத்திணை இலக்கியங்கள் அகம் நெகிழப் பாடும்.

கண்ணனைத் தேவகி பெற்றாள்; இன்பம் உற்றாள். ஆனால் சில வினாடிகள்கூட அக்கண்ணக் குழந்தையைக் கையில் ஏந்தி மகிழும், பாலூட்டிச் சீராட்டி மகிழும் பேரின்பம் பெற்றிலள் அவள். பிறந்த அப்போதே, அந்த இரவுப் போதிலேயே கண்ணன் யசோதையின் மகனாக ஆயர்பாடிக்கு எடுத்துச் செல்லப் பெறுகிறான். ஒருத்தி மகனாய்ப் பிறந்து ஓரிரவில் ஒருத்தி மகனாய் ஒளிந்து வளருகிறான். வளர்க்கும் இன்பம், மழலைப் பேச்சும் குதலை மொழியும் கேட்கும் பேறு யசோதைக்கே வாய்க்கிறது. குழந்தைக் குறும்பும், சிறுவன் செயலும் காணும் காட்சிப்பேறு ஆயர்பாடியில் வாழும் அந்த ஆய்ச்சிக்கே வாய்க்கிறது.

அந்த ஆயர்பாடி ஆய்ச்சி பெற்ற இன்பத்தை, கண்ணன் பிறப்பால் வளர்ப்பால் பெற்ற இன்பத்தைப் பெரியாழ்வார் காப்பு, அச்சமுறுத்தல், செங்கீரை, தால், அமுதூட்டடல், சப்பாணி, அம்புலி, பூச்சூட்டல் எனப் பல்வேறு அமைப்பில் பாடித் துய்த்து நம்மையும் அனுபவவிக்கச் செய்கிறார்.

குலசேகர ஆழ்வார் நெஞ்சோ இத்தகு வளர்ப்பு இன்பம் எதுவும் பெறாது வருந்தும் தேவகி நெஞ்ச நீர்மையைப் பெற்றுப் புலம்புகிறது.

'கண்ணா! ஆலைக்குத் தேர்ந்தெடுக்கும் இனிய நீண்ட முற்றிய நற்கரும்பு போல் குழந்தைகளுக்குள் பேரின்பம் நல்கும் பெறற்கரிய குழந்தையாகிய உன்னை, "கண்ணா! கார் நிறவண்ணா! களிறே! ஏலவார் குழல் என்மகனே!" என்றெல்லாம் தாலாட்டிப் பாடி மகிழும் பேறு பெற்றிடும் புண்ணியம் செய்தறியாத துயரில் கடையாய தாய் ஆனேனே!"

"மையெழுதிய கமலக்கண் இமையை மேலே உயர்த்தி, செந்தாமரை அடிகளைப் புறத்தே பொலியுமாறு கால்களை முடக்கி, சிறு கருமேகக் குழவி தவழ்வது போலச் செஞ்சிறு விரல் ஐந்தும் பரப்பி, அங்கைகள் இரண்டும் ஊன்றித் தவழும் காட்சியைக் காணப் பெற்றிலேன். ஓ கேசவா! பெண்ணாக ஏன் பிறந்தேன் யான்?"

"உறவும், அன்பும் ஒப்ப உடைய ஆயமகளிர் அனைவரும் தத்தம் தொடையின்மேல் உன்னை எடுத்து இருத்திக் கொண்டு, 'என் அப்பா! எங்கள் குலம் விளங்க வாய்த்த பெருஞ்சுடரே! அழகுமிகு மேகங்களின் குளிர்ச்சியையும், எழிலையும் கவர்ந்து திகழும் கண்ணா! உன் அப்பா யார்? எங்கே காட்டு பார்க்கலாம்?" என்று கேட்டபோது-கேட்டபோதெல்லாம், நின் செவ்விய சுட்டு விரல்களினாலும், கரிய கடைக் கண்ணினாலும் சுட்டிக்காட்டும் பேற்றினை நந்தகோபன் பெற்றான். (அதனைக் கண்டு யசோதை பூரித்துப் போனாள்) அய்யோ! நம் தலைவன் வாசுதேவன் அதனைப் பெற்றிலனே!"

'நில மருவும் பொலிவோடு கூடிய நின் நெற்றியில் நெற்றிச்சுட்டி அசைந்தாட நீ யசோதைக்கு முத்தந் தருவாய்; நந்தகோபாலன் சீற்றத்தில் எப்படித் தோன்றுவான் என்று நடித்துக் காட்டி அவளை மகிழ்விப்பாய். இவற்றையெல்லாம் யசோதை பெறும் பேறு பெற்றாள். அந்த புண்ணியம் ஒன்றும் யான் செய்திலனே.'

*"மருவி நின்திரு நெற்றியில் சுட்டி*
*அசைதர மணி வாயிடை முத்தம்*
*தருத லும்உன்றன் தாதையைப் போலும்*
*வடிவு கண்டுகொண் டுள்ள முள் குளிர*
*வீரலைச் செஞ்சிறு வாயிடைச் சேர்ந்து*
*வெகுளி யாய்நின்று ரைக்குமவ் வுரையும்*
*திருவி லேனொன்றும் பெற்றிலேன் எல்லாம்*
*தெய்வ நங்கை யசோதை பெற்றாளே"*

**(நா.தி.பி.-பெ.தி.712)**

'சின்னஞ்சிறு கைமுழுதினையும் பெத்த பெரிய தடாவின் அடிவரை இட்டுத் துழாவி வெண்ணெய் திருடும் மொட்டுப் போன்ற தாமரைச் சிறுகையும், அழகான தாம்புக் கயிற்றால் யசோதை அடிப்பது போல் அடிக்க ஓங்கும் போது அஞ்சுவது போல் அஞ்சும் எளிமையும், வெண்தயிர் தோய்ந்து திகழும் செவ்விய இதழ்களும், அழுகையும் அஞ்சி நோக்கும் அச்சப் பார்வையும், அழகான வாயினை தெளித்துத் தேம்பும் நின் தேம்பல் சீர்மையும், யசோதைக்குப் பணிவதுபோல் தொழும் நின் தொழுகையும் கண்ட அசோதை எல்லையிலாப் பேரின்பத்தின் எல்லையைக் கண்டவள் ஆவாள்.'

*முழுதும் வெண்ணை யளந்து தொட்டுண்ணும்*
*முகிழி ளஞ்சிறுத் தாமரைக்கையும்*
*எழில்கொள் தாம்புகொண் டடிப்பதற் கெள்கும்*
*நிலையும் வெண்தயிர் தோய்ந்த செவ் வாயும்*
*அழுகை யுமஞ்சி நோக்குமந் நோக்கும்*
*அணிகொள் செஞ்சிறு வாய்நெளிப் பதுவும்*
*தொழுகை யுமிவை கண்ட வசோதை*
*தொல்லையின் பத்திறுதி கண்டாளே.*

**(நா.தி.பி. - பெ.தி. 715)**

இப்படி இப்படி யெல்லாம் பலவாறு கண்ணனை வளர்க்கப் பெற்ற யசோதையின் நெஞ்சப் பெருமிதத்தை ஆழ்வார் எடுத்தியம்புகின்றார். கண்ண அவதாரத்தில் திருமாலைப் பெறும்பேறு ஒருத்திக்கு வாய்த்தது; வளர்க்கும் பேறு இன்னொருத்திக்கு வாய்த்தது.

பெறற்கரிய இவ்விரு பெரும்பேறும் இராமாவதாரத்தில் வாய்க்கப் பெற்றாள் கோசலை.

கோசலை இவ்வாறு பெற்று வளர்க்கும் பேறு பெற்றதால், 'மன்னுபுகழ் கோசலை தன் மணிவயிறு வாய்த்தவனே', 'கொங்குமலி கருங்குழலாள் கோசலை தன் குல மதலாய்', 'புகழ்ச் சனகன் திருமருகா! தாசரதீ!' 'தயரதன்

தன் குலமதலாய்!' எனப் பெற்று வளர்த்துத் தம் குடி விளங்கும் சிறப்புத் தோன்ற தாலாட்டப் பெறுகின்றான் காகுத்தன்.

இத்தகு ஆழ்வார் திருவுள்ளக் கிடக்கையில் ஆழ்ந்து தோய்ந்தவர் மகாகவி கம்பர். கண்ணன் பிறப்பில் தனித்தனியாகத் தேவகியும் யசோதையும் பெற்ற, வளர்த்த சீர் இரண்டினையும் இராமவதாரத்தில் ஒரு சேரப் பெற்று மகிழும் பேறு வாய்க்கப் பெற்றவள் கோசலை என்று அவர் உள்ளம் உணர்கிறது. 'வளர்க்கும் திருவொன்றும் யான் பெற்றிலனே!' என்று தேவகி ஏக்கப் பெருமூச்சாக எழும் குலசேகரர் தொடர், கல்வியிற் சிறந்த கம்பர் நெஞ்சத்தில் ஆழப் பதிந்து விடுகிறது. தம் காப்பியத்தில் இடம்பெறும் கோசலா தேவி 'திருமாலைப் பெற்ற திருவும் பெற்றாள்; வளர்க்கும் திறனும் வாய்க்கப் பெற்றாள்' எனப் பாடுகிறார் கம்பர்.

*"ஒருபகல் உலகெலாம் உதரத் துட்பொதிந்(து)*
*அருமறைக்(கு) உணர்வரும் அவரை அஞ்சனக்*
*கருமுகில் கொழுந்தெழில் காட்டும் சோதியைத்*
*திருவுறப் பயந்தனள் திறங்கொள் கோசலை"*

# 14. மானிடவர்க்கு என்று பேச்சுப்படில் வாழகில்லேன்

புல் பூண்டுகள் முளைக்கின்றன; அழிகின்றன. மரம் செடி கொடிகள் தோன்றுகின்றன; மறைகின்றன. நாய், பூனை, நரி பிறக்கின்றன; சாகின்றன. அந்த வகையைச் சேர்ந்தவன் தானா மனிதன்?

பிற உயிர்கள் போல உண்பதும் உறங்குவதும் ஒழிவதுந்தான் மானிடத்தின் குறிக்கோளா? அப்படியானால் 'நான் யார், என் உள்ளமார், என் ஞானங்கள் யார்?' என்ற இந்தச் சிந்தனைகள் மானிட இனத்திற்குத் தோன்றியிருக்க வேண்டுவதில்லையே? கூரத்தாழ்வான் கண்களை இழந்ததும், நாவுக்கரசர் நீற்றறையில் துன்புற்றதும், புத்தபிரான் பட்டினி கிடந்ததும், இயேசு நாதர் சிலுவை சுமந்ததும், முகமது நபி கல்லடி பட்டதும் வயிற்றுக்கா? அல்லது 'வளமான' இந்த விலங்கு வாழ்வுக்கா? 'உண்டு உறங்கி இடர் செய்து செத்திடும் கலக' விலங்கு வாழ்வுக்கும் அப்பால் அணுவுக்கு அணுவாய், அண்டத்தை விழுங்கும் அகண்டமாய் ஆழ்ந்தகன்ற நுண்ணிய அப்பரம்பொருளை அடைவதற்காக அல்லவா? அந்த அருட்பெரும் பொருளை அடைவதற்குக் கண்டதே காட்சி - கொண்டதே கோலம் என்ற இந்த மானுடப் பற்றல்லவா தடையாக இருக்கிறது. இந்தத் தடையிலிருந்து மானுட ஆசாபாசங்களிலிருந்து விடுதலை பெறல் ஒன்று. யாருக்காக அல்லது எதற்காக இந்த அரிய பிறவி எடுத்தோமோ அவரிடம் அல்லது அதனிடம் போய்ச் சேர்ந்து விடுதல் பிறிதொன்று. இவை இரண்டே இங்கு இப்போது செய்ய வேண்டுவன ஆகும்.

இந்த உலகப் பற்றை விடலும், அவனருளைப் பற்றுதலுமாகிய இந்த இரண்டு நிலைகளும் உண்மையில் சங்கமமாகும் இடம் ஒன்றே. 'அற்றது பற்றெனில் உற்றது வீடு.' இந்த ஒரு நிலையை, இரு நிலைபோல் தோன்றும்

பெருநிலையை, பேரின்ப நிலையை மானுடம் பெறுவதற்காகத் தன்மையிலும், முன்னிலையிலும், படர்க்கையிலும் ஆழ்வார்களும் நாயன்மார்களும் பாடி மானுடத்துக்கு வழிகாட்டி அருளினர்.

மனம் ஏதேனும் ஒன்றை எப்போதும் எண்ணிக் கொண்டே இருக்கும் இயல்புடையது. மறப்பு என்பது வேறொன்றைப் பெரிதும் நினைப்பதே ஆகும். பயிர் செய்யா நிலத்தில் களைகள் மண்டி விடுவது போல ஆண்டவனை நினையாத போது அகிலம் நெஞ்சில் இடம் கொண்டு விடுகிறது. அப்படிப்பட்டது இம்மானுட வாழ்வு. இந்தப் பொதுநெறி கடந்து, இத்தகு மானுட இயல்பைக் கடந்து நிற்கும் போதே இறைவன் நினைவில் இடங் கொள்கின்றான். எல்லாம் இனிதாக இலங்குகின்றது.

*கண்ணாளன் கண்ணமங்கை காராளன்*
*கழல்சூடி அவனை உள்ளத்து*
*எண்ணாத மானுடத்தை எண்ணாத*
*போது எல்லாம் இனிய ஆறே!*

'கண்ணா! காரணா! என் தவம் பெரிது. அது என்ன தெரியுமா? உனக்கே பணி செய்து இருப்பதே அது. அப்படிப் பணிசெய்யும் பேறு பெற்ற நான் நின் மாளிகையைவிட்டுப் பெருமிதத்தோடு, நின் முன் நிற்பதை விடுத்து, இன்னொருவன் வாயிற்படியிலே பணிந்த தலையனாய், கேளாமலேயே அருளும் நன் வள்ளலுணர்வு இருக்க இன்னொருவன் முன் சென்று நின்று கேட்குமாறு என்னை நீ வைத்திருப்பது எனக்கு நன்றன்று; உனக்குக் கொஞ்சமும் பெருமை தருவது அன்று. அவ்வளவுதான் சொல்லுவேன். ஆமாம்!'

*உனக்குப்பணி செய்திருக்கும் தவமுடையேன்*
*இனிப்போய் ஒருவன்*
*தனக்குப் பணிந்து கடைத்தலை நிற்கையின்*
*சாயை அழிவு கண்டாய்*

**(பெரியாழ்வார் திருமொழி)**

"திருவேங்கடவா! இந்த உலகம் எப்படி எப்படி எல்லாம் பற்றிக்கொண்டு துன்புறுத்துகின்றது, என்னென்னவோ

வடிவில் பெயரில் இந்த உலகம் என்னைத் துயர் உறுத்துகின்றது. அப்பப்பா! வழிதப்பித் தடுமாறும் நான் உன்னைக் காணவேண்டும் என்ற ஆசையினால் எவ்வளவு நீண்ட ஆன்மப்பயணம் செய்துள்ளேன் தெரியுமா?"

*தாயே தந்தை என்றும்*
*தாரமே கிளை மக்கள் என்றும்*
*நோயே பட்டொழிந்தேன்*
*நுன்னைக் காண்பதோர் ஆசையிலே*

*.................................*
*நாயேன் வந்தடைந்தேன்.*

**(பெரிய திருமொழி)**

"போதும் அப்பா! நிலையில்லாத இந்த மானிட வண்டியில் செய்த பயணம் போதும். இதிலிருந்து என்னை இறக்கி நின் நிலைத்த இன்பமான ஒன்றுக்கு உரியவனாக என்னை ஆக்கியருள்புரி. அத்தகு தலைவன் நீயே அன்றோ?"

"ஓ புலவர்களே! உங்கள் நெஞ்சில் ஓடும் எண்ணங்கள் எனக்கு விளங்குகின்றன. ஒன்று அன்றாட வயிற்றுப் பாட்டை நீங்கள் நினைக்கிறீர்கள். உங்களை நோகேன். உங்கள் வறுமை அத்தகையது. போகட்டும், அந்த வயிற்றுப் போராட்டத்துக் காக வாழ்வைப் பாழாக்கிக் கொள்ளவேண்டா! உங்களை மற்றொருவனுக்கு அடிமை யாக்கிக் கொள்ள வேண்டா. ஒரு வாய் தந்து இரு கைகளும் அளித்த ஆண்டவன் கருத்து உங்களுக்கு விளங்கவில்லையா? இரு கையாலும் உழைத்தால் ஒரு வாயை நிரப்ப இயலாதா?

இன்னொன்று. உங்கள் நெஞ்சில் நிலவும் இன்னொரு கருத்து இதுதான். 'மானுடத்தைப் பாடாதே' என்றவரை சரியே! 'திருவேங்கடவனையே பாடு' என்று இவர் எப்படிச் சொல்லுவது. நான் சிவனைப் பாடுவேன்; சக்தியைப் பாடுவேன்; யரோ, ஒரு கடவுளைப் பாடுவேன். இவர் யார் திருவேங்கடமுடையானையே பாடு என்று சொல்ல?" அப்படி நீங்கள் நினைப்பீர்களே யானால் அதுவும் சரியே. நீங்கள் உங்கள் விருப்பத்திற்குரிய கடவுளரைப் பாடிப் பரவுங்கள். அது போதும். ஆனால் நான் என்னவோ என்

கொள்கையில் தாழ்ந்துவந்து, விட்டுக் கொடுத்து, உங்களோடு ஒருவாறு சந்து செய்து கொண்டேன் என்று மட்டும் எண்ணிவிட வேண்டாம். சத்திய வாழ்வில் சந்து செய்யவோ, சரிக்கட்டிக் கொள்ளவோ துளியும் இடமில்லை. பின்னை ஏன் அப்படி எந்தக் கடவுளை வேண்டுமானாலும் பாடுங்கள் என்று கூறினேன் என்ற ஐயம் உங்களுக்குள் எழுகிறதா? அதற்கு விடை இதுதான். எனக்கு நன்றாகத் தெரிகிறது. எந்த இடத்திலும் சரி, எந்தக் காலத்திலும் சரி ஒருவன் தன் வாழ்வை எக்கடவுளுக்கு அளித்தாலும் அது என் தலைவனாகிய திருவேங்கடத் தானையே, திருமாலையே இறுதியில் வந்தடையும் என்று எனக்கு நன்றாகத் தெரிகிறது.


*வம்மின் புலவர்! நும்மெய் வருத்திக்*
*கைசெய்து உய்ம்மினோ;*
*இம்மண் உலகினில் செல்வர் இப்*
*போது இல்லை நோக்கினோம்;*
*நும்இன் கவி கொண்டு நும்நும்*
*இட்டா தெய்வம் ஏத்தினால்*
*செம்மின் சுடர்முடி என் திரு*
*மாலுக்குச் சேருமே!*

ஆழ்வார்கள் எல்லாம் அண்ணனாய் அன்பனாய் நின்று வழி காட்டினர். ஆண்டாள் நாச்சியாரோ அன்னையாய் இருந்து இம்மானுட ஆன்மாக்களை வழிப்படுத்துகிறார். அவர்கள் மெல்லச் சொன்ன உண்மையை, 'மானுடத்தைக் கடந்து மாதவனை அடையுங்கள்' என்ற உண்மையை, அழுத்தம் திருத்தமாக வைராக்கிய சித்தத்துடன் பேசுகிறார். 'இந்த ஆன்மா உலகுக்காக' என்ற நீண்ட விவாதம் நிகழ்த்தி இறுதியில் முடிவுக்கு வரும் வரையில், ஆழ்வார் உயிரோ அன்றி வேறொரு உயிரோ நிற்கும் தன்மையுடையது. ஆனால் ஆண்டாள் உயிரோ, அந்தப் பேச்சு எடுத்தவுடனேயே போய்விடும். அப்படிப்பட்ட ஒரு நெறி-கற்பு நெறி-கடவுள் வாழ்வில் வேண்டும். அதுவே ஆண்டாள் ஆன்மாக்களுக்குச் செய்யும் புருஷாகாரம்.

*'மானிடவர்க்கு என்று பேச்சுப்படில் வாழகில்லேன்.'*

○ ○ ○

# வாழ்வும் வழியும்



பொன். சௌரிராஜன்